# மன்னா

# மன்னார் மறைமாவட்டத்தில்

# புனித யோசேவாசின் அற்புத சிலுவை






குருநாகல் மறைமாவட்டத்தின் கல்கமுவ பங்கிலுள்ள மகா கல்கமுவ என்னும் இடத்தில் உள்ள புனித யோசேவாஸ் அடிகளாரின் அற்புத சிலுவை 23.10.2018 செவ்வாய்க்கிழமை அன்று மன்னார் மறைமாவட்டத்திற்கு கொண்டுவரப்பட்டது. யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜோசப் ஜெபரெட்ணம் அடிகளார் யாழ், மன்னார் மறைமாவட்டங்களின் அருட்பணி எல்லைப்பகுதியின் மையப்பகுதியான மன்னார், சங்குப்பிட்டி பிரதான பாதையில் வைத்து மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களிடம் புனித வாஸ் அடிகளாரின் அற்புத சிலுவையைக் கையளித்தார். இத் திருநிகழ்வுக்கான ஆரம்ப ஆயத்தங்கள் அனைத்தையும் பங்குத்தந்தை அருட்பணி. எ.டெனி கலிஸ்ரஸ் அடிகளார் மேற்கொண்டிருந்தார். இவ்வேளையில் மடு மறைக்கோட்ட முதல்வரும் ஆட்காட்டிவெளிப் பங்குத்தந்தையுமாகிய அருட்பணி. ச. சத்தியறாஜ், மாந்தைப் பங்குத்தந்தை அருட்பணி. ச.மரியதாஸ் லியோன், பறப்பாங்கண்டல் பங்குத்தந்தை அருட்பணி. றஜனிகாந், விடத்தல்தீவுப் பங்குத்தந்தை அருட்பணி. அருட்குமரன், மறைமாவட்ட புனித யோசேவாஸ் பணிக்குழு இயக்குனர் அருட்பணி. க.அருட்பிரகாசம் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்தத் திருப்பயணத்தில் கல்கமுவ பங்குத்தந்தை அருட்பணி. ஜானக, மற்றும் அருட்பணி. சுனில் கல்கமுவ பங்கைச் சேர்ந்த ஆண், பெண் பொது நிலையினர் என சில பிரதிநிதிகளும் வருகை தந்திருந்தனர். அவ்விடத்திலிருந்து தேவன்பிட்டிப் பங்கின் சிற்றாலயமாகத் திகழும் புனித யோசேவாஸ் சிற்றாலயத்திற்கு மோட்டார் பவனியோடும் பாடசாலை மாணவர்களின் மேலை நாட்டு இசைக் கருவிகளின் மகிழ்வொலியோடும் புனித யோசேவாஸின் அற்புத சிலுவை எடுத்து வரப்பட்டு அங்கு ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலி இடம் பெற்றது.●



## அரச கிறிஸ்து பிறப்பு விழாவிற்கான முன்னாயத்தக் கூட்டம்




இலங்கை அரசின் கிறிஸ்தவ சமய பணிகள் திணைக்களத்தின் ஊடாக இலங்கை அரசு வருடந்தோறும் கிறிஸ்து பிறப்புவிழாவை நினைவுகூர்ந்து மாவட்டங்களில் நடாத்தி வரும் அரச கிறிஸ்து பிறப்பு விழா கலை நிகழ்வுகள் இவ்வாண்டு மன்னார் மறைமாவட்டத்தில் மார்கழி மாதம் 16ஆம் திகதி மன்னார் நகர சபையின் விளையாட்டுத் திடலில் மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

➡ 15

## மன்னார் மறைசாட்சியர்களின் புனிதர் நிலைக்கான முயற்சியும், மன்னார் ஆயரின் உரோமாபுரிப் பயணமும்



கடந்த 27.09.2018 அன்று மாலை அதிவணக்கத்திற்குரிய மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ அடிகளார் ரோமாபுரியை வந்தடைந்தார். மறுநாள் காலை மன்னார் மறை சாட்சிகளை புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான முன்னெடுப்புக்களை செய்து வருகின்ற அருட்பணி. தாமஸ் அடிகளார் அவர்களை சந்தித்துள்ளார்.

அவரும் ஆயர் அவர்களும் வத்திக்கானிலுள்ள கர்தினாலுடன் மன்னார் மறைசாட்சியர் தொடர்பாக கலந்துரையாடினர். அத்தோடு அருட்பணி. தாமஸ் அடிகளார், மன்னார் மறைசாட்சியர் என்ற தலைப்பில் 8 பக்கங்களைக் கொண்ட ஒரு ஆய்வுக் கட்டுரையையும் சமர்ப்பித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட ஆயர் அவர்கள் மன்னார் மறைசாட்சிகளை இலங்கை முழுவதும் நினைவு கூரவேண்டிய ஒரு நாளைப் பிரகடனப்படுத்துவதற்கு ஆலோசிப்பதாகவும், அத்தோடு மன்னார் மறைசாட்சியர் பற்றிய மேலும் பல ஆவணங்களைத் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிட இருப்பதாகவும் கூறினார். அத்துடன் இக் காரணத்திற்காக மன்னார் மறைமாவட்டத்தில் நியமிக்கப்பட்ட குருக்கள் கொண்ட குழுவை மேலும் பலப்படுத்தப் போவதாகவும் தெரிவித்தார். மன்னார் மறை சாட்சிகள், புனிதர்களாக திருநிலைப் படுத்தப்படுவதற்கு தொடர்ந்து இறைவனைப் பிராத்திப்பதாகவும் தெரிவித்தார்.

➡ 15

## சிறப்பாக நடைபெற்ற சிறிய குருமடத்திருவிழா



மடுமாதா சிறியகுருமட திருவிழா 13.10.2018 அன்று புதிய இயக்குனர் தந்தை அருட்பணி. கிறிஸ்து நேசரெட்ணம் அடிகளாரின் வழிகாட்டுதலில் சிறப்பாக நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மற்றும் குருக்கள் அருட்சகோதர சகோதரிகள், குருமட மாணவர்கள், அவர்களின் பெற்றோர் உறவினர்கள், மடுமாதா சிறிய குருமட பழைய மாணவர் ஒன்றியத்தினர், நலன்விரும்பிகள் அனைவரும் இத்திருவிழா திருப்பலியிலும், கலைநிகழ்விலும், மதிய விருந்துபசாரத்திலும் கலந்து கொண்டனர். பின்னர் மடுமாதா சிறிய குருமட பழைய மாணவர் ஒன்றியக் கூட்டம் உபதலைவர் திரு. ஞானறாஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அத்தோடு மாலை விளையாட்டுக்கள் பழைய மாணவர்களாலும், குருமட மாணவர்களாலும் சிறப்பாக நடாத்தப்பட்டன.●

## மாவீரர் நாள் - கார்த்திகை 27

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைக்காக தம் இன்னுயிர்களை தியாகம் செய்த அனைத்துப் போராளிகள் மற்றும் பொதுமக்களை எம் நெஞ்சில் இருத்தி அஞ்சலி செய்வோம்.!

ஆயுதம் ஏந்திப் போராட அல்ல மாறாக எம்மைச் சூழ நிலவுகின்ற தேவைகளை அறிந்து, ஒற்றுமையுடன் செயற்பட அழைக்கின்றது இவர்களின் தியாகம் நிறைந்த வீரமரணம்.●



## நீத்தாரை நினைக்கும் காத்திகை மாதம்



காத்திகை மாதம் நீத்தாரைச் சிறப்பாக நினைவுகூர்ந்து செபிக்கும் மாதம். நமது குடும்பத்தவர்கள், உறவுகள், நண்பர்கள் மட்டுமல்ல யாரும் நினையாத ஆன்மாக்களையும் நினைந்து அவர்களுக்காகவும் சிறப்பாகச் செபிப்போம்! ●

# மன்னா

## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

## காலத்தின் தேவையறிந்து செயற்படுவோம். - நவம்பர் -

கடவுள் உலகத்தை தனது விருப்பத்திற்கமையவே படைத்தார். அவர் ஒவ்வொன்றையும் படைக்கும் போது தனது படைப்பின் முழுமையைக் கண்டு நிறைவடைந்தார். கடவுள் மனிதனை மட்டும் தனது சாயலாகவும், பாவனையாகவும், படைப்புக்களில் தலைசிறந்த படைப்பாகவும் படைத்தார். ஆனால் இன்றைய சமூகத்தில், வேலைத்தளத்தில், குடும்பத்தில், அரசியலில், மதத்தில் நடக்கின்ற நிகழ்வுகளைப் பார்க்கின்றபோது மனிதநேயம், மனிதமாண்பு, மனிதாபிமானம் அற்ற மனிதர்களையா கடவுள் தனது சாயலாகவும், பாவனையாகவும் படைத்தார்? என்ற கேள்வி எழுகின்றது. ஆகவே காலத்தின் தேவை அறிந்து வாய்ப்புக்களைப் பயன்படுத்துவோம். இறைவனின் அதி உன்னத படைப்பாக எம்மை உருவாக்குவோம். படைப்பில் இறை மனித மேன்மையை நிலை நாட்டுவோம்.

***இசை, நடனக்கல்வி***

இயல், இசை, நாடகம் இவற்றினூடாக அன்று விசுவாசம் எம் மண்ணில் பரப்பப்பட்டது. இன்று இத்துறையில் எம் பிள்ளைகளை வளர்ப்பதன் மூலமாக பெற்ற விசுவாசத்தை பாதுகாக்க முடியும். அதற்கான முயற்சியாக வட இலங்கை சங்கீதசபையின் இசை, நடன வகுப்புக்கள் கலையருவி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இச் சங்கீதசபையினால் நடாத்தப்படும் பரீட்சைக்கான 1-6 வரையிலான தரங்களுக்குரிய பாடவிதானங்களுக்கு அமைவாக வகுப்புக்கள் நடைபெறும்.

நடாத்தும் ஆசிரியர்கள் சங்கீதம் - திருமதி. ஞானம்மா.வி. (BA Music), நடனம் - செல்வி. ஆன் கிறிசோலினி.வி. (BA Dance)

***ஊடகத்துறை கல்வி.***

தற்போதைய நவீன உலகத்தில் ஊடகத்துறை பல விடயங்களில் உண்மையை உறுதிப்படுத்துவதிலும், உண்மையை பொய்யாக்குவதிலும் பெரும்பங்காற்றி வரும் வேளையில் இக்கல்வியை கற்பதன் ஊடாக எம் அறிவை வளர்த்து பொய்யிலிருந்து உண்மையை உரத்துச் சொல்வது எம் கிறிஸ்தவ விழுமியமாகும். ஆகவே இந்நவீன ஊடகத்துறைக் கல்வியை வளர்த்துக்கொள்ள கலையருவி நிலையத்தில் ஊடக கற்கைநெறி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. நடத்தும் ஆசிரியர் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. S.J. டினேஷ் கொடுதோர். இசை, நடனக்கல்வி, ஊடகத்துறைக்கான விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி. 05.12.2018

***அருங்காட்சியகம், நூலகம்.***

இலங்கை திருஅவையில் மன்னார் மறைமாவட்டத்தின் பாரம்பரிய கலை, இலக்கிய கலாசார பண்பாட்டு விழுமியங்களுக்கென்று தனிச்சிறப்பு உண்டு. ஆனால் இப்பாரம்பரிய வடிவங்கள் பல இன்று பாதுகாக்கப்படாமல் கைவிடப்பட்டுள்ளன. ஆகவே இப்பாரம்பரிய கலை, இலக்கிய பண்பாட்டு வடிவங்களை பாதுகாப்போம். அவற்றை ஆவணப்படுத்த மறைமாவட்டத்தின் கலையருவியில் (அருங்காட்சியகம், நூலகம்) ஒப்படைப்போம்.

***கலையருவி நிலையம்.***

மன்னார் மறைமாவட்டத்தின் சமூகத் தொடர்பு ஆணைக்குழு அருட்பணி மையம் ஊடகம், கலை, இலக்கியம், பண்பாடு போன்ற பல்துறைகளில் மறைமாவட்டத்தில் கவனம் செலுத்தி வருகின்றது. இந்த அருட்பணிமையம் கலையருவி என அழைக்கப்படுகின்றது. தற்போது இக்கலையருவி மன்னார் பெற்றா வீதியில் இருந்து தலைமன்னார் வீதியில் இல. 202இற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட விடயங்களில் மட்டுமல்லாது, எம்மைச் சுற்றி நடக்கின்ற சாதி, இனம், மதம், குடும்பம், அரசியல் மாற்றங்கள் மட்டில் குறிப்பாக நாம் சமூக அக்கறை உள்ளவர்களாக செயற்பட வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றேன்.

"உண்மைக்கு ஏற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகின்றார்கள். அவர்கள் செய்யும் அனைத்தையும் கடவுளோடு இணைந்து செய்கின்றார்கள் என்பது வெளியாகும்" (யோவான். 3:21)

மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை
அன்புடன் அருட்பணி. அ. லக்ஸ்றன் டி சில்வா,
மன்னா பதிப்பாசிரியர்.

## அன்புச்சகோதரர் சபையின் இலங்கைக்கான புதிய முதல்வர்



பெல்ஜியம் நாட்டின் வின்சன் டி போல் என அழைக்கப்படும் தந்தை ஜோசப் றீஸ்ற் அவர்களால் 1807இல் ஸ்தாபிக்கப்பட்டு இன்று உலகெங்கும் 28 நாடுகளில் இறைபணியாற்றிவரும் அன்புச் சகோதரர் சபையின் புதிய உலகத் தலைவரையும், அனைத்து நாடுகளின் பிராந்திய தலைவர்களையும் தெரிவு செய்யும் மேலவை உறுப்பினர்களுக்கான செயலமர்வு அண்மையில் உரோமாபுரியிலுள்ள அன்புச் சகோதரர்களின் தலைமையகத்தில் கூடியபோது அதில் இலங்கைக்கான முதல்வராக அருட்சகோதரர். கிறிஸ்துராஜன் அன்ரனி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

➡14

## பாப்பரசர் ஆறாம் பவுல், ஆயர் ஒஸ்கார் றொமேரோ புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டனர்



ஐப்பசி மாதம் 14ஆம் திகதி வத்திக்கானில் நடைபெற்ற ஆயர்களின் மாமன்ற கூட்டத்தொடரின் முடிவில் 7 அருளாளர்கள் திருத்தந்தையால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்கள்.

➡14

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

பேசாலை, மன்/சென். மேரிஸ் வித்தியாலயத்தில் இவ்வருடம் (2018) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில், வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று பாடசாலைக்கும், சமூகத்திற்கும் பெருமை சேர்த்த மாணவர்களையும், அவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பெற்றோர்



மெ. கனிமொழி துரம் 181



ட.கி. றொய்ஸ் குருஸ் 180



நி. சுபக்சிதா பெர்னாண்டோ - 177



எ. கிருஜனா குருஸ் 176



அ. ரித்திஸ் டயஸ் 175



ஜோ. விபிசன் மிராண்டா - 173



ஒ. சமிசன் பெர்னாண்டோ - 170



சி. சாருசன் 166



வி. விதுசிகன் 165



அ. பிரதிக்சனா 165



யூ. றதிஸ் மிராண்டா 163



அ. துசாரா டயஸ் 162

## மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2018

### நவம்பர்

01. அனைத்து புனிதர்களின் பெருவிழா.
02. இறந்த விசுவாசிகளின் நினைவு நாள்.
05. இறந்த ஆயர்கள், குருக்கள், துறவியர் ஆன்ம இளைப்பாற்றிக்காக புனித செபஸ்ரியார் பேராலயத்தில் கூட்டுத்திருப்பலி மாலை 5.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.
22. புனித சிசிலியா பாடகர் குழாமினர் விழா.
 கிறிஸ்து அரசர் பெருவிழா - கீரிசுட்டான்.
25. கிறிஸ்து அரசர் பெருவிழா - முருங்கன், நெடுங்கேணி, சாந்திபுரம், குருமன்காடு.
27. மாவீரர் தினம்.
28. மேதகு ஆயர் பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மன்னார் ஆயராக - நியமனம் (2011).
30. புனித அந்திரேயா திருவிழா - தோட்டவெளி.

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்

-மன்னா நிர்வாகம்-

**மன்னார் மறைமாவட்டச் செய்திகள்**

# மன்னார் மறைமாவட்ட முதியோர் தின விழா






மன்னார் மறைமாவட்டத்தின் வருடாந்த முதியோர் தின விழா 17.10.2018 புதன் கிழமை அன்று முதியோர் சங்க சமாச இயக்குனர் அருட்பணி. அல்பன் இராஜசிங்கம், தலைவர் முன்னாள் அதிபர் எஸ்.ஏ.மிராண்டா ஆகியோர்களின் ஏற்பாட்டில் தோட்டவெளி புனித வேதசாட்சிகளின் இராக்கினி ஆலய வளாகத்தில் நடைபெற்றது. 36 பங்குகளிலிருந்து 600க்கு மேற்பட்ட முதியோர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, வவுனியா கல்வியியல் கல்லூரி முன்னாள் பீடாதிபதி பேணாட், மற்றும் அருட்பணியாளர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.
- கலந்து கொண்டோரின் ஒரு பகுதியினரையும்
- முதியோர் போட்டிகளில் பங்குபற்றுவதையும்
- அவர்கள் செபத்தில் ஒன்றித்திருப்பதையும் படங்களில் காணலாம்.●

# விடத்தல்தீவுப் பங்கின்

## புனித அடைக்கல அன்னையின் விழா




விடத்தல்தீவுப் பங்கின் பாதுகாவலியாம் புனித அடைக்கல அன்னையின் பிறப்பு விழாக் கொண்டாட்டம் கடந்த 30.08.2018 அன்று மாலை 5.30 மணிக்கு விடத்தல்தீவுப் பங்கின் பங்குத்தந்தை அருட்பணி. அருட்குமரன் அடிகளாரால் கொடியேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடர்ந்து திருச்செபமாலையோடு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நவநாட்கள் நடைபெற்றன.

அன்னையின் பிறந்த நாளாகிய 08.09.2018 அன்று காலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலி மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலி முடிவடைந்ததும் கிராமத்தைச் சுற்றி அன்னையின் திருச்சுரூபம் பவனியாக எடுத்துவரப்பட்டு அன்னையின் திருச்சுரூப ஆசீரும் இடம்பெற்றது. அன்னையின் பிறந்தநாள் நினைவாக கேக் வெட்டி, பிறந்தநாள் பாடல் அன்னைக்கு பாடி மகிழ்ச்சியான முறையில் திருவிழா நடந்தேறியது.

மாலை 3.00 மணிக்கு அன்னைக்கு பிறந்த நாள் பரிசாக செபம் சொல்லப்பட்டு இனிதே திருவிழா முடிவடைந்தது.●

# மருதோட் பங்கின்

## புனித சிந்தாத்திரை மாதா ஆலயத்திருவிழா




24.09.2018 அன்று புனித சிந்தாத்திரை மாதா ஆலயத்திருவிழாத் திருப்பலியானது மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. அ. விக்ரர் சோசை அடிகளாரின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டு, அன்னையின் திருச்சுரூப பவனியும், ஆசீர்வாதமும் இடம்பெற்றன.

➡15

## புனித கார்மேல் மாதா ஆலயம்
## பறப்பாங்கண்டல்



மடு மறைக்கோட்டம் பறப்பாங்கண்டல் பங்கு புனித கார்மேல் மாதா ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி. றஜனிகாந் அடிகளார் தலைமையில் 21.10.2018 அன்று மாலை. 5.30 மணிக்கு 72 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. இவர்களை ஆயத்தப்படுத்திய அருட்சகோதரி, மறையாசிரியர்கள் சிறப்பாக பங்குத்தந்தைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.●

## புனித அந்தோனியார் ஆலயம்
## தட்சனாமருதமடு



கடந்த 21.10.2018 அன்று காலை 9.30 மணிக்கு தட்சனாமருதமடு பங்கைச் சேர்ந்த 34 பிள்ளைகளுக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி. வசந்தன் அ.ம.தி அடிகளார் தலைமையில் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது.●

# உறுதிப்பூசுதல்
## அருட்சாதனக் கொண்டாட்டங்கள்

## புனித வெற்றிநாயகி ஆலயம்
## பேசாலை



மன்னார் மறைக்கோட்டம் பேசாலைப் பங்கு புனித வெற்றி நாயகி ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி. S.K. தேவராஜா அடிகளாரின் தலைமையில் 14.10.2018 அன்று காலை. 6.30 மணிக்கு 57 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. இவர்களை ஆயத்தப்படுத்திய அருட்சகோதரி, மறையாசிரியர்கள் சிறப்பாக பங்குத்தந்தையர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.●

## புனித சூசையப்பர் ஆலயம்
## வேப்பங்குளம்



வவுனியா மறைக்கோட்டம் வேப்பங்குளப் பங்கு புனித சூசையப்பர் ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி. இராஜநாயகம் அடிகளாரின் தலைமையில் 07.10.2018 அன்று காலை. 7.00 மணிக்கு 54 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. இவர்களை ஆயத்தப்படுத்திய அருட்சகோதரி, மறையாசிரியர்கள் சிறப்பாக பங்குத்தந்தைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.●

## புனித மரியன்னை ஆலயம்
## நானாட்டான்



முருங்கன் மறைக்கோட்டம் நானாட்டான் பங்கு புனித மரியன்னை ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி. யூட் குரூஸ் அடிகளாரின் தலைமையில் 07.10.2018 அன்று மாலை. 5.30 மணிக்கு 74 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனக் கொண்டாட்டம் நடைபெற்றது. இவர்களை ஆயத்தப்படுத்திய அருட்சகோதரி, மறையாசிரியர்கள் சிறப்பாக பங்குத்தந்தைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.●

## புனித அங்காமத்து மாதா ஆலயம்
## பெரிய குஞ்சுக்குளம்



முருங்கன் மறைக்கோட்டம் பெரியகுஞ்சுக்குளம் புனித அங்காமத்து மாதா ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி. றொனிஸ் வாஸ் அடிகளார் தலைமையில் 20.10.2018 அன்று காலை. 7.00 மணிக்கு 24 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் வழங்கப்பட்டது. இவர்களை ஆயத்தப்படுத்திய அருட்சகோதரி, மறையாசிரியர்கள், பங்குத்தந்தைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.●

**மன்னார் மாவட்டச் செய்திகள்**

# முதலமைச்சர் விருது பெற்றவர்கள்



வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் வருடந்தோறும் முன்னெடுக்கப்பட்டு வரும் கலை, இலக்கிய, பண்பாட்டுத்துறைக்கு பங்காற்றி வரும் மூத்த கலைஞர்களுக்கான முதலமைச்சர் விருது வழங்கும் வைபவம் ஞாயிற்றுக் கிழமை (30.09.2018) முல்லைத்தீவு கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

**திரு லோறன்ஸ் கொன்சால் வாஸ் கூஞ்ஞு:**

மன்னார் பிராந்திய சிரேஷ்ட ஊடகவியலாளரான தலைமன்னாரைச் சேர்ந்த இவர் 30.09.2018 அன்று ஊடகக் கலைத்துறைக்கான முதலமைச்சர் விருதினை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்நேஸ்வரன் அவர்களிடமிருந்து பெற்றுள்ளார்.

**திரு. கிறிஸ்தோகு சந்தியோகு :**

மன்னாரைச் சேர்ந்த கலாபூஷணம் திரு. கிறிஸ்தோகு சந்தியோகு இதே வைபவத்தில் நடைபெற்ற மூத்த கலைஞர்களுக்கான முதலமைச்சர் விருதினை வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

# புனித சவேரியார் ஆலயம் ஆட்காட்டிவெளி




மடு மறைக்கோட்டம் ஆட்காட்டிவெளி புனித சவேரியார் ஆலயத்தில், மடு மறைக்கோட்ட முதல்வர் பங்குத்தந்தை அருட்பணி. சத்தியராஜ் அடிகளார் தலைமையில் 14.10.2018 அன்று மாலை 5.00 மணிக்கு 57 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. இவர்களை ஆயத்தப்படுத்திய அருட்சகோதரி, மறையாசிரியர்கள் பங்குத்தந்தைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.●

**உலகத் திருச்சபைச் செய்திகள்**

# மறை சாட்சியம் வழியாக இறைச் செய்திக்கு சான்று பகர்தல்

அளவற்ற இறை இரக்கத்திற்கும், முடிவற்ற மனித துன்பங்களுக்கும் இடையே அருட்பணியாளர் நிற்கின்றார், என்பதை உணர்ந்தவர் புனித ரொமேரோ. உரோம் நகரில், புதிய புனிதர் ஆஸ்கார் ரொமேரோ அவர்களின் உருவச்சிலை திறப்பு.

மனிதனுக்கான இறைவனின் செய்திக்கு சாட்சி பகர்வதே மறைசாட்சியமாகும் என்பதால் ஒவ்வொரு மனிதரும் மறைசாட்சியாக மாற தயாராக இருக்க வேண்டும் எனபதை வலியுறுத்தியவர் ஆயர் ஆஸ்கர் ரொமேரோ என்று எல் சல்வதோர் நாட்டிலிருந்து வந்திருந்த திருப்பயணிகளிடம் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். அளவற்ற இறை இரக்கத்திற்கும், முடிவற்ற மனித துன்பங்களுக்கும் இடையே அருட்பணியாளர் நிற்கின்றார் என்பதை உணர்ந்தவர் புனித ரொமேரோ என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் ஆடுகளுக்காக வாழ்வையே வழங்கும் ஆயனாக வாழ்ந்து காட்டியவர் அவர் என்றுரைத்தார்.

நம் வாழ்வில் குடியிருக்க விரும்பும் இறைவன், விடுதலையின் செய்தியை மனித குலமனைத்திற்கும் எடுத்துரைக்க ஆவல் கொள்கின்றார் எனவும், பேராயர் ஆஸ்கர் ரொமேரோவின் புனிதர் பட்ட நிகழ்வில் கலந்துகொள்ள எல் சல்வதோரிலிருந்து வந்திருந்த திருப்பயணிகளை, புனித 6ஆம் பவுல் அரங்கத்தில் சந்தித்தபோது எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாம் பாவத்திலிருந்தும், தீய எண்ணங்களிலிருந்தும், பகைமை உணர்வுகளிலிருந்தும், விடுதலை பெறுவதற்கு செபத்தின் உதவி தேவை என்றார்.



எல் சல்வதோர் நாட்டின் அண்மை வரலாற்றில் மக்கள் அனுபவித்துள்ள துன்பங்கள், பிரிவினைகள், வன்முறைகள் மற்றும் போர் குறித்தும், அதனால் மக்கள் தங்கள் உறைவிடங்களை விட்டு வெளியேறும் நிலைக்கு கட்டாயப்படுத்தப்பட்டது குறித்தும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இலத்தீன் அமெரிக்க மக்கள் அனைவருக்கும் தன் அமைதி மற்றும் ஒப்புரவின் செய்தியை இத்திருப்பயணிகள் வழியாக அனுப்ப விரும்புவதாகவும் தெரிவித்தார்.

இதற்கிடையே, உரோம் நகரின் EUR பகுதியில், புதிய புனிதர் ஆஸ்கர் ரொமேரோ அவர்களின் உருவச்சிலை ஒன்று எல் சல்வதோர் அரசுத் தலைவர், மற்றும், உரோம் நகர் மேயர் ஆகியோர் முன்னிலையில், சனிக்கிழமையன்று திறந்து வைக்கப்பட்டது. ●

# அனைவரும் புனிதராக அழைப்புப் பெற்றுள்ளோம்



போலந்து அரசுத் தலைவரையும் முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ரையும் சந்தித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். நாமனைவரும் புனிதராக மாற விடுக்கப்பட்டுள்ள அழைப்பை நினைவுறுத்தினார்.

போலந்து நாட்டின் அரசுத் தலைவர் Andrzej Duda அவர்கள், ஒக்ரோபர் 15 இத்திங்கள் காலை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை திருப்பீடத்தில் சந்தித்து உரையாடினார். இச்சந்திப்பின்போதும், பின் அரசுத்தலைவர் Duda அவர்கள் திருப்பீடச் செயலர் கர்தினால் பியேத்ரோ பரோலின், திருப்பீட வெளியுறவுத்துறைச் செயலர் பேராயர் பால் ரிச்சர்டு காலகர் ஆகியோருடன் மேற்கொண்ட உரையாடல்களின்போதும், புனித திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் 1978ஆம் ஆண்டு திருத்தந்தையாக தேர்வு செய்யப்பட்டதன் 40வது ஆண்டு கொண்டாட்டங்கள், ஐரோப்பிய ஒன்றிப்புக்கு போலந்தின் பங்களிப்பு, போலந்துக்கும், திருப்பீடத்துக்கும் இடையே நிலவி வரும் நல் உறவுகள், போலந்தில் திருஅவை ஆற்றி வரும் பணிகள் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும் திருத்தந்தை வெளியிட்ட டுவிட்டர் செய்தியில், "இந்த உலகிற்கு புனிதர்கள் தேவைப்படுகின்றார்கள். எவ்வித விதிவிலக்குமின்றி நாம் அனைவரும் புனிதத்துவத்திற்கு அழைப்புப் பெற்றுள்ளோம். நாம் அதற்கு அஞ்சுவதில்லை" என எழுதியுள்ளார்.

➡ 15

# தனித்துவமான அடையாளங்களை விற்பனை செய்யக் கூடாது

இளையோர் ஒவ்வொருவரும் நான் யார்? என்ற கேள்வியை, தனக்குள் எழுப்பி தெளிவான விடைகள் தேடினால், வாழ்வின் பொருளை கண்டடைய முடியும், இளையோர் ஒவ்வொருவரும் தங்கள் தனிப்பட்ட அடையாளங்களைப் பாதுகாத்து, அடுத்தவரின் வேறுபட்ட அடையாளங்களை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அவர்களைச் சந்திப்பது சவாலான ஒரு விடயம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இளையோருக்கு அனுப்பிய காணொலிச் செய்தியில் கூறியுள்ளார். ஐப்பசி 29ஆம் திகதி ஆர்ஜன்ரீனா நாட்டின் தலைநகர் புவனஸ் அயிரஸ் நகரில், Scholas Occurrents மற்றும் world Ort என்ற இரு அமைப்பினர் இணைந்து ஏற்பாடு செய்திருந்த மூன்றாவது இளையோர் மாநாட்டிற்கு திருத்தந்தை அனுப்பியிருந்த காணொலிச் செய்தியிலேயே இவ்வாறு கூறியிருந்தார். நான் யார் என்ற கேள்வியை இளையோர் ஒவ்வொருவரும் எழுப்பி தெளிவான விடைகள் தேடினால் வாழ்வின் பொருளை கண்டடைய முடியும் என்று கூறியுள்ளார். நாம் ஒவ்வொருவரும் பெற்றுள்ள தனித்துவமான நமது அடையாளங்கள் ஒரு குடும்பத்தில், சமுதாயத்தில் நாட்டில் உருவாக்கப்படுகின்றன என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த அடிப்படை உண்மைகளை மறக்கும்போது அடுத்தவரைக் குறித்த அச்சங்கள் நமக்குள் எழுகின்றன என்றும், இதனால் வன்முறைகள் பெருகி உலகில் போர்கள் உருவாகியுள்ளன என்றும் தனது செய்தியில் கவலையுடன் தெரிவித்துள்ளார். ஒவ்வொருவருக்கும் பிறப்பில் உருவாகும் தனித்துவமான அடையாளங்களை எக்காரணம் கொண்டும் விற்பனை செய்யக்கூடாது என்ற வேண்டுகோளை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இக்காணொளிச் செய்தியில் ஒரு விண்ணப்பமாக வெளியிட்டார். கார்த்திகை 1ஆம் திகதி நிறைவுற்ற இந்தக் கூட்டத்தில் 30 நாடுகளைச் சேர்ந்த 400க்கும் அதிகமான இளையோர் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# இறை அன்பே வாழ்வின் உண்மையான அளவுகோல்

"இறை அன்பே வாழ்வின் உண்மையான அளவுகோல், அச்சம் என்பது வாழ்வை மறுக்கும் நிலைகளின் அதிகரிப்புக்கு காரணமாக உள்ளது. மற்றவர்களை வரவேற்க வேண்டுமெனில் இந்த அச்சத்தை நாம் முறியடிக்கவேண்டும்." என்று திருத்தந்தை பிரான்சிஸ் தனது புதன் மறைக்கல்வி உரையில் தெரிவித்தார்.

உலக ஆயர் மாமன்றம் ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி வத்திக்கானில் நடைபெற்றது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்த ஆயர் மன்ற அமர்வுகளில் கலந்து கொள்வதுடன், நாட்டின் தலைவர்களைச் சந்தித்தல். புதன் பொது மறைக்கல்வி உரைகளை ஆற்றுதல், சாந்தா மர்த்தா இல்லத்தில் திருப்பலிகளை விசுவாசிகளுடன் நிறைவேற்றுதல் போன்ற தன் வழக்கமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து கொண்டிருக்கின்றார். தன் பொது மறைக்கல்வி உரையை புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பத்துக் கட்டளைகள் குறித்த தொடரில், கொலை செய்யாதே என்ற கட்டளை குறித்து தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

அன்பு சகோதர சகோதரிகளே, பத்துக்கட்டளைகள் குறித்த நம் மறைக்கல்வி தொடரில் இன்று, கொலை செய்யாதே என்ற கட்டளை வழியே கூறப்பட்டுள்ள தடைகளைக் குறித்து நோக்குவோம். வாழ்வுக்கு உரிய மதிப்பை வழங்காமல் இருப்பதாலேயே அனைத்து தீமைகளும் பிறக்கின்றன என்பதைக் கூறமுடியும். போர் மற்றும் சுரண்டலிலிருந்து, எளியோர், முதியோர், பிறக்கவிருக்கும் குழந்தைகள் மீது இழைக்கப்படும் கொடுமைகள் வரை, அனைத்து நிலைகளிலும், வாழ்வின் மீது தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. முடிவாக, அச்சம் என்பது வாழ்வை மறுக்கும் நிலைகளின் அதிகரிப்புக்கு காரணமாக உள்ளது. மற்றவர்களை வரவேற்க வேண்டுமெனில், இந்த அச்சம் எனும் சவாலை நாம் முறியடிக்கவேண்டும்.

➡ 14

# வறுமையை ஒழிக்க சம உரிமைக்காக உழைப்போம்



கடந்த 25 ஆண்டுகளில் உலகின் 100 கோடி மக்கள், வறுமையிலிருந்து வெளியேறியிருந்தாலும், 70 கோடிக்கும் மேற்பட்டோர் தங்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும் வழியின்றி உள்ளனர். வறுமை ஒழிப்பு உலக நாள் முதல்முறை கடைப்பிடிக்கப்பட்டதன் 25ஆம் ஆண்டு நிறைவுறும் வேளையில், உலகில் 100 கோடி மக்கள் வறுமையிலிருந்து வெளியேற அரசுகளும் பன்னாட்டு அமைப்புக்களும் உதவி செய்துள்ளன என ஐ.நா. பொதுச்செயலர் அந்தோனியோ கூட்டேரஸ் அவர்கள் கூறியுள்ளார்.

ஒக்ரோபர் 17ஆம் திகதி சிறப்பிக்கப்பட்ட வறுமை ஒழிப்பு உலக நாளையொட்டி செய்தி வெளியிட்ட கூட்டேரஸ் அவர்கள், இன்னும் இவ்வுலகில் 70 கோடிக்கும் மேற்பட்டோர் தங்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும் வழியின்றி உள்ளனர் என்பதைத் தன் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார். 2030ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய இலக்குகளில், வறுமை ஒழிப்பு மிகப்பெரும் சவாலாக உலக அரசுகளுக்கு முன் உள்ளது என்பதை தன் செய்தியில் குறிப்பிட்டுள்ள கூட்டேரஸ் அவர்கள், வறுமையை ஒழிப்பதும், மக்கள் அனைவருக்கும் சம உரிமைகள் கிடைப்பதும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன என்று கூறியுள்ளார்.

உலகெங்கிலும் வறுமையை ஒழிப்பதற்கு, 1992ஆம் ஆண்டு டிசம்பர் 22ஆம் திகதி, ஐ.நா. அவை நிறைவேற்றிய தீர்மானம், 1993ஆம் ஆண்டு முதல் முறையாக ஒக்ரோபர் 17ஆம் திகதி வறுமை ஒழிப்பு நாளாக சிறப்பிக்கப்பட்டது என்பதும், இவ்வாண்டு இந்நாள் 25வது முறையாக சிறப்பிக்கப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கன.

மனித உரிமைகள் அறிக்கை வெளியான 70ஆம் ஆண்டு நிறைவுறும் இவ்வாண்டில் சிறப்பிக்கப்படும் வறுமை ஒழிப்பு நாளுக்கென, "மிகவும் பின்தங்கியவர்களையும் ஒன்றிணைக்கும் ஓர் உலகை உருவாக்க ஒன்றுபடுவோம்." என்ற மையக்கருத்து தெரிவு செய்யப்பட்டுள்ளது. ●

# புனிதபட்டமளிப்பு சிறப்புத் திருப்பலியில் திருத்தந்தையின் மறையுரை

இயேசுவைத் தேடி, ஓடிவந்த அந்த மனிதருக்கு (மாற்கு 10:17) நற்செய்தியில் பெயர் தரப்படாததால், அந்த மனிதரில் நம்மையே நாம் அடையாளப்படுத்திக்கொள்ளலாம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒக்ரோபர் 14 அன்று வழங்கிய மறையுரையில் கூறினார். திருத்தந்தை 6ஆம் பவுல், சான் சால்வதோர் பேராயர் ஆஸ்கர் ரொமேரோ உட்பட ஏழு அருளாளர்களுக்கு புனித பட்டம் வழங்கும் சிறப்புத் திருப்பலியை வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் தலைமையேற்று நடத்தியத் திருத்தந்தை, இயேசுவைத் தேடிச் சென்றவர், நிலை வாழ்வடைய விரும்பியதைப் போலவே நாம் ஒவ்வொருவரும் விரும்புகின்றோம் என்பதை தன் மறையுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டார்.

கட்டளைகளைக் கடைப்பிடித்தால் நிலை வாழ்வடையலாம் என்று கூறிய இயேசு, அதற்கு அடுத்ததாக முழுமையான, சுதந்திரமான அன்பு வழிக்கு அந்த மனிதரை அழைத்தார் என்பதைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, சுதந்திரமான அன்புக்குத் தடையாக இருப்பது இவ்வுலக செல்வங்கள் மீது நாம் கொள்ளும் பற்று என்று எடுத்துரைத்தார். அன்பை நோக்கி கவர்ந்திழுக்கப்படும் நம் உள்ளங்கள் காந்தங்கள் போன்றவை என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அன்புக்குப்பதிலாக இவ்வுலக செல்வங்களால் ஈர்க்கப்படும் உள்ளங்கள் அங்கேயே தங்கிவிடும் ஆபத்து உள்ளது என்று கூறினார். அனைத்தையும் தியாகம் செய்ய மனமின்றி, செல்வங்களிலேயே சிறைப்படும் நாமும்,



நம் திரு அவையும் நம்மை மையமாக்கி, அங்கேயே நிறைவு காணும் ஆபத்து உள்ளது என்றும் அத்தகைய வாழ்வு இயந்திர கதியில் ஒரே விதமாகச் செல்லும் வாழ்வாக மாறிவிடுகின்றது என்றும் திருத்தந்தை தன் மறையுரையில் எச்சரிக்கை விடுத்தார். அனைத்தையும் இழக்கத் துணிவு கொண்டு, இயேசுவை மட்டுமே பின்பற்ற விழைந்த புனிதர்கள், பாரம் ஏதுமின்றி, சுதந்திரமாக, மகிழ்வாக வாழ்ந்தவர்கள் என்று கூறிய திருத்தந்தை ஒவ்வொரு புனிதரையும் தனிப்பட்ட வகையில் குறிப்பிட்டு, அவர்களைப்பற்றிய சில எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டார். திருத்தூதர் பவுலின் பெயரைத் தாங்கிய புனிதத் திருத்தந்தை 6ஆம் பவுல், அந்தத் திருத்தூதரைப் போலவே, புதிய பகுதிகளை தன் நற்செய்தியால் வென்றவர் என்றும், புனிதம் என்ற நிலைக்கு நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை தன் உரைகளிலும், எழுத்துக்களிலும் உரைத்தவர் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப்பிட்டார்.

➡ 15

புனித யோசவ்வாஸ் ஆண்டு சிறப்புக் கட்டுரை

# யோசேவ்வாஸ் அடிகளாரின் சிறப்புப் பண்புகள்

அருட்பணி. ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.

### அடிகளாரின் ஆன்மீகதாகம்

மறைபோதகப் பணியில் இவர் கொண்ட தணியாத ஆர்வம் இவருடைய ஆன்மீக தாகத்திற்கான அற்புதமான சான்றாகும். விசுவாச விதையை கிறிஸ்துவை அறியாத மக்களிடையே விதைக்க வேண்டுமென்று தன்னை முழுமையாக அப்பணிக்காக அர்ப்பணித்த உண்மையான பணியாளன். இலங்கை முழுவதுமான இவரது கால்நடை மறைப்பயணங்கள் இவரின் ஆன்மீக தாகத்தின் அளவிட முடியாத அடையாளங்கள். அச்சுறுத்தல்களுக்கும், அளவு கடந்த துன்பகரமான சவால்களுக்கு மத்தியிலும் கிறிஸ்துவை அடையாளப்படுத்தத் துடிக்கும் இவரது ஆன்மீகதாகம் சொற்களுக்கு அப்பாற்பட்டது. இவர், தான் பெற்றுக்கொண்ட அழைப்பையும், அவ்வழைப்பின் பொருளையும் தன் உயிரிலும் மேலாக நேசித்தார், பாதுகாத்தார். இவர் ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் மேல் கொண்ட வேட்கைதான் இவரது அற்புதமான பணிக்கான ஆழமான அடித்தளம் என்று சொன்னால் அது மிகையாகாது.

### அடிகளார் ஒரு இறைபற்றாளர்

அடிகளாரின் நம்பிக்கை வாழ்வு இவரின் குடும்பத்தில் இருந்து இவர் பெற்றுக்கொண்ட ஒன்றாகும். இவர் இறைவனிலும், அவருடைய எல்லை கடந்த வழிகாட்டுதலிலும் ஆழமான நம்பிக்கை வைத்திருந்தார். உயிர் ஆபத்துக்கள் கொண்ட சவால்களின் போதும் இறைபராமரிப்பில் உயிரோட்டமுள்ள நம்பிக்கை வைத்திருந்தார். தனது அனைத்து பணிச்செயற்பாடுகளிலும் இயேசுவின் முன்மாதிரிகையை ஆழமாக நம்பினார்.

### அடிகளார் ஏழைகளில் இறைவனைக் கண்டவர்

அடிகளார் ஏழைகள், கைவிடப்பட்டவர்கள் மேல் அதீத அன்பும், அக்கறையும் கொண்டவராக இருந்தார். இயேசுவின் அன்பை இவர்களோடு பகிர்ந்து கொள்வதில் இவர் தீராத ஆர்வம் காட்டினார். தனது இடர்பாடுகளுக்கு மத்தியிலும் தனக்கு கிடைத்த எல்லா வளங்களையும் ஏழைகளோடும், மனித நேயப் பணிகளிற்காகவும் பகிர்ந்தளிப்பதற்காக என்றும் முன்வருவார். இவர் இறைவனின் பராமரிப்பில் வைத்திருந்த ஆழமான நம்பிக்கை இவருடைய அன்புப்பகிர்வில் அன்றாடம் மலர்ந்தது. அவருடைய பற்றற்ற வாழ்வும், துறவற நிலையும் ஏழைகள் மட்டிலும்



துன்புறுவோர், விளிம்பு நிலை மக்கள் அனைவர் மட்டிலும் அளவற்ற கரிசனையையும், ஆதரவையும் கொண்டுவந்தது.

### புனிதமிகு வாழ்வின் சாட்சியாளர்

மேற்குறிப்பிட்டதைப்போல அடிகளுடைய தூய வாழ்வு எமக்கு பல செய்திகளை சொல்லுகின்றது. எந்த விதத்திலும் கிறிஸ்துவை அடையாளப்படுத்தாமல் அவருடைய செயற்பாடுகள் போனதில்லை. தன்னுடைய சொல், செயல் அனைத்திலும் அடிகளார் கிறிஸ்துவை முன்னிலைப்படுத்தினார். தனது வாழ்வின் அனைத்து வசதிகளையும் தன்னுடைய அழைப்பை முன்னிலைப்படுத்தி தியாகம் செய்தார். இன்றும், என்றும், எப்பொழுதும் அவரது புனிதமிகு வாழ்வு எமக்கு ஓர் எடுத்துக் காட்டாகவே அமைகின்றது.

ஆம். இயேசுக்கிறிஸ்து கொண்டிருந்த பணித்துவ மனநிலைகளின் சாயல் புனித யோசேவ்வாஸ் அடிகளிடமும் காணப்பட்டது என்றால் மறுப்பதற்கில்லை. இயேசுவை தன்னுடைய முன்மாதிரியாகக் கொண்ட அடிகள் தன் மறைபோதனை குறித்து வைத்திருந்த பணித்துவ மனநிலைகள் ஒவ்வொன்றும் அடிகளார் ஊடாக எமக்கு இயேசுவைப்பற்றி சொல்லிக் கொண்டே இருக்கும்.

### புனித யோசேவ்வாஸின் வாழ்வு எமக்கு முன்பாக வைக்கும் சில முன்மொழிவுகள்

- இன்றைய நவீனத்துவ நுகர்வு கலாசார சூழமைவிலும் எமது நம்பிக்கை வாழ்வை (விசுவாச) இழந்துவிடாமல் காக்க முயற்சி எடுத்தல்.
- செப வாழ்விற்கு எமது குடும்பங்களில் முன்னுரிமை அளித்தல். குறிப்பாக தினம் தோறும் நேரம் ஒதுக்கி குடும்பமாக செபித்தல்.
- இன்றைய காலகட்டத்தில் குறிப்பாக தொடர்பாடல், நுகர்வு தொடர்புடைய சாதனங்களுக்கும் பொருட்களுக்கும் அடிமையாகி இறைபற்றை இழக்காமல் வாழ இறைவனுக்கு முன்னுரிமை அளித்து வாழுதல் (குடி, போதைவஸ்து, கைத்தொலைபேசி, மெகாசீரியல்கள் இன்னும் பல)
- எளிமையாக எமது விழாக்களை கொண்டாடுதல். (திருவிழாக்கள், குடும்பவிழாக்கள், சமூகவிழாக்கள்) புனித யோசேவ்வாஸ் போன்று எளிமையான வாழ்வு வாழ்ந்து, பிறரின் தேவைகளை அறிந்து, அவர்களுடன் எம்மிடமுள்ளவற்றை பகிர்ந்து வாழுதல் (ஏழைகள், கைவிடப்பட்டவர், துன்புறுவோர் மட்டில் விசேட கவனம் செலுத்துதல்)
- ஞாயிறு திருப்பலிகளில் வெறும் கடமைக்காக மட்டும் கலந்து கொள்ளாது இறைவன் மீதுள்ள எமது ஆழ்ந்த நம்பிக்கையை, இறைபற்றை வெளிப்படுத்தி அருட்சாதனங்களில் தகுந்த ஆயத்தத்தோடு பங்கெடுத்தல்.
- விவிலியத்தை வாசித்து, தியானிப்பதற்கும் குடும்பமாக சில நிமிடங்களை ஒதுக்கி வாழ்வாக்குவதற்கும் இதனூடாக இறைபிரசன்னத்தில் எமது குடும்பங்கள் வாழ தொடர்ச்சியாக முயற்சி எடுத்தல்.
- மூடநம்பிக்கைகளான மாந்திரீகம், குறி கேட்டல், செய்வினை, பில்லி, சூனியம் போன்ற மூட நம்பிக்கைகளால் ஈடுபடாது, இறைவனில் சரணடைந்து இறைபற்றுடன் வாழ முயற்சித்தல்.
- குறிப்பாக ஆண்கள், குடும்பத்தலைவர்கள், பெரியவர்கள் யோசேவ்வாஸ் காலத்து மூப்பர்கள், அண்ணாவிமார் போன்று நம்பிக்கை வாழ்வை (விசுவாச) வளர்க்கும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்து உடனுழைப்பாளிகளாக மாறுதல், பங்கேற்பு திருச்சபையாக மாற்றுதல். ●

# திருச்சபைச் சட்டத்தில் பொதுநிலையினர்

### திருமேய்ப்பர்களுக்கு ஆலோசனை வழங்குதல்

திருச்சபையின் பொது நன்மையைக் கருதி திருமேய்ப்பர்களிடம் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூறும் உரிமையும், கடமையும் எல்லா இறைமக்களுக்கும் உண்டு என்று சட்டம் 212 குறிப்பிடுகின்றது. அதோடு நின்றுவிடாமல் பொதுநிலையினருக்கென்று சிறப்பான தகுதி ஒன்றையும் சட்டம் 228 வழங்கியிருக்கின்றது. இச்சட்டத்தின் பிரிவு 2 இவ்வாறு கூறுகின்றது: "தேவையான அறிவு, விவேகம் மற்றும் நேர்மையில் சிறப்புற்று விளங்கும் பொதுநிலையினர் வல்லுநர்களாகவும், ஆலோசகர்களாகவும் திருமேய்ப்பர்களுக்கு உதவி அளிக்கும் தகுதி பெற்றுள்ளனர். இவ்விதமே சட்ட விதிமுறைக்கேற்ப அவர்கள் குழுக்களிலும் கூட செயற்படலாம்"

இப்படி திருமேய்ப்பர்களுக்கு ஆலோசனை வழங்கும் தன்னுரிமை பொதுநிலையினருக்கு அளிக்கப்பட்டிருப்பது திருச்சபைச் சட்ட வரலாற்றில் இதுவே முதல்முறையாகும். அதுமட்டுமல்லாமல், திருமேய்ப்பர்கள் தங்கள் விருப்பு, வெறுப்புக்கு ஏற்றவாறு ஆலோசனை பெறுவதையும் சட்டம் நீக்கிவிட்டது. இப்பொழுது ஆலோசனைக் குழுக்களை நிலையான வகையில் அமைத்து இறைமக்களின் கருத்துக்களை முறையாகக் கேட்டுத் திருமேய்ப்பர்கள் முடிவுகளை எடுக்கவேண்டுமென சட்டம் பணித்துள்ளது. அதன்படி மறைமாவட்டம், பங்கு மற்றும் நிறுவனங்களில் ஏறக்குறைய 10 ஆலோசனைக் குழுக்கள் நிறுவப்பட்டிருக்க வேண்டும். அவற்றில் 7 அமைப்புக்களில் பொதுநிலையினர் ஆலோசகர்களாகப் பங்கேற்கலாம். அவை முறையே மறைமாவட்ட மன்றம் (Diocesan Synod), மறைமாவட்ட கூட்டு நடுவர் தீர்ப்புமன்றம் (Collegiate Tribunal), மறைமாவட்ட மேய்ப்புப் பணிப்பேரவை, மறைமாவட்ட நிதிக்குழு, பங்குப்பேரவை, பங்குநிதிக்குழு, நிறுவனங்களின் நிதிக்குழுக்கள் ஆகும்.

ஆலோசனை பெறுவதில் இரண்டு வகை உண்டு. ஒன்று உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்பது. மற்றொன்று அவர்களின் ஒப்புதலைப் பெறுவது. மேய்ப்புப்பணியில் குறிப்பாக நிதி நிர்வாகத்தில் முக்கியமான முடிவுகளைத் திருமேய்ப்பர்கள் எடுப்பதற்குமுன் அந்தந்த ஆலோசனைக் குழுக்களின் ஒப்புதலைப்பெற வேண்டுமென்று சட்டம் விதித்திருக்கின்றது. அச்சட்ட விதிகளை மீறித் திருமேய்ப்பர்கள் தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பார்களேயானால் அவை சட்டப்படி செல்லாது. சட்டம் இப்படி இருக்க உண்மை நிலை என்ன தெரியுமா? இன்னும் தமிழகத்தில் 25 சதவீத பங்குகளில் பங்குப்பேரவை இல்லை என்றும், மொத்தமுள்ள 1078 பங்குகளில் 131 பங்குகளில் மட்டுமே நிதிக்குழுக்கள் நன்கு செயற்படுகின்றன என்றும் தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு அண்மையில் செய்த மதிப்பீட்டிலிருந்து தெரியவருகின்றது! இந்நிலைக்கு யார் பதில் சொல்லப் போகிறார்களோ தெரியவில்லை.



### இறையியல் பயிற்சி

பொதுநிலையினர் திருச்சபையின் அலுவல்களையும், பணிகளையும் ஆற்றவேண்டுமெனில் அதற்கான தகுதி பெற்றிருக்க வேண்டும். இது அவர்களின் தன்னுரிமை என்றும் சட்டம் 224 இல் கூறப்பட்டுள்ளது. எனவே திருச்சபையின் அங்கீகாரம் பெற்றுள்ள இறையியல் நிறுவனங்களில் பொதுநிலையினர் இன்று பயின்று பட்டங்கள் பெறலாம். மேலும் பொதுநிலையினர் பெறவேண்டிய பயிற்சியைப் பற்றி சட்டம் 231 பிரிவு 1 இவ்வாறு கூறுகின்றது: "நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ திருச்சபையின் ஒருசில சிறப்புப் பணிக்குத் தங்களை அர்ப்பணிக்கும் பொதுநிலையினர் தங்களுடைய பணியை உரிய முறையில் நிறைவேற்றவும், இப்பணியை மனச்சான்றின் படி ஆர்வத்துடனும், கவனத்துடனும் செயற்படுத்தவும் தேவையான பயிற்சி பெறவும் கடமைப்பட்டுள்ளனர்." இவ்வாறு கல்வியும், பயிற்சியும் பெற விரும்பும் பொதுநிலையினருக்குத் தேவையான வசதி செய்து கொடுப்பது திருமேய்ப்பர்களின் பொறுப்பு என்றும் சட்டம் கூறுகின்றது (தி.ச. 811)

பொதுநிலையினரைப் பயிற்றுவிக்கும் பயிற்சி மையங்களை மறைமாவட்ட, தேசிய அளவில் அமைக்குமாறு திருத்தந்தை 2ஆம் ஜான்பால் கேட்டிருப்பது (ஆசியத் திருச்சபை,45) இங்கு குறிப்பிடத்தக்கது. திருச்சியில் தமிழகப் பொதுநிலையினரின் உருவாக்கப் பயிற்சிக்கென்றே தனிமையம் அமைக்கப்பட்டு இங்கு இளநிலை, முதுநிலை இறையியல் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அஞ்சல்வழி இறையியல் கல்வியும் நடத்தப்படுகின்றது. இத்தகைய பயிற்சிகள் மறைமாவட்டம், மறைவட்டம், பங்கு அளவில் கட்டாயமாக நடத்தப்பட வேண்டும் என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

### உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் பெறும் உரிமை

தன்னார்வத் தொண்டுள்ளத்துடன் திருச்சபை அலுவல்கள் மற்றும் பணிகளை ஆற்றும் பொதுநிலையினரைத் தவிர்த்து மற்றவர்கள், அவர்கள் செய்யும் முழுநேர அல்லது பகுதிநேர வேலைக்கு ஏற்பவும், அவர்களின் வாழ்க்கை நிலைக்கு ஏற்பவும், அவர்களின் சொந்த மற்றும் குடும்பத்தின் தேவைகளுக்குத் தக்க முறையிலும் ஊதியம் பெறும் உரிமை கொண்டுள்ளனர். இந்த ஊதியம் அந்தந்த நாட்டின் குடியுரிமைச்சட்ட விதியமைப்புகளைக் கருத்திற் கொண்டு நிர்ணயிக்கப்பட வேண்டும். மேலும் அவர்களின் ஓய்வூதியம், சமூகப்பாதுகாப்பு மற்றும் மருத்துவ உதவி போன்றவை உரிய முறையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டிய உரிமையும் அப்பணியாளர்களுக்கு உண்டு. பொதுநிலையினருக்குரிய இந்த உரிமைகளெல்லாம் சட்டம் 231 பிரிவு 2இல் வழங்கப்பட்டுள்ளன. திருச்சபையின் அனைத்துப் பணியாளர்கள் மட்டிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் ஒரு பொதுநிதி நிறுவப்பட வேண்டுமெனவும் சட்டம் பணிக்கின்றது (தி.ச. 1274 பி.3)

திருச்சபையில் பொதுநிலையினருடைய, சிறப்பாக மாண்பும், பணியும் பற்றிய விழிப்புணர்வு துளிர்விடத் தொடங்கியுள்ளது. பொதுநிலையினரை மையப்படுத்திய விவாதங்கள் தீவிரமடைந்துள்ளன. இவ்வாண்டு ஜனவரி மாதம் கொல்கொத்தாவில் நடைபெற்ற இலத்தீன் வழிபாட்டு முறையைச் சேர்ந்த அனைத்திந்திய ஆயர்பேரவை (CBCI) தங்களது கூட்டத்தில், "பகிர்ந்து வாழும் திருச்சபையில் பொதுநிலையினர்" என்ற தலைப்பில் கலந்தாய்வு செய்துள்ளது.

மதுரை உயர் மறைமாநிலத்தில் விரைவில் நடைபெறவுள்ள மறைமாவட்ட மாமன்றம் "பொதுநிலையினரின் பங்கேற்பும் தற்சார்பும் மலர்ந்திட" என்ற கருத்தை முன்வைத்திருக்கின்றது. இந்த எடுத்துக்காட்டுக்கள் பொதுநிலையினரின் பங்கேற்பையும் ஈடுபாட்டையும் பேணிவளர்ப்பதற்குத் திருமேய்ப்பர்கள் எடுத்துவரும் முயற்சிகளுக்குச் சான்று பகர்கின்றன. இம்முயற்சிகள் எங்கும் பரவித் தழைக்க வேண்டும். பொதுநிலையினரும் தங்களின் மேலான அழைத்தலையும், பொறுப்பையும் உணர்ந்து ஆர்வமுடன் பங்கேற்றிட முன்வரவேண்டும். "பொதுநிலையினரின் ஈடுபாட்டால்தான் நற்செய்தி பரவிட முடியும்.

கிறிஸ்துவ வாழ்வு தழைத்தோங்கும். மக்கள் வாழும் அனைத்து வீதிகளிலும் இயேசு கிறிஸ்துவின் விழுமியங்கள் ஊடுருவ இயலும்" (தமிழக ஆயர்கள் மடல் 1998) இக்கனவை நனவாக்கத் திருச்சபைச் சட்டம் பல வழிமுறைகளை வகுத்துக் கொடுத்துள்ளது. அவற்றை நடைமுறைப்படுத்த திருச்சபையின் மூவகையினரும் முனைந்து உழைக்க வேண்டும். ●

## திருவழிபாட்டு மறைக்கல்வி ஓர் அறிமுகம்

# அர்த்தமுள்ள திருவருகைக்கால அடையாளம்.

- அருட்பணி. S. அற்புதராஜ், திண்டிவனம் -

### திருவருகைக்கால மலர் வளையம் (Advent Wreath)

இதற்கென்று ஒரு வரலாறு உண்டு. இது ஜெர்மானியக் கிறிஸ்தவர்களிடமிருந்து தழுவப்பட்டு வந்த ஒரு பழக்கம். கிரேக்க, ரோமானியர்களைப் போன்ற பல தெய்வ வழிபாடு கொண்ட மக்கள் குளிர்காலத்தின் இருளை மெழுகுதிரி கொண்டு அகற்றி, இளவேனிர் பருவத்தின் குளிரையும், வெப்பத்தையும் தருமாறு சூரியக் கடவுளிடம் வேண்டுவார்கள். காலச் சுழற்சியும், வாழ்வின் வசந்தமும் மீண்டும் வரும் என்பதை இந்த மலர் வளையம் அவர்களுக்கு ஞாபகப்படுத்தும்.

இந்தப் பின்புலத்தில், கிறிஸ்தவர்கள் பிற்காலத்தில் ஒரு புதிய விவிலிய அர்த்தத்தை இதற்கு கொடுத்தார்கள். இப்போது இந்த மெழுகுதிரிகள் கிறிஸ்துவே உலகின் ஒளி என்பதைக் குறிக்கின்றன. (யோவா. 3:17-21) நம் மீட்பரான கடவுள், கிறிஸ்து இயேசுவில் புதிய, முடிவில்லா வாழ்வை நம்பிக்கையாளர்களுக்கு தருகின்றார் என்பதை பச்சை மலர் வளையம் நினைவூட்டுகின்றது. அது வெற்றியின் அடையாளமாகவும் கருதப்பட்டது. காரணம் வெற்றி பெற்ற படைவீரர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள். அதுபோல வாழ்க்கையின் கிரீடத்தை கிறிஸ்து நமக்கு வென்று தந்திருக்கின்றார் என்று கூட கிறிஸ்தவர்கள் நம்பலாம். திருவருகைக்கால மலர் வளையத்தில் உள்ள நான்கு மெழுகுதிரிகள், திருவருகைக் காலத்தில் வரும் நான்கு வார கால உள்ளார்ந்த, ஆன்மீக தயாரிப்பை சுட்டிக் காட்டுகின்றன. உலகின் ஒளியாம் கிறிஸ்துவின் வருகை புதிய வாழ்வையும், நம்பிக்கையையும் தரும் என்ற எண்ணத்தோடு காத்திருப்பதை குறிக்கின்றது.

### வடிவம், எண் மற்றும் நிறம்

வட்ட வடிவமான மலர்வளையம் தொடக்கமும், முடிவும் இல்லாத இறைவனையும், நிலை வாழ்வையும், நான்கு மெழுகுதிரிகளும் நான்கு திருவருகைக்கால ஞாயிறுகளையும் குறிக்கின்றன. ஒவ்வொரு மெழுகுதிரியும் 1000 ஆண்டுகளை பிரதிபலிக்கின்றது. மேலும் நான்கு மெழுகுதிரிகளும் மனித சமூகம் 4000 ஆண்டுகளாக மெசியாவின் வருகையை நோக்கி காத்திருந்ததை அடையாளமுறையில் சுட்டிக்காட்டுகின்றது.

ஆதாம், ஏவாள் முதல் நோவா வரை ஆயிரம் ஆண்டுகள். நோவா முதல் ஆபிரகாம் வரை ஆயிரம் ஆண்டுகள். ஆபிரகாம் முதல் தாவீது வரை ஆயிரம் ஆண்டுகள். தாவீது முதல் புதிய ஆதாம், கிறிஸ்து வரை ஆயிரம் ஆண்டுகள்.

இன்னும் ஒரு சில மலர்வளையங்களில் 5வது வெள்ளை நிற "கிறிஸ்து திரி" ஏற்றப்படுக்கின்றது. இது தூய்மையை குறிக்கின்றது. கிறிஸ்மஸ் அன்று ஏற்றப்பட்டு நடுவில் வைக்கப்படுகின்றது. திருவழிபாட்டு நிறமான ஊதா நிறம் ஜெப, தவ, தியாகம் ஆகியவற்றோடு கூடிய ஒறுத்தல் காலத்தை குறிக்கின்றது. திருவருகைக்காலம் என்பது ஒரு "குட்டி தவக்காலம்" பாவமாகிய இருளிலிருந்து, வாக்களிக்கப்பட்ட மீட்பை நோக்கி, அகில உலகமே கிறிஸ்துவின் பிறப்புக்காக காத்திருந்த காலத்தை குறிப்பது ஆகும்.

### திருவருகைக் கால முதல் ஞாயிறு The Candle of Expectation

**மெழுகுதிரி ஊதாநிறம் (Purple Colour)**

இது எதிர்பார்ப்பின் மெழுகுதிரி என்றழைக்கப்படுகின்றது. நாம் இறைவனில் எதிர்நோக்கி இருக்கின்றோம். ஏனெனில் கடவுள் என்றும் பிரமாணிக்கமுள்ளவர்: அவருடைய வாக்குறுதிகளை என்றும் நிறைவேற்ற தாமதிப்பதில்லை. நம் நம்பிக்கை இறைவனிடமிருந்தே வருகின்றது. "இன்னும் ஈசாயின் குலக்கொழுந்து ஒருவர் வருவார். மக்களினங்களை ஆளும் தலைவராய் அவர் தோன்றுவார். மக்களினங்கள் அவரையே



எதிர்நோக்கி இருப்பர் என்று எசாயா கூறுகின்றார். எதிர்நோக்கைத் தரும் கடவுள் நம்பிக்கையால் உண்டாகும் பெரு மகிழ்ச்சியாலும், அமைதியாலும் உங்களை நிரப்புவாராக. அவ்வாறு தூய ஆவியின் வல்லமையால் நீங்கள் இன்னும் மிகுதியான எதிர்நோக்குடன் வாழ அருள் புரிவாராக" (உரோ 15:12-13). என்ற சிந்தனையை இத்திரியானது சுட்டிக்காட்டுகின்றது.

**செபம்.**

ஆண்டவரே! உமது வல்லமையோடு விரைந்து வாரும். எங்கள் பாவங்களை முன்னிட்டு நெருங்கி வரும் ஆபத்துக்களிலிருந்து உமது அருள்காவலால் பாதுகாக்கப் பெற்று, நீர் அருளும் விடுதலையால் நாங்கள் மீட்பைக் காண்போமாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

### திருவருகைக் கால இரண்டாம் ஞாயிறு

**மெழுகுதிரி – ஊதாநிறம் (Purple Colour)**

**The Bethlehem Candle or the Candle of Preparation)**

பெத்லகேமில் பிறக்கப்போகும் மீட்பரைக் குறித்த வாக்குறுதியை இறைவன் நிறைவேற்றினார். ஆண்டவரின் வருகைக்காக ஆயத்தப்படுத்துவதை இத்திரியானது குறிக்கின்றது.

இதைப்பற்றி இறைவாக்கினர் எசாயாவின் உரைகள் அடங்கிய நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. "பாலை நிலத்தில் குரல் ஒன்று முழங்குகின்றது. ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள், அவருக்காக பாதையை செம்மையாக்குங்கள். பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படும். மலை, குன்று யாவும் தாழ்த்தப்படும். கோணலானவை நேராக்கப்படும். கரடு முரடானவை சமதளமாக்கப்படும். மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர்." (லூக்.3:4-6)

**செபம்**

ஆண்டவரே! உம் ஒரே திருமகனின் வழிகளைத் தயாரிக்க எங்கள் இதயங்களைத் தூண்டியெழுப்பியருளும். அவரது வருகையால் நாங்கள் தூய்மையாக்கப்பட்ட மனதுடன் உமக்கு ஊழியம் செய்யத் தகுதி பெறுவோமாக.

### திருவருகைக்கால மூன்றாம் ஞாயிறு. (Candle of Joy or the Shepherds Candle)

**மெழுகுதிரி - இளஞ்சிவப்பு நிறம் (Rose Colour)**

இன்றைய ஞாயிறு "மகிழ்ச்சியின் ஞாயிறு" (Rejoice Sunday or Gaudete Sunday) என்று அழைக்கப்படுகின்றது. இன்றைய திரி மகிழ்ச்சியின் மெழுகுதிரி. என்று அழைக்கப்படுகின்றது.

இன்று கிறிஸ்துவின் பிறப்புக்காக நம்முடைய காத்திருப்பின் நிறைவுக்கு வந்துவிட்டோம். அதனால் இன்றைய திருவழிபாட்டு நிறம் ரோஸ். மகிழ்ச்சியின் அடையாள நிறம். அதனால்தான் Pink Colour திரியை ஏற்றுகின்றோம். சம்மனசுக்கள் பாடும் மகிழ்ச்சியின் செய்தியைக் கேட்கின்றோம். "அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார். என்று கடவுளைப் புகழ்ந்தது" (லூக்.2:7-14).

**செபம்**

ஆண்டவரே! எங்கள் குரலுக்குப் பரிவிரக்கமுடன் செவிசாய்க்க உம்மை வேண்டுகின்றோம். எங்களைச் சந்திக்க வருகின்ற உம் திருமகனின் அருள் இருளடர்ந்த எங்கள் இதயங்களை ஒளிர்விப்பதாக.

### திருவருகைக் கால நான்காம் ஞாயிறு. (The Angel Candle or Candle of Love)

**மெழுகுதிரி – Purple Colour**

இது அன்பின் மெழுகுதிரி என்று அழைக்கப்படுகின்றது. மீட்பரின் பிறப்பைப் பற்றிய நற்செய்தியை சம்மனசுக்கள் அறிவித்தனர். கடவுள் இவ்வுலகை மீட்பதற்காக தம் ஒரே மகனையே அனுப்பினார். ஏனெனில் அவர் நம்மை அன்புசெய்தார். "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். உலகிற்கு தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல. தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார்," (யோவா 3:16-17) என்ற அன்பின் செய்தியை இம்மெழுகுதிரி சுட்டிக்காட்டுகின்றது.

**இறுதிச் செபம்**

ஆண்டவரே! இயேசுவே! காலம் தாழ்த்தாது விரைந்து வர உம்மை வேண்டுகின்றோம். அதனால் உமது பரிவிரக்கத்தில் நம்பிக்கை கொள்வோர் உமது வருகையின் ஆறுதலால் தேற்றப்படுவார்களாக.

### கிறிஸ்து பிறப்பு விழா - ஐந்தாம் வாரம் Candle of Chirst

**மெழுகுதிரி – வெள்ளை நிறம் (White Colour)**

நம்முடைய பாவங்களை கழுவுவதற்காக அனுப்பப்பட்ட இறைவனின் மாசற்ற செம்மறி கிறிஸ்துவே என்பதை இந்த வெள்ளை நிற மெழுகுதிரி சுட்டிக்காட்டுகின்றது. அவருடைய பிறப்பு, அவருடைய இறப்புக்காக. அவருடைய இறப்பு நம்முடைய பிறப்புக்காக! "மறுநாள் இயேசு தம்மிடம் வருவதைக் கண்ட யோவான், "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்" என்றார். (யோவா. 1:29)

**இறுதி செபம்.**

எல்லாம் வல்ல அன்புத்தந்தையே இறைவா! உமது மாட்சியின் பேரொளி எங்கள் உள்ளங்களில் உதித்தெழுவதாக. அதனால் காரிருள் படர்ந்த இரவின் ஆட்சி நீக்கப்பட்டு, உம் ஒரே திருமகனின் வருகை எங்களை ஒளியின் மக்களாக மாற்றி இதை விழிப்போடு காத்திருக்கும் நம்பிக்கையாளர்களுக்கு கொண்டு செல்ல செய்வதாக. ●

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

## புனித செசிலியா

*(பாடகர் குழுவின் பாதுகாவலர்)*



**மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்**

# புனிதர்களின் பாதையில்

உரோமையில், செல்வச் செழிப்பான குடும்பத்தில், இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் கிறிஸ்தவளாகப் பிறந்த செசிலியா சிறுவயது முதலே இறைவனிடம் செபம் செய்து, இறைமகளாக வாழ இறைவனின் அன்பில் தன்னை அர்ப்பணித்தவள். செசிலியாவிற்கு திருமணம் செய்வதற்காக வலேரியன் என்னும் கிறிஸ்தவர் அல்லாத ஒருவரை தேர்ந்தெடுத்தார்கள். தனது கன்னிமையை இறைவனுக்கு அர்ப்பணமாக்கியிருந்த செசிலியா, திருமணத்திற்கு மறுப்புத் தெரிவித்து சாக்கு உடை அணிந்து, பட்டினி கிடந்து மன்றாடினார். இறுதியில் பெற்றோரின் விருப்பமே நிறைவேறியது. இருந்தும் திருப்பலியில் பாடப்பட்ட பாடல் வழியாக உதவிக்கு வருமாறு இறைவனை நினைத்து நெஞ்சுருகிப் பாடினார்.

புதுமணத் தம்பதிகள் முதல் இரவிற்குச் சென்று வலேரியன் ஆசையுடன் நெருங்குகையில் "ஆண்டவரின் தூதர் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். எனது தூய்மைக்குக் காவலாய் இருக்கின்றார்" என்று மொழிந்தார் செசிலியா. திடுக்குற்ற வலேரியன் "நீ கூறுவது உண்மை என்றால் அந்தத் தூதரை எனக்குக் காட்டு" என்றான். "முதலில் நீங்கள் கிறிஸ்துவின் விழுமியங்களை ஏற்று கிறிஸ்தவராகத் திருமுழுக்குப் பெறுங்கள் நான் காட்டுகிறேன்" என்றாள் செசிலியா. சம்மதம் தெரிவித்த வலேரியன் திருமுழுக்குப் பெற்று வீடு திரும்புகையில், வீட்டில் செசிலியா வானதூதருடன் உரையாடிக் கொண்டிருந்த வேளை தம் கையில் ரோசா, லீலி மாலைகளை இருவருக்கும் அணிவித்தார். "மலர்களே பூக்காத அந்தக் காலகட்டத்தில் எப்படி இந்தப் பூமாலை வந்தது" என்று திபூர்சியுஸ் கேட்டார். இவர் வலேரியனின் சகோதரர் ஆவார். நடந்த அனைத்தையும் அறிந்த பின்பு "நானும் கிறிஸ்துவை நம்புகின்றேன்" என்று கூறி கிறிஸ்தவரானார். மூவரும் சேர்ந்து கொலை செய்யப்பட்ட விசுவாசிகளின் உடல்களை நல்லடக்கம் செய்து வந்தார்கள். மறைசாட்சிகளின் வீரத் தியாகத்தை எடுத்துரைத்தார்கள். செய்தி அறிந்த உரோமை அதிகாரி அல்மாகுஸ் முதலில் சகோதரர்கள் இருவரையும் கைது செய்து ஜீபிடர் தெய்வச் சிலைக்கு முன் ஆராதனை செலுத்தச் சொன்னான். மறுத்த இருவரையும் வாளுக்கு இரையாக்கினான். "இறைவன் துணையிருக்க எனக்கென்ன பயம்" என்று துணிந்த செசிலியா, இருவரின் உடல்களையும் எடுத்து அடக்கம் செய்துவிட்டு திரும்புகையில், கைது செய்யப்பட்டு உரோமைத் தெய்வத்திற்கு பலி செலுத்துமாறு ஆளுநரால் உத்தரவிடப்பட்டாள். நேர்படப்பேச அறிந்திருந்த செசிலியா "நான் இயேசுக் கிறிஸ்துவின் மணவாட்டி என்பதை நீ அறிந்துகொள்" என்று துணிந்து மொழிந்தாள்.

கோபம் கொண்ட ஆளுநன் சுவாசிக்க காற்று இன்றி, இவள் மூச்சுத் திணறிச் சாக வேண்டும் என்று கட்டளையிட்டான். அதன்படி ஓர் அறையில் அடைத்து, அந்த அறையில் தீ மூட்டினார்கள். புகையில் புதைந்து போவாள் என்று கனவு கண்டு, மறுநாள் கதவைத் திறந்து பார்த்தபோது சிறிய காயம் கூட இல்லாமல் செசிலியா சிரித்த முகத்தினளாய் இருந்தாள்.

➔ 14



# மாணவர் மன்னா



## [மாற்கு நற்செய்தி]
## விவிலிய வினாவிடைப்போட்டி - 04
## போட்டி விதிகள்

1. விடைத்தாளிலே விடைகளை எழுதி அனுப்புதல் வேண்டும்.
2. உங்கள் விடைகளை 01.12.2018 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஷ்டசாலிகளுக்குப் பரிசுத்தொகை அனுப்பிவைக்கப்படும்.
3. மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம். (தரம் - 3 முதல் தரம் 12 வரை)
4. முழுமையாக சரியான விடைகளை எழுதுவோரின் பெயர்கள் மட்டும் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
5. உங்கள் விடைப் பத்திரத்தில் பெயர், கல்விகற்கும் தரம், பங்கு, விலாசம் குறிப்பிடுதல் வேண்டும்.
6. பங்குத்தந்தையின் கையொப்பம் பெறல் வேண்டும்.
7. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்தி விவிலிய மாதாந்த அஞ்சல் வழி போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களே 'நற்செய்தியாளர் விருது' பெறும் இறுதி எழுத்துப் பரீட்சைக்கு தகுதிபெறுவார்கள்.
9. "விவிலிய வினாவிடைப் போட்டி - 04", மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும். ●

**மாற்கு நற்செய்தி: 01-15 வரை**

## விவிலிய வினாக்கள்

01. தீய ஆவி இயேசுவை பார்த்து அவர் எப்படிப்பட்டவர் என்று கூறியது?
02. சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்த லேவி என்பவர் யாருடைய மகன்?
03. தீய ஆவிகள் இயேசு முன் விழுந்து என்ன வார்த்தைகளை சொல்லிக் கத்தின?
04. பேய் பிடித்த மனிதனிடம் உன் பெயர் என்ன என்று இயேசு கேட்ட போது அவன் என்ன பெயரென்று சொன்னான்?
05. உடல் நலமற்றோர் பலரை இயேசு எப்படி குணமாக்கினார்?
06. உமது பெயரால் பேய்கள் ஓட்டுவதைக் கண்டு நாங்கள் ஒருவரை தடுக்கப்பார்த்தோம் என்று இயேசுவிடம் கூறியவர் யார்?
07. இயேசு எருசலேமுக்குள் சென்று மாலை வேளையா கிவிட்டதால் பன்னிரு சீடருடன் எங்கு புறப்பட்டுச் சென்றார்?
08. உயிர்த்தெழுதல் இல்லை என்னும் கருத்துடையவர்கள் யார்?
09. யூதாஸ்கரியோத் இயேசுவைக் காட்டிக் கொடுக்கும் நோக்கத்தோடு யாரிடம் சென்றான்?
10. சீரோன் ஊரைச் சேர்ந்த சீமோன் என்பவர் யாருடைய தந்தை என்று சொல்லப்படுகின்றாள்?

## விவிலிய வினாவிடைப்போட்டி இல. 03 இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
யோ. ஜெரோஷா லெம்பேட்,
பெரியபண்டிவிரிச்சான்பங்கு,
மடுக்கோவில்.

**இரண்டாம் பரிசு:**
அமலதாசன் அனுசிஜா,
பள்ளக்கமம்,
முருங்கன்பங்கு.

**மூன்றாம் பரிசு:**
அன்ரனி டிவைன்சன் குரூஸ்,
8ம் வட்டாரம்,
வங்காலைப்பங்கு.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 70 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 53 பேர்.**

## விவிலிய வினாவிடைப்போட்டி இல. 03இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. ஜெ. தனுசிகா. கட்டையடம்பன், கற்கிடந்தகுளப்பங்கு,
2. S.J. டிலைக்ஷன். மன்னார், பேராலயப்பங்கு,
3. ச. டிலைக்சன். பெரிய முறிப்பு, பெரியகுஞ்சுக்குளப்பங்கு.
4. றெ. யெஸ்மின் சோபிதன். கற்கிடந்தகுளப்பங்கு.
5. யு. லக்ஷாயினி. கட்டையடம்பன், கற்கிடந்தகுளப்பங்கு.
6. J. பென்சியன். தலைமன்னார்பங்கு.
7. ஜெ. சார்லஸ் சேமின். நொச்சிக்குளம், உயிலங்குளப்பங்கு.
8. அ. றொசானி. யாழ்மறைமாவட்டம்.
9. இ. சிந்துஜா. எமில்நகர், பேராலயப்பங்கு.
10. அ. மேரி அனோலின். காத்தான்குளம், கட்டைக்காடுப்பங்கு.
11. தி. அயந்தினி. காத்தான்குளம், கட்டைக்காடுப்பங்கு.
12. றெ. அபினா. கட்டையடம்பன், கற்கிடந்தகுளப்பங்கு.
13. ம. சாளினி. காத்தான்குளம், கட்டைக்காடுப்பங்கு.
14. றெ. லெயூமி. கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளப்பங்கு.
15. J. அபிஷா. கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளப்பங்கு.
16. ஜெ. ஆன் பிறித்திக்கா பீரிஸ். எமில்நகர், பேராலயப்பங்கு.
17. மெ. மேரி றொசேனா குரூஸ். வங்காலைப்பங்கு
18. ஜெ. பிறின்ஸ்ரன் பீரிஸ். எமில்நகர், பேராலயப்பங்கு.
19. S. டெல்சினா. கட்டைக்காட்டுப்பங்கு.
20. சை. யேசுதாசன். கட்டைக்காட்டுப்பங்கு.
21. றொயிற்றன் டில்சிக்கா. தோட்டவெளிப்பங்கு
22. பி. டனிஸ்ரா. தாராபுரம், தாழ்வுபாட்டுப்பங்கு.
23. பி. நிதுஷா. தோட்டவெளிப்பங்கு.
24. N. மேரி நிஷாலினி. பள்ளிமுனைப்பங்கு.
25. வி. ஆன் றக்ஷனா. வஞ்சியன்குளப்பங்கு.
26. அ. அபி. வஞ்சியன்குளப்பங்கு, வஞ்சியன்குளப் பங்கு.
27. பே. மெபோணா றீனி. பொன்தீவுகண்டல்பங்கு.
28. யு. யூலியற் நிசோபனா. அளவக்கைப்பங்கு.
29. ஜெ. ஜெதுமிதா. அளவக்கைப்பங்கு.
30. ஆ. றெஸ்மியா. தாஸ்கோட்டம், வேப்பங்குளப்பங்கு.
31. ச. மேரி டிஷா. வஞ்சியன்குளப்பங்கு.
32. ம. திருசாளினி. தாஸ்கோட்டம், வேப்பங்குளப்பங்கு.
33. ம. டெரினா. தாஸ்கோட்டம், வேப்பங்குளப்பங்கு.
34. சே. ஹிசோன் அன்ரனி. உயிலங்குளப்பங்கு
35. அ. ஆன் சோபிக்கா. வஞ்சியன்குளப்பங்கு.
36. ச. மரியகொண்சிக்கா குரூஸ். சிலாவத்துறைப்பங்கு.
37. சே. நெகோமியா. முதலைகுத்தி, உயிலங்குளப்பங்கு.
38. அ. அன்ரனி ஷெரோன். வஞ்சியன்குளப்பங்கு.
39. செ. பிபியானா குரூஸ். முத்தரிப்புத்துறைப்பங்கு
40. ம. டிஷாமினி. வேப்பங்குளப்பங்கு.
41. அ. பெபிஷா. புதுக்கமம், வஞ்சியன்குளப்பங்கு
42. எ. அன்ரனி ஜெபர்ஷன். புதுக்கமம், வஞ்சியன்குளப்பங்கு.
43. யோ. ஜெகன் ஜெனிபா லெம்பேட். தாழ்வுபாடுபங்கு.
44. எ. அன்ரனற் ஜெபர்ஷனா. வஞ்சியன்குளப்பங்கு,
45. செ. ஜெஷீவா நிதர்ஷன். உயிலங்குளப்பங்கு.
46. கு. ஆன் சினேகா. கட்டைக்காட்டுப்பங்கு.
47. க. புஸ்பாகரன். எழுவைதீவு, யாழ்மறைமாவட்டம்.
48. ம. றொஷான். எழுத்தூர்ப்பங்கு.
49. R. நிவர்ணன். கட்டையடமம்பன், கற்கிடந்தகுளப்பங்கு.
50. செ. ஷறோன். உப்புக்குளம், பேராலயப்பங்கு.

# மறைக்கல்வியின் அவசியம்

இறைவனில் விசுவாசம் கொள்ளவும், அவரைப் பின்பற்றிச் செல்லவும் மறைக்கல்வி நமக்கு அவசியம். இறைவனை விட்டு விலகாமல் வாழ்ந்து, அவரின் போதனைகளை விசுவசித்து, யாவற்றிலும் அன்புடன் அமைந்து நடக்க மறைக்கல்வி நமக்குக் கற்றுத்தருகின்றது. மறைக்கல்வி, செபித்தலின் அவசியத்தை நமக்குச் சொல்லித் தருகின்றது. செபம் உதட்டளவில் மட்டும் நின்று விடாமல், உள்ளத்தால் இறைவனோடு ஒன்றித்து, உணர்ந்து செபிக்க வேண்டுமென விளங்கப்படுத்துகின்றது. ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக்கொண்டாலும் அவன் ஆன்மாவுக்குக் கேடு விளைவித்தால் அவனுக்கு வரும் பயன் என்ன? என்று வினா எழுப்புகின்றார் கிறிஸ்து. நாம் எதை இழந்தாலும் ஆன்மாவை இழந்து விடாமல் காத்துக் கொள்ள மறைக்கல்வி நமக்கு உதவியாக இருக்கின்றது.



கடவுளின் கற்பனைகளையும், அவற்றை எவ்விதம் கடைப்பிடிப்பதென்பதையும் மறைக்கல்வி மிகுந்த கவனத்துடன் நமக்குக் கற்றுத்தருகின்றது. அன்பு என்னும் பெரிய கட்டளையில் கடவுளின் கற்பனைகள் யாவும் அடங்கியிருக்கின்றன.

➡ 14

# கிறிஸ்தவ நாகரிகம் புதிய பாடத்திட்டம்
## இஸ்ராயேல் இன உருவாக்கமும், இறைபராமரிப்பும்
### அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி

**இஸ்ராயேல் இன உருவாக்கம்**

குலமுதுவர் என்ற சொல் ஒரு இனத்தின் அல்லது குலத்தின் தந்தையைக் குறிக்கும் பதமாகும். வரலாற்றில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோப்பு ஆகியோர் குலமுதுவர்கள் ஆவர். இஸ்ராயேல் வரலாறானது ஆபிரகாமின் அழைப்போடு ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது. மொசப்பத்தேமியாவைச் சேர்ந்த ஆபிரகாம் தன் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது இறைவனால் அழைக்கப்பட்டு (தொ.நூ 12:1-6) கானான் நாட்டில் குடியேறினார். கானான் நாட்டில் மம்ரே பள்ளத்தாக்கில் எபிரோன் என்னுமிடத்தில் குடியேறிய ஆபிரகாமோடு இறைவன் உடன்படிக்கை செய்து கொண்டார். (தொ.நூ 15:1-21, 17:1-22). ஆபிரகாமோடு இறைவன் செய்து கொண்ட உடன்படிக்கையை ஈசாக் மற்றும் யாக்கோப்போடு புதுப்பித்துக் கொண்டார். மீட்புத்திட்டத்தில் ஆபிரகாமிற்குப் பின்னர் யாக்கோபு முக்கியத்துவம் பெறுகின்றார். இஸ்ராயேல் என்ற பெயரையும் பெற்றுக் கொள்கின்றார். யாக்கோப்பின் பன்னிரு புதல்வர்களும், பன்னிரு கோத்திரங்களாக உருவெடுக்க இஸ்ராயேல் என்னும் இனம் உருவாகியது. இஸ்ராயேல் இன உருவாக்கத்தில் அத்திவாரமானவர்கள் குலமுதுவர்களாவர்.

**எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை**

யோசேப்பு எகிப்தில் ஆளுனராக இருந்த காலத்தில் பஞ்சம் காரணமாக யாக்கோப்பின் குடும்பத்தார் எழுபதுபேர் எகிப்தில் கோசேன் பகுதியில் குடியேறினர். கி.மு 1290 - 1224 இல் எகிப்தை இரண்டாம் இராம்கேசு எனும் பாரவோன் மன்னன் ஆட்சி செய்த காலத்தில் இஸ்ராயேல் மக்கள் அடிமைப்படுத்தப்பட்டனர். இஸ்ராயேல் மக்களின் தொகை அதிகரிப்பைக் கண்டு அஞ்சிய மன்னன் அவர்களுக்கு எதிரான இன அழிப்புக் கொள்கை யொன்றை வெளியிட்டான். இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் மிகக் கடுமையான வேலை செய்யவும், பெரும் நகரங்களை அமைக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டதோடு, அடிமைகளாக கொடுமைப் படுத்தப்பட்டார்கள். எபிரேய ஆண் குழந்தைகளைக் கொன்றுவிட தாதிமாருக்குக் கட்டளையிடப்பட்டதோடு, உயிரோடு காணப்படும் குழந்தைகள் நைல்நதியில் வீசப்படவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது. எகிப்தியரின் அடிமைத்தன வாழ்விலிருந்து இஸ்ராயேல் மக்கள் மோசே, ஆரோண் தலைமையில் வெளியேறினர். இஸ்ராயேல் மக்களின் விடுதலைப்பயண வாழ்வில் யாவே இறைவன் உடனிருந்து பற்பல அருஞ்செயல்கள் மூலம் அவர்களைப் பாதுகாத்து சீனாய் மலையில் அவர்களோடு உடன்படிக்கை செய்தார். விடுதலைப் பயண வாழ்வில் கடவுளின் உடனிருப்பையும், பாதுகாப்பையும் இஸ்ராயேல் மக்கள் ஆழமாக நம்பினர்.

**சீனாய் உடன்படிக்கை**

எகிப்தில் இருந்து புறப்பட்டு மூன்றாம் மாதத்தின் முதலாம் நாள் இஸ்ராயேல் மக்கள் சீனாய் மலையை அடைந்து அங்கே இறை பிரசன்னத்தை அனுபவித்தார்கள். சீனாய் மலையில் இறைவன் இஸ்ராயேல் மக்களுடன் மோசே மூலமாக செய்து கொண்ட உடன்படிக்கையே சீனாய் மலை உடன்படிக்கை ஆகும். இவ்வுடன்படிக்கையில் ஒரே கடவுளாகிய யாவேயை வழிபடுவதன் மூலமாக இஸ்ராயேலர் இறைவனுக்குச் சொந்தமான மக்களாயினர். (வி.ப.19:5-6) சீனாய் உடன்படிக்கை அக்கால இத்தியர், அசீரியர் நாடுகளில் பேரரசர்களுக்கும், சிற்றரசர்களுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை ஒத்ததாக அமைந்துள்ளது. சாதாரண வாழ்வு வாழ்ந்த இஸ்ராயேலர் சீனாய் உடன்படிக்கையின் மூலம் தனித்துவமான வாழ்க்கை முறை ஒன்றை அமைத்துக் கொண்டனர். பின்வரும் முக்கிய அம்சங்கள் சீனாய் உடன்படிக்கையில் வெளிப்படுத்தப்பட்டன. கடவுளை இனங்கண்டு, அவரின் அருஞ்செயல்களை அறிந்து கொள்ளல் (விப 19: 4-6,20:2), நிபந்தனைகள், உரிமைகள், கடமைகள் (விப 20:3, 23:33), உடன்படிக்கையை வாசித்தல், (விப 24:7), விருந்து பரிமாறல் (விப 24:9-11), உடன்படிக்கையை புனிதமான இடத்தில் பாதுகாப்பாகவைத்தல் (விப.25:16), இறைசாட்சிகள், ஆசீர்கள், சாபங்கள் (இச 4:26, 30:19, 27:11-26) என்பனவாகும்.

**நீதித்தலைவர்களின் மூலமாக பாதுகாப்பு**

வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியமர்த்தியபின், நீதித் தலைவர்கள் மூலமாக இறைவன் அவர்களைப் பாதுகாத்து வழிநடத்தினார். யோசுவா அங்கு அவர்களுக்கு நீதி வழங்கி முதல் நீதித்தலைவராக செயற்பட்டார். கானானில் வாழ்ந்தபோது இஸ்ராயேலரின் துன்பத்திற்கும், தொல்லைக்கும் காரணம் அவர்கள் உடன்படிக்கையை மறந்து கடவுளுக்குத் துரோகம் செய்ததே ஆகும். எனவே கடவுளின் கோபம் சொந்த மக்களுக்கு எதிராக மூண்டது. இதனால் ஆண்டவர் அவர்களை அந்நிய அரசர்களால் வதைபட அனுமதித்தார். (நீதி.2:6-3:6: 10:6-16)

கனானேயரின் பழக்கவழக்கங்கள், வழிபாட்டு முறைகள், வழிபாட்டுத் தலங்கள் என்பவற்றையும் இஸ்ராயேலர் பின்பற்ற ஆரம்பித்தனர். தங்களை மீட்டுக் காத்து, பராமரித்துவரும் ஒரே தெய்வம் யாவே என்பதை மறுக்கும் அபாயம் ஏற்பட்டது. இஸ்ராயேலர் கானான் நாட்டைக் கைப்பற்றியதற்கும், முடியாட்சி தொடங்கியதற்கும் இடைப்பட்ட காலத்தில் இஸ்ராயேல் மக்களை வழிநடத்திய தலைவர்களே நீதித் தலைவர்கள் ஆவர்.

இந்நிலையிலேயே நீதித் தலைவர்கள் யோசுவா, தெபோரா, கெதயோன், சம்சோன் ஆகியோர் இஸ்ராயேல் மக்களை நெறிப்படுத்தி அந்நிய ஆட்சியிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் மீட்டு யாவே தெய்வத்தின்மீது பற்றுக்கொண்டு பணிசெய்து வாழ அழைக்கப்பட்டனர். தானியேல் மொசப்பத்தேமிய மன்னன் கூசான் ரிசத்தாயிடம் எட்டு வருடங்களாக அடிமைகளாக இருந்த இஸ்ராயேல் மக்களை மீட்டார்.

➡ 15



# இளையோர் மன்னா



## “இந்த ஆண்டும் இதை விட்டுவையும்”

### அருட்பணி. லக்கோன்ஸ் பிகிராடோ - இயக்குனர், மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு



“வயசானவர்கள் எல்லாம் அங்கிள் இல்லை. உலக நடப்பு தெரியாமல் ஊரில் உங்களை மாதிரி சுத்திக்கிட்டு திரியுறாங்களே அவங்கதான் அங்கிள்.” இப்படியொரு வானொலி விளம்பரம் கேட்டேன். வயசானவர்களுக்கெல்லாம் மகிழ்வைத் தரக்கூடிய ஒரு விளம்பரம் தான். இளமை என்பதை வயதெல்லை கடந்தது எனலாம். ஒரு குடும்பம், கிராமம், சமூகம் அல்லது பங்கு, மறைமாநிலம், உலகத் திருச்சபை நிமிர்ந்து நின்று நேர்த்தியாகச் செயற்படுவதற்கு முதுகெலும்பாக திகழும் இளமைப் பருவம் தேவையானது.

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்கின்ற மூன்று காலத்திற்கும் உரியவர்கள் இந்த இளையோர்களே என்று திருத்தந்தை கூறுவார். கடந்த கால அனுபவங்களைக் கொண்டும், எதிர்காலக் கனவுகளைக் கொண்டும் நிகழ்காலத்தில் அவற்றை செயற்படுத்தும் வினைத்திறன்மிக்கவர்கள் இந்த இளையோரே என்றால் அது ஒருநாளும் மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. அப்துல்கலாம் கூறுவார் “இளையோரே நீங்கள் கனவு காணுங்கள், கனவு காண்பதன் மூலம்தான் நீங்கள் அவற்றினை அடைய செயற்படுத்த முயற்சிப்பீர்கள்.”

“இளையோரே! இளமைப் பருவம் மகிழ்ச்சியோடு இருப்பதற்கே. இளமையின் நாட்களில் உள்ளக்களிப்புடன் இருங்கள். மனம் விரும்புவதை செய்யுங்கள். கண்களின் நாட்டத்தை நிறைவேற்றுங்கள். ஆனால் நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்குரிய தீர்ப்பைக் கடவுள் வழங்குவார் என்பதை மறவாதீர்கள்.” (சபை உரை.11:9). இளமைப்பருவமானது மகிழ்ச்சியுடன் வாழவும், கண்களுக்கும், மனதுக்கும் களிப்பூட்டுவதை நிறைவேற்றுவதற்கும், வாழ்வை அனுபவிப்பதற்கும் சொல்லித் தருகின்றது. காட்டாற்று வெள்ளம் யாராலும் கட்டுப்படுத்தப்பட முடியாமல் கடலை சேருகின்றபோது பயனற்றதாக மாறுகின்றது. ஆனால் அது பக்குவமாக குளங்களுக்கு வழியனுப்பப்பட்டு, வாய்க்கால் மூலம் வெளியேற்றப்படுகின்ற போது பயிர் பச்சைகள் அனைத்திற்கும் பயனுள்ளதாக மாறுகின்றது. ஒழுக்கம் என்கின்ற அணைகளுக்கூடாகப் பயணிக்கின்ற போது பக்குவப்பட்ட ஒரு பருவமாக மாறுகின்றது இளமைப்பருவம். இந்நிலையிருந்து விலகி வாழ்கின்ற போது சமகாலத்தில் நாம் எதிர்நோக்குகின்ற ஒழுக்க சீர்கேடுகளை சமூகத்தில் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். இவ்வாறான நிலையிலிருந்து இளையோரைப் பாதுகாத்து, நெறிப்படுத்தும் நோக்குடன் சமூகத்திலும், திருச்சபையிலும் பல்வேறுபட்ட திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த வகையில் எதிர்வரும் ஆண்டு (2019) இளையோர் புதுப்பித்தல் ஆண்டாக திட்டமிடப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நல்ல திட்டங்களை வகுத்து பங்குகளிலும், மறைமாநிலத்திலும் அவற்றை செயற்படுத்துவதன் வழியாக நாமும், எம் சமூகமும் வளர அன்புடன் அழைக்கப்படுகின்றோம். நல்ல திட்டங்களை முன்வைப்பதன் ஊடாக சமய, சமூக, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களில் வளர முன்வருவோம்.

“இளைஞனே நான் உனக்குச் சொல்கின்றேன் எழுந்திடு” (லூக்கா7:14)என்கின்ற இயேசுவின் உயிருள்ள வார்த்தைகள் எம்மைத் தூக்கி நிறுத்துவதாக.●

## அன்பில் நிலைத்திருக்க, பணம், புகழ் தேவையில்லை

## ஓர் இளம் கலைஞரின் வாழ்க்கை அனுபவம்



இலங்கையில் கூத்துப் பட்டறை கலைஞராக வலம் வந்தவர் 27 வயது விஜயா. இனக்கலவரம் காரணமாக தமிழகத்திற்குப் புலம்பெயர்ந்து தனக்கு தெரிந்த நாட்டியத்தை தெருவில் ஆடி அதில் வரும் வருமானத்தில் வாழ்ந்துவந்தார். அவர் திருப்பூர் நாச்சிபாளையத்தில் நடனமாடியபோது, 32 வயது சுப்பிரமணியத்திற்கும், விஜயாவிற்கும் பிடித்துப்போக, செல்வ வளமிக்க சுப்பிரமணியம் அவர்கள் வீட்டில் பலத்த எதிர்ப்பு எழுந்தது. சொத்தையெல்லாம் துறந்துவிட்டு, வீட்டைவிட்டு வெளியேறி, விஜயாவை திருமணம் செய்து கொண்டார் சுப்பிரமணியம். தனக்குத் தெரிந்த ஆடல் கலையை கணவருக்கு கற்றுக்கொடுத்தார் விஜயா. இருவரும் சேர்ந்து ஊர் ஊராக போய் நடனமாடி, அதில் வரும் வருமானத்தில் ஐந்து ஆண்டுகள் மகிழ்வாக குடும்பம் நடத்தினர். குழந்தைகள் இல்லை. ஓர் ஊரில் ஆடிவிட்டு, அந்த களைப்போடு, இருவரும் தெருவில் படுத்திருக்க, அவ்வழியே போதையில் வந்த ஒருவர் விஜயாவை அடையும் நோக்கத்தோடு அவரை நெருங்கினார். விஜயா கூச்சலிட, தன் மனைவியைக் காப்பாற்றும் நோக்கத்தில் சுப்பிரமணியம் அவர்கள் அருகில் இருந்து கல்லை எடுத்து, குடிகாரர் தலையில் தாக்க, அடுத்த சில நிமிடங்களில் அவர் சுருண்டு விழுந்து இறந்தார். நடந்த சம்பவத்தைக் கேள்விப்பட்டாலும் காவல்துறையோ, கணவனும், மனைவியும் சேர்ந்து, ஐநூறு ரூபாய் வழிப்பறி செய்யும் நோக்கத்தோடு இளைஞர் ஒருவரை கொலை செய்ததாக இருவரையும் கைது செய்தது. வழக்கு நீதிமன்றத்திற்கு சென்றது. ஏன் கல்லைத்தூக்கிப் போட்டார்? என்று ஒரு கேள்வியே எழவில்லை.

➡ 15

## உறுதியான, உயரிய இலக்கு

### அருட்பணி. ம. மரிசுதன். செபமாலைதாசர் சபை.

“எவ்வினை யோர்க்கும் இம்மையில் தம்மை இயக்குதற்கு நல்ல இன்பம் பயக்கும் ஓர் இலக்கு வேண்டும். உயிர்க்கு அது தூண்டுகோல் போலாம்” இது மனோன்மணியம் சுந்தரனார் பொன் மொழிகள். முழு மனிதவாழ்வையும் நோக்குமிடத்து அது முக்தி, வீடு பேறு அல்லது விண்ணகம் என்னும் இலக்கு நோக்கி நகர்கின்றது. நமது தினசரி வாழ்விலும் உறுதியான உயரிய இலக்கு இருக்க வேண்டும் என்பது உலகமறிந்த உண்மை. உலகமே பரவசப்பட சாதனை படைத்த எல்லோரும் உன்னதமான குறிக்கோளைக் கொண்டிருந்தார்கள். ஆழ்கடலில் பயணிக்கும் கப்பலுக்கும், வானத்தில் பறக்கும் விமானத்திற்கும் விசையோடு வீசப்படும் அம்புக்கும் இலக்கு அடையவேண்டிய மையப்புள்ளி அவசியமானது என்பது போல மானிடர் நமக்கும் குறிக்கோள் மிக அவசியமானது. “குறிக்கோள் என்பது ஒருவர் அடைய விரும்பும் இலக்கு ஆகும். அது ஒருவர் பெறவிரும்பும் செல்வம், புகழ், பதவி, வாழ்வு முறை என்பது போல அவரவர் விருப்பத்திற்கேற்ப அமைகின்றது. குறிக்கோள் என்பது ஒருவரது நிகழ்கால நிலையிலிருந்து அவர் பெறவிரும்பும் எதிர்கால நிலையைத் தீர்மானிக்க உதவும் முடிவுத்திட்டம் எனக் கூறலாம்.” விமலநாத் M.A., M.B.A. (‘குறிக்கோளை நிர்ணயிப்பது எப்படி?’)

குறிக்கப்பட்ட இலக்கு இல்லாவிடில் பல காரியங்களில் கவனம் சிதறடிக்கப்பட்ட நமது சக்தி விளலுக்கு இறைத்த நீர் போல வீணாய்ப் போய்விடும். இதையே சிவ்கெரா “குறிக்கோள் அற்ற உற்சாகம் காட்டுத் தீ போன்றது. இது விரக்திக்கு இட்டுச் செல்கின்றது. இலக்கு தெளிவான பாதையை வகுக்கின்றது” என ‘உங்களால் வெல்லமுடியும்’ என்ற புத்தகத்தில் கூறியுள்ளார். எனவே, இலக்கு இல்லை என்றால் நம் வாழ்வு நடுக்கடலில் திசை தெரியாத தத்தழிக்கும் படகுபோல, அடர் காட்டில் சிக்கிய சிறு பிள்ளைபோல அலைக்கழிக்கப்படும் சிறுபிள்ளைகளை ‘நீங்கள் என்னவாக வரவிரும்புகிறீர்கள்’ என்று கேட்கும் போது ‘நான் வைத்தியராக, கட்டட நிபுணராக, ஓவியராக, வக்கீலாக, ஆசிரியராக, குருவாக, கன்னியராக வரவிரும்புகின்றேன்.’ என்று ஒவ்வொருவரும் தமது எதிர்காலக் கனவுகளை, குறிக்கோளை வெளிப்படுத்துவதை கேட்டிருக்கின்றோம். இவ்வண்ணம் பெற்றோர், பெரியோர் சிறுபராயத்திலேயே பிள்ளைகளின் மனதில் தமது இலக்கை நிர்ணயிக்க உதவ வேண்டும்.

இவ்வாறு செய்யும் போது ‘பசுமரத்து ஆணிபோல’ அது அவர்கள் மனதில் பதியும். நமது இலக்கு, இலட்சியம் எந்நேரமும் நம் கண்முன் இருக்க வேண்டும். அது நமது சிந்தனை, சொல், செயல், கற்பனை, கனவு ஆகியவற்றை ஆக்கிரமிக்க வேண்டும். ‘எண்ணம் போல் வாழ்க்கை’ என்று சொல்வற்கு ஒப்ப இந்த எண்ணங்களுக்குள்ள அபார சக்தி நமது இலக்கை நோக்கி நம்மை உந்தித் தள்ளும். நமது இலட்சியமும் உயிர்ப்போடு உள்ளுக்குள் பூத்துக் குலுங்க வேண்டும். நமது இலட்சியப் பயணத்தில் கவனத்தைக் கலைப்பவைகளை களைந்து எறிய வேண்டும்.

இங்கு 19ஆம் நூற்றாண்டில் மானிடருக்கு பறக்கும் சக்தியைக் கொடுத்த ‘ரைட்’ சகோதரர்களைப் பற்றி குறிப்பிட விரும்புகின்றேன். வில்பர் ரைட், ஓர்வில் ரைட் என்பவர்கள் அமெரிக்காவில் இண்டியானா மாநிலத்தில் மெல்வில் என்ற ஊரில் பிறந்தார்கள். சராசரி சிறாரைப் போல பறவைகள் பறக்கும் அழகைக் கண்டு வியந்து, பட்டங்களை பறக்கவிட்டு மகிழ்ந்து ‘ஏன் மனிதனும் பறக்கமுடியாது?’ என்ற கேள்விக் கணையைத் தொடுத்து ‘விமானம்’ எனும் குறிக்கோளை நோக்கி வீசினார்கள். முனைப்போடு விரைந்தார்கள். அவர்களின் தீவிரமான கனவு உலகின் பயணமார்க்கத்தையே மாற்றியது. உலகையே சுருக்கி நம் கையில் தரக் காரணமாக அமைந்தது. இத்தனைக்கும் அவர்கள் உயர்நிலைப் பள்ளிப் படிப்பைக் கூட பூர்த்தி செய்யவில்லை. எந்தத் துறையிலும் பட்டம் வாங்கவில்லை. ஏன் அவர்கள் விஞ்ஞானிகளாக கணிக்கப்படவுமில்லை. அவர்கள் தங்கள் இல்லற வாழ்வைத் தியாகம் செய்து, உயிரைக் கூட துச்சமென மதித்து ‘விமானம் செய்து வானில் பறக்க வேண்டும்’ என்ற குறிக்கோளை அடைய அயராது உழைத்தனர். 1903ஆம் ஆண்டு ‘விஞ்ஞானிகள் தமது நேரத்தையும், பணத்தையும் செலவழிக்க வேண்டாம். பறப்பது மனிதனுக்கு இயலாத காரியம்’ என்று New York Times இல் பிரசுரிக்கப்பட்டும் அவர்கள் தங்கள் இலக்கு நோக்கிய பயணத்திலிருந்து சற்றும் நகரவில்லை. 1908ஆம் ஆண்டு, கிட்டி ஹாக்கி என்ற தளத்தில் 57 நிமிடங்கள் பறந்து புகழ் பெற்றார்கள். ஒரு குறிக்கோளை நிர்ணயித்து, அதை அடைவதற்கு இவர்கள் நல்ல எடுத்துக்காட்டாக திகழ்கின்றார்கள்.

நமக்கு நீண்ட குறிக்கோள் இருந்தாலும் அதைப் பல கூறுகளாகப் பிரித்து, காலவரையறை கொடுத்து திட்டமிட்டு முன்னேற வேண்டும். குறிக்கோளைத் திட்டமிடும் போது அதை அடையத் தேவையான கால அளவை தெரிந்து கொள்ள முடியும். கால அளவுக்கு ஏற்றவாறு செயல் முறைகளை வரிசைக் கிரமமாக ஒழுங்குபடுத்தலாம். பின்னடைவுகள் ஏற்படும்போது காரணத்தை கண்டறிந்து மாற்றுவழிகளைக் கையாண்டு முன்னேறலாம். நமது குறிக்கோளை ஒட்டுமொத்தமாக பார்க்கையில் அது மலைக்குவியலாக பெரும் சுமையாக, கனமாக, அடையமுடியா ஒன்றாகத் தென்படும். சிறுபகுதிகளாக பிரித்துப் பார்த்தால் மிக இலகுவானதாக இருக்கும். அத்தோடு ஒரு எதிரியை வெற்றிகொள்ள அவனது பலத்தையும், பலவீனத்தையும் அறிவது எந்தளவு அவசியமானதோ அதேபோல நமது இலட்சியத்தை வெல்ல நமது பலத்தையும், பலவீனத்தையும் ஆய்வு செய்வது மிக அவசியமானது. தினமும் நம்மை சுய ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலமும், பிறர் கருத்துக்களை உள்வாங்குவதன் மூலமும் நமது பலம், பலவீனங்களை அறிவது சாத்தியமாகும். பேராசிரியர் விமலநாத் அவர்கள் நமது பலத்தையும், பலவீனத்தையும் அறிவதால் என்ன இலாபம் என்று பின்வருமாறு கூறுகின்றார்.

“பலத்தை அறிந்து கொள்வதால் குறிக்கோளை உண்மைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நிர்ணயித்து, வெற்றிபெற உதவுகின்றது. பலவீனத்தை அறிந்து கொள்வதால் நிர்ணயத் தடைகளை அறிந்து, அவற்றைத் தவிர்த்துவிட உதவுகின்றது.” இங்கு நாம் இலக்குக்கும், வெறும் கற்பனைக்கும் வித்தியாசம் கண்டு, அறிய வேண்டிய கடப்பாடு உள்ளது. கொழுந்துவிட்டு எரியும் தீவிரமான வைராக்கியத்தோடு செயலூக்கம் கொண்டது இலக்கு அல்லது இலட்சியம். கற்பனை என்பது உறுதியற்ற செயலூக்கமற்ற வெற்று நினைவுகள். அத்தோடு தப்பான இலக்குகளையும், தவறான எடுத்துக்காட்டுகளையும் உதாரணங்களாகக் கொண்டு முன்னேறுபவர்களையும் இந்த அத்தியாயத்தில் கவனத்திற் கொள்ள வேண்டும்.

“வெற்றிபெற எப்போதும் நேர் வழியிலேயே சிந்தித்து, நேர்வழியிலேதான் செல்ல வேண்டும். இலட்சியத்தை அடைய குறுக்குவழியிலே செல்ல நினைத்து, அதன்படி சென்றால் அதற்கான பலன்களும் கெட்டதாகவே வந்து சேரும்” என்கின்றார் ‘முடியும் என்றொரு மந்திரசாவி’ நூலாசிரியர் கே.எஸ்.சுப்பிரமணி. இன்று பலர் கிட்லர், ஒசாமாபின்லேடன், ISIS குழுக்களைப் பார்த்து தமது இலக்குகளை தவறான வழியில் நிர்ணயித்து பின்பற்றுகின்றார்கள். இன்னும் அரசியல், சினிமா பிரபல்யங்களைப்பார்த்து சிலர் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற ரவுடித்தனங்கள் மூலம் மற்றோரைப் பயமுறுத்தி பெரிய பெயர் பெறவேண்டும் என எண்ணுகின்றார்கள். அவர்கள் தாங்கள் செய்வது சரியென நியாயப்படுத்தக் கூடும். ஆனால் உலக நீதி, அறநெறி, விழுமியங்கள் வழி நின்று நோக்குமிடத்து இது தவறானது. தவிர்க்கப்படவேண்டியது. திருத்தப்படவேண்டியது. நமது நடைமுறை வாழ்வில் சிலர் சிறிது காலம் இலக்கை நோக்கி வேகமாக ஓடுவார்கள். பின்பு அதைப் படிப்படியாக கைவிட்டு விடுவார்கள்.

இப்படியானவர்கள் சோடாப் போத்தல் திறந்தவுடன் பீறிட்டுப் பாயும் நுரைபோன்றவர்கள். சின்னவயதில் படித்த ஆமை, முயல் கதையில் வரும் முயல்போல பயணத்தில் தணியாத தாகமும், தளராதவேகமும் இன்றியமையாதவை. அதேவேளை நமது சிந்தனை பெரிதாக இருக்க வேண்டும். ‘நான் ஐன்ஸ்ரன் போல முன்னேற வேண்டும்’ ‘பில்கேற் போல உயரவேண்டும்’ ‘அன்னைதெரேசா, நெல்சன் மண்டேலா போல சமூக சேவை செய்யவேண்டும்’ ‘க.பொ.த. சாதாரண தேர்வில் 9A எடுக்கவேண்டும்’ என்று உயர்வாய் எண்ண வேண்டும். இதையே தான் சிவ்கெரா “நிலவை குறிவையுங்கள் தவறினால் நட்சத்திரங்களாக ஆவது மாறுவீர்கள்” என்று சொல்கின்றார். அதேவேளை அகலக் கால் விரித்து இடறி விழக்கூடாது என்பதிலும் தெளிந்து, திட்டமிட்டு செயற்பட்டால் வெற்றி நமதே.●


# குடும்பம், பெற்றோர், பிள்ளை உறவு

- பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா, உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம் -

## தொடர் - 3

பிள்ளையின் ஆளுமை உருவாகும் ஆரம்பப் பாடசாலை குடும்பமே. திருமணத்திற்கான முன் ஆயத்தம் தாயின் வயிற்றிலே குழந்தை இருக்கும்போதே ஆரம்பிக்கின்றது. "நான் திருமணம் முடித்து கணவனுடன் நிம்மதியாக இருக்கவில்லை. எனக்கு இரு பிள்ளைகள். பிள்ளைகளாலும் எனக்கு நிம்மதியில்லை. சொத்து, பணம் எனக்கு நிறைய உண்டு. நான் திருமணம் முடித்த கணவனின் குறிக்கோள் பணம், சொத்துக்களைச் சேர்ப்பதே. பணத்தில் இருப்பதுபோல் என்னில் அக்கறை இருக்கவில்லை. அதனால் திருமண வாழ்வு ஆரம்பத்திலேயே வெறுத்து விட்டது.

எனது பெற்றோருக்கு மூன்று பிள்ளைகள். இரு ஆண்களும் நானும். அப்பா என்மீது மிகுந்த அன்பாயிருந்தார். அவர் இன்று இறந்துவிட்டார். நான் அப்பாவைப்போன்று எனது கணவன் என்னை அன்பு செய்வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் எனது கணவரோ பணம், சொத்தையே அன்பு செய்தார். இதனால் வாழ்வு வெறுத்தது. ஏன் திருமணம் முடித்தேன், என்று கவலைப்பட்டேன். அப்போது வயிற்றில் கர்ப்பம் தரித்துவிட்டேன். பிள்ளை பிறக்கும்வரை பிள்ளையை வெறுத்தேன். ஒவ்வொருநாளும் கண்ணீருடனேயே தூங்கினேன். பிள்ளை பிறந்தது. நான் ஆண் குழந்தையை எதிர்பார்த்தேன். பிறந்ததோ பெண் குழந்தை. அதுவும் கறுப்பாகப் பிறந்துவிட்டது. பிறந்து பல மணி நேரமாகியும் நான் பிள்ளையைக் கையிலெடுத்து அணைக்கவில்லை. நான்கு வருடங்களின் பின் ஆண்குழந்தை பிறந்தது. எனக்கு ஆண் குழந்தையிலேயே விருப்பம். இரு பிள்ளைகளையும் வளர்க்க இரு வேலைக்காரர்கள் இருந்தனர். பிள்ளைகளை கீழே விளையாடவும் விடுவதில்லை. உணவு ஊட்டியே விடுவேன். அவர்களாக உணவுண்ணவும் பழக்கவில்லை. காரணம் பொறுப்புக் கொடுத்துப் பழக்க எனக்குத்தெரியாது. எனது வீட்டிலும் இரு வேலைக்காரர்கள் இருந்தனர். இப்போது மகள் திருமணம் முடித்துவிட்டாள். அவளது குடும்பத்திலும் பல பிரச்சனைகள். அவளது கணவனும் அவளை அன்பு செய்ய அரவணைக்கவில்லை. அவரும் பணம், பணம் என்றே அலைகின்றார். மகள் வெவ்வேறு அன்புத்தொடர்புகளை ஏற்படுத்தி அன்புக்காக அலைகின்றாள். அவர்களது குடும்பத்திலும் நிம்மதியில்லை. இவை எல்லாமே எனக்கு மன உளைச்சலைத்தருகின்றன. செத்தாலும் நல்லதுபோல் தோன்றுகின்றது. சீ.. என்ன வாழ்க்கை அப்பா" மேற் கூறப்பட்ட அனுபவத்தை நோக்கும்போது பல விடயங்களைச் சிந்திக்க வேண்டியுள்ளது. ஒருவருடைய திருமணவாழ்வு வெற்றிபெறவேண்டுமானால்



1. இருவருக்கும் ஒரே குறிக்கோள் இருக்கவேண்டும்.
2. இருவருக்கும் மன உறுதி இருக்கவேண்டும்.
3. மன முதிர்ச்சி, ஆன்மீக முதிர்ச்சி இருக்கவேண்டும்.
4. முன் ஆயத்தம் நன்றாக இருக்கவேண்டும்.

இங்கு முன் ஆயத்தம் என்பது நீண்டகால ஆயத்தம், நெருங்கிய ஆயத்தம் இரண்டையும் குறிக்கும். நீண்ட கால ஆயத்தம் என்பது என்ன? தாயின் வயிற்றில் பிள்ளை உருவாகிய காலத்திலிருந்தே பிள்ளை பெற்றோரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். எந்த நிறத்தில் பிறந்தாலும், ஆணாகவோ, பெண்ணாகவோ பிறந்தாலும் விருப்பமில்லாத காலத்தில் பிள்ளை உருவாகினாலும் பிள்ளை பிள்ளையாக இருப்பதால் அக்குழந்தையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிள்ளை மற்றவரை ஏற்றுக்கொள்ளும். மதிக்கப்பட்ட பிள்ளை மதிக்கும். அன்பு செய்யப்பட்ட பிள்ளை அன்பு செய்யும். பாராட்டப்பட்ட பிள்ளை மற்றவர்களைப் பாராட்டும். ஆகவே பிள்ளைகளுக்குச் செய்யும் பெரிய சேவை கணவனும், மனைவியும் பிள்ளை, காணும் விதத்தில் ஒற்றுமையாக இருப்பதே. கணவன், மனைவி இருவரும் எந்தநாளும், சண்டைபிடித்ததைக் காணும் பிள்ளை திருமணம் முடித்ததும் அதுவும் சண்டையிடும்.

அடுத்ததாக நெருங்கிய ஆயத்தமாக, வெளி ஆடம்பரத்திற்கு முதலிடம் கொடுத்து ஆன்மீகத்துக்கும், கணவன் மனைவி உறவுக்கும் முதலிடம் கொடுக்காத திருமணங்கள் மிக விரைவில் முறிந்து விடுவதைக் காண்கின்றோம். கணவன் மனைவி உறவு மிகவும் முக்கியம் என்பதைக் கவனத்திற் கொள்வோம். இதைப்பார்த்து எமது பிள்ளைகளும் தமது திருமண வாழ்வை அமைத்துக்கொள்வார்கள். ●

*(அடுத்த இதழில் தொடரும்)*

# விவிலியத்தின் பார்வையில் குடும்ப வாழ்வு

பீலபெல்ட் அன்னை திரேசா பணித்தளத்தில் 23.06.2018 அன்று விவிலியத்தின் பார்வையில் குடும்ப வாழ்வு என்ற தலைப்பில் கருத்தமர்வு காலை 9.30 மணியளவில் சுமார் 40 பேருடன் அருட்பணி. அ. டொனால்ட்டு தலைமையில் இடம் பெற்றது.

முதலில் பங்கு கொண்டவர்களின் வேதாகம அறிவு தரம் பார்க்கப்பட்டது. (எடுத்துக்காட்டாக, ஒரு இறைவாக்கினரின் பெயரைக் கொடுத்து அவரின் மனைவி யார் என்று கண்டு பிடித்தல்.) பின்பு வேதாகமத்தின் அடிப்படையில் உன்னை அறிவாய் என்ற தலைப்பில் இறைவன் எம்மை எவ்வாறு அன்பு செய்கின்றார் என்றும், அவர் நம்மை தமது சாயலாகவும், பாவனையாகவும் படைத்திருக்கின்றார். அவர் எம்மட்டில் எவ்வளவு கவலை கொண்டிருக்கின்றார் என்ற கருத்துரையாடப்பட்டது. இறைவனை அறிந்த மனிதர்கள் எவ்வாறு இறைவனோடு இந்த உறவை வெளிப்படுத்தினார்கள் என்று தாவீது, பவுல் ஆகியோரின் வெளிப்பாட்டின் மூலம் விளக்கப்பட்டது.

தேநீர் இடைவேளையின் பின், திருமணத்தில் தாலியா, மணமக்களா, அல்லது வாக்குத்தத்தமா முக்கியம் என்று ஆராயப்பட்டு, வங்கியிலோ, பெட்டியிலோ வைத்திருக்கும் தாலி அல்ல நாம் இறைவனுக்கு கொடுக்கும் வாக்குத்தத்தமே முக்கியமானது என்று விளக்கம் தரப்பட்டது. வேதாகமம் திருமணத்தை அல்லது கூடி வாழ்வது பற்றி எவற்றை வலியுறுத்துகின்றது என்று விளக்கப்பட்டது. மேலும் திருமணத்தின் பண்பு, ஒற்றுமை, முறிவுபடாத்தன்மை. திருமணத்தின் நோக்கம் அன்பைப் பகிர்தல், குழந்தை பெற்று வளர்த்தல். திருமணத்தின் இலக்கு இறைவார்த்தையை கடத்துதல் அல்லது அறிவித்தல் போன்றவை எடுத்துரைக்கப்பட்டன. மதிய இடைவேளையின் பின் எமது கலாசாரம் மற்றும் புலம் பெயர் கலாசாரத்தில் திருமணத்தின் அல்லது கூடி வாழ்தலின் பார்வை ஆராயப்பட்டது.

பின்பு கணவன், மனைவி, பிள்ளைகள் என்ற மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு கணவன் மனைவியிடமும், மனைவி கணவனிடமும், பிள்ளைகள் பெற்றோரிடமும் எதிர்பார்ப்பது என்ன என்ற கருத்துக்கள் தொகுக்கப்பட்டு வாக்குவாத மேடை நடைபெற்றது. அதில் முக்கியமாக கணவர்கள், மனைவியரிடம் பொறுமை விட்டுக் கொடுப்பு, கணவரின் உழைப்பில் சாமர்த்தியமாக வாழ்தல் போன்ற பண்புகள் இருக்க வேண்டும் என்ற கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

மனைவியரிடம் இருந்து அன்பு, புரிந்துணர்வு, வேலைகளைப் பகிர்ந்து செய்தல், குடும்பத்திற்காக நேரம் ஒதுக்குதல் போன்ற பண்புகள் கணவர்மாரிடம் இருக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது. பிள்ளைகளின் சார்பில், அவர்கள் சொல்வதையும் பெற்றோர் கேட்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

தேநீர் இடைவேளையைத் தொடர்ந்து விளையாட்டுக்கள் நடைபெற்றன. மாலை, வாட்டியஉணவுப் பரிமாற்றம் நடைபெற்றது. முடிவில் எல்லோரும் தங்களுக்கு இருந்த கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். பின் செபத்துடனும் நன்றிப் பாடலுடனும் இனிதே நிறைவு பெற்றது. ●

# காரணத்தோடு படைத்தார் கடவுள்

அருட்பணி. ம. மரிசுதன். செபமாலைதாசர் சபை.

இறைவன் அழகு மிளிரும் பிரபஞ்சத்தையும், அதில் உள்ள அனைத்தையும் படைத்தார் (கொலோ 1:16). அவர் எல்லாம் நல்லதெனக் கண்டார். அமெரிக்க உளவியல் அறிஞர், வெற்றிமுறை ஆலோசகர் எம்.ஆர்.காப்மேயர் "பிரபஞ்சத்தில் உள்ள கிரகங்களிலிருந்து எலக்ட்ரான்கள் வரை எல்லாமே சிறப்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பிரச்சினைகளே இல்லை. எல்லாமே முழுமை பெற்ற இயக்கம். அதுதான் பரம்பொருள் பரிபூரணமானது" என 'எண்ணங்களை மேம்படுத்துங்கள்' என்ற நூலில் பதிவு செய்கின்றார். கடவுள் மரம், செடி, கொடிகள், பறவைகள், மிருகங்கள், ஆகாயம், ஆறு, கடல், மலை எல்லாவற்றையும் காரணத்தோடு படைத்தார். காரணம் இன்றி எதையும் படைக்கவில்லை. அனைத்திலும் மேலாக மானிட பிறவி என்பது கிடைத்தற்கரிய உன்னதமான கொடை. ஏனெனில் மனிதனே இறைவன் படைப்பில் சிகரமாக திகழ்கின்றான். ஒவ்வொரு மனிதனையும் அவர் அதி சிறந்தவனாக, தனது ஒப்புயர்வற்ற சாயலில், பாவனையில் உருவாக்கியிருக்கின்றார். றிக்வொறன் என்ற ஆன்மீக எழுத்தாளர் 'இவ்வுலகில் நான் எதற்காக இருக்கின்றேன்' (what on Earth am I here for?) என்ற நூலில் "உனது பிறப்பு தவறோ. விபத்தோ இயற்கையின் அதிஷ்டமோ அல்ல. உனது பெற்றோர் அதை திட்டமிடாமல் இருந்திருக்கலாம். ஆனால் கடவுள் திட்டமிட்டார். கடவுள் உனது பிறப்பால் ஆச்சரியப்படவில்லை. அது அவர் எதிர்பார்த்த ஒன்று" என்று குறிப்பிடுகின்றார்.

இன்று நம்மில் பலர் 'ஏன் தான் பிறந்தோமோ, கருவிலேயே கலைந்திருக்கலாம்' 'வாழ்ந்து என்ன செய்யப் போகின்றோம்.? செத்துத் தொலையலாமே!' 'கடவுள் ஏன் என்னைப் படைத்தார். சதா துன்பப்படவா' என்று நொந்து கொள்கின்றோம். வாழ்வின் சூட்சுமம் புரியாது விரக்தியின் விளிம்பிற்குச் செல்கின்றோம். இன்னும் சிலர் தினமும் அதே செயல்களையே (Routine Life) திரும்ப, திரும்பச் செய்து சடப்பொருளாகி, சாவுவரு முன்னே செத்துக் கொண்டிருக்கிறார்கள். "கடவுளின் அளவற்ற ஆற்றலில் இருந்து தெறித்து, விழுந்த பொறிகள் நாம். எங்ஙனம் ஆற்றல் அற்றவராய் இருக்க முடியும்" என விவேகானந்தா அடிகள் மொழிந்தார். கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் பல ஆற்றல்கள், திறமைகளை இலவசமாகத் தந்திருக்கின்றார். பலருக்கு பேச்சாற்றல், எழுத்தாற்றல், இசைக் கருவிகள் மீட்டும் ஆற்றல். வேறு சிலருக்கு நடிப்புத் திறமை, நிர்வாகத் திறமை, பாடுகின்ற திறமை, ஆடுகின்ற திறமை இன்னும் சிலருக்கு விளையாட்டுத் துறையில் ஆர்வம் என இப்பட்டியல் நீண்டுகொண்டே போகும்.



மகாகவி இக்பால் "இளம் பிறையே வருந்தாதே உனக்குள்ளே தான் பூரண சந்திரன் புதைந்திருக்கின்றான்" என்று சொன்னார். ஆக மொத்தத்தில் நமக்குள் பல தொட்டனைத்தூறும் ஜீவநதிகள் ஊற்றெடுக்கின்றன என்பதை அறிவோமா? நாம் முத்துக்கள் நிறைந்த சமுத்திரம். ஏன் கிளிஞ்சல்களைத் தேடி அலைய வேண்டும்?

'எனக்கு ஆற்றல் எதுவும் இல்லை' 'நீ ஒன்றுக்கும் உதவாதவன், உதவாதவள்' என்று யாரும், யாரையும் சொல்லமுடியாது. "குழந்தைகளை 'மக்கு', 'மண்டு' என்றெல்லாம் திட்டாதீர்கள். அது ஊற்றுக் கண்ணில் மண் அள்ளிப் போடுவதாகும்." இது கவிக்கோ அப்துல் ரகுமானின் வார்த்தைகள். அவ்வாறு சொல்லும் போது நாம் படைத்தவரையே இழிவுபடுத்துகின்றோம். கை, கால், கண் இல்லாதவராக பிறந்தவர்கள் கூட பல மாற்றுத் திறன்களோடு பிறந்து, சாதனைத் தடம்பதிக்கின்றார்கள். அல்பேட் ஐன்ஸ்ரன் (Albert Insten) மூன்று வயதுவரை வாய் பேசாதவராக, கற்பதில் மந்தமாகவும் இருந்தார். ஆனால் அவரே பிற்காலத்தில் சார்பியல் கோட்பாட்டை (The theory of Relativity) நிறுவி, நிரூபித்தும்காட்டினார். 1921ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்று, இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான அறிவியலாளராக தன்னிகரற்ற விஞ்ஞானியாக எண்ணப்பட்டார். மேலைத்தேய செவ்விசை இயக்குநரும், சிறந்த இசையமைப்பாளருமான பீத்தோவனுக்கு (Ludwig van Beethovan) இருபத்தாறு வயதில் காதுகேளாமை நோய் ஏற்பட்டது. இது ஒரு இசையமைப்பாளருக்கு வரக்கூடாத நோய். இந்தக் காலத்திலேயே சிறந்த இசை ஆக்கங்களை குறிப்பாக மூன்று உலகப் புகழ்பெற்ற இசை வடிவங்களை உருவாக்கினார். இந்த வகையில் நமக்கும் வானம் வசப்படும் என்பதில் ஐயமில்லை. ஆக ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கும், நோக்கத்திற்கும் ஏற்ப ஆற்றல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நமக்கு கொடுக்கப்பட்டுள்ள தனித்துவமான ஆற்றல்களை இனங்கண்டு கொள்ளுதல் அவசியம். சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்ற மூத்தோர் மொழிக்கேற்ப ஆற்றல்கள் மழுங்கி, துருப்பிடியா வண்ணம் வளர்க்கவேண்டும். நமது ஆற்றல்களை வளர்க்காவிடில் அவை மங்கி, மறைந்துவிடும் என்பது அனுபவ உண்மை. அடுத்து, நம்மிடம் இருக்கும் ஆற்றல்கள், திறமைகள் பொது நன்மைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டியவை. அவற்றை நமது சுயநலனுக்காக பயன்படுத்தும்போது அவற்றின் நோக்கம் ஒருபோதும் நிறைவேறாது. நம் ஆற்றல்கள் பொது நன்மைக்காக, பரந்த மனப்பான்மையோடு உபயோகிக்கப்படும் போது தான் நிறை பலனைத் தருகின்றது. எடுத்துக்காட்டாக எனக்குத் தெரிந்த அறிவை மற்றவருக்குச் சொல்லிக் கொடுக்கும்போது தான் எனது அறிவும் விருத்தியடைகின்றது.

எனது ஞானத்தை, திறனார்ந்த தன்மையை இன்னொரு சந்ததிக்கு நான் விட்டுச் செல்கின்றேன். நமது ஆற்றலை வளர்த்துக் கொள்கையில் பெருமை பாராட்டாது அதிமேதாவித்தனம் இல்லாது நடக்கக் கற்றுக் கொள்ளுதல் அவசியம். ஏனென்றால் அவற்றிற்கு நாம் வெறும் கண்காணிப்பாளர் மாத்திரமே. உரிமையாளர் கடவுளே. இன்றைய சமுதாயத்தில் பெற்றோர் தம் விருப்பு வெறுப்புக்களை பிள்ளைகள் மீது திணிப்பதும் தவறே. நம்முடைய பிள்ளைகளை நாம் கொத்தடிமைகளாக நடத்துகின்றோம். அவர்களுடைய விருப்பு, வெறுப்புக்களுக்கு எள்ளளவு மரியாதை கூடத் தருவதில்லை.

நாம் எப்படி விரும்புகின்றோமோ அப்படித்தான் அவர்கள் இருக்கவேண்டும் என்று நினைக்கின்றோம். கொடுமையான சர்வாதிகாரிகளைப் போல அவர்களை அடக்கி ஆள்கின்றோம். என்று கவிக்கோ அப்துல் ரகுமான் இன்றைய கீழைத்தேய பெற்றோரைச் சாடுகின்றார். எனவே, பெற்றோர் தமது பிள்ளைகளது விருப்பு, வெறுப்புகளுக்கு இடமளித்து, அவர்களது ஆற்றல்களை வளர்க்கும் போது ஆரோக்கியமான சமுதாயம் ஒளிமயமான எதிர்காலம் உருவாகும் என்பது வெள்ளிடை மலை. ●

## மறைமாவட்ட ஆணைக்குழுக்கள்

# மன்னார் மறைமாவட்ட மரியாயின் சேனையினர் நடாத்தும் மறைமாவட்ட செபமாலைப் பேரணி





மன்னார் மறைமாவட்ட மரியாயின் சேனையினர் சகல குடும்பங்களோடு இணைந்து முன்னெடுத்த செபமாலைப் பேரணியானது வவுனியா மறைக்கோட்டத்திலுள்ள செட்டிகுளம் மற்றும் இலுக்பைக்குளம் பங்குகளோடு இணைந்து இம்முறை ஆறாவது வருடமாக 14.10.2018 ஞாயிறு மாலை 3.30 மணிக்கு இலுப்பைக்குளம் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் அருட்பணி தேவராஜா அ.ம.தி அடிகளாரின் ஆரம்பச் செபத்துடன் ஆரம்பமானது.

➡ 15

# உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்



கடந்த ஒக்ரோபம் மாதம் 05ஆம் திகதி முன்பள்ளி ஆசிரிய 2018ஆம் ஆண்டுக்கான உலக ஆசிரியர் தின நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. அ.விக்ரர் சோசை அடிகளார் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக மறைமாவட்ட சமுக தொடர்பு ஆணைக்குழு இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமாகிய அருட்பணி. அ.லக்ஸ்ரன் டி சில்வா அடிகளார் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்வு முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. மன்னார் மறைமாவட்டம் கடந்த 35 ஆண்டுகளாக முன்பள்ளிகளை நடாத்தி வருகின்றது. முதல் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு வாழ்வுதயம், கறிற்றாஸ்-மன்னார் நிறுவனத்தினால் மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களின் முன்பள்ளிகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து வந்த எம் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் யுத்தத்தின் காலத்திலும், மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் இம் முன்பள்ளிகளை மறைமாவட்டம் நடாத்த வேண்டும் என்று தன்னால் ஆன எல்லா உதவிகளையும் பெற்று இம் முன்பள்ளிகளை அவர் நடாத்தி வந்தார்.

➡ 15

# தொன் போஸ்கோ முருங்கனில்

## கேம்பிரிஜ் பல்கலைக்கழக ஆங்கில கற்கைநெறி



கடந்த யூன் மாதத்திலிருந்து முருங்கன் தொன் போஸ்கோ நிறுவனத்தை பொறுப்பேற்றிருக்கும் அருட்பணி வர்கீஸ் அடிகளாரை அன்போடு வாழ்த்துகின்றோம். உயர்தர கல்வி கற்கும் மாணவர்கள், பரீட்சை எழுதிய மாணவர்கள் ஆகியோரின் எதிர்கால உயர்கல்வி, தொழில் வாய்ப்பு சிறக்கும் வகையில் அவர்களின் ஆங்கில அறிவிற்கேற்றவாறு கேம்பிரிஜ் பல்கலைக்கழக ஆங்கிலக் கற்கைநெறி நடாத்தப்படுகின்றது.

இக்கற்கை நெறியில் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து 65 மாணவ மாணவிகள் சிறந்த முறையில் கல்வி பயில்கின்றனர் என்பதில் தொன் போஸ்கோ முருங்கன் சமூகம் பெருமிதம் கொள்கின்றது.

அருட்தந்தை மரிய ஆரோக்கியராஜ் (BA, MA, PhD), திரு. லியோ மரிய பிரான்சிஸ் (BA,MA,MPhil), திரு. மரியன்ரினேரோ (BL, ML), அருட்தந்தை வர்கீஸ் (MSc PhD), அருட்தந்தை ஜோர்ஜ் (BA), ஆகியோர் இக்கற்கைநெறியின் விரிவுரையாளர்களாகவும், திருமதி. சிந்துஜா யூலியஸ் இக் கற்கைநெறியின் இணைப்பாளர்களாகவும் பணியாற்றுகின்றனர்.

இக்கற்கை நெறியை ஆரம்பித்து நடாத்துவதற்கு பல வழிகளில் உதவி செய்கின்ற மன்னார் மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர், குருக்கள் அனைவருக்கும் மற்றும் அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் எமது நன்றிகளும் செபங்களும்.

இயக்குனர், தொன் போஸ்கோ, முருங்கன்.●

**புதிய அலுவலக விலாசம்:**
மன்னா பத்திரிகை அலுவலகம்,
கலையருவி, இல: 202,
தலைமன்னார் வீதி, மன்னார்.

# விடியலை நோக்கிய எம்மவர் பயணம்

## - திரு. S.A. ஜெஸ்ரீன், நெடுங்கண்டல், அடம்பன் -

காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடர் ஒளி உதித்தது. (ஏசா9:2) அந்நியர் ஆட்சியில் இருந்து விடுபட்ட எம் நாட்டை, தொடர்ந்தும் ஆட்சி மோகத்தால் ஓர் இனத்தை அடிமைப்படுத்த ஆண்டான் - அடிமை கலாசாரத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்க எத்தனிக்கும் நகைப்பிற்குரிய அரசியல் கலாசாரத்தில் எம்மவர் வாழும் நிலை உதித்துள்ளது என்றால் அது மிகையாகாது.

அன்று அடிமைத்தனத்திலிருந்த இஸ்ராயேல் மக்கள் எகிப்தியரின் கையிலிருந்து விடுபடுவதற்கு இறைவன் மோசே ஊடாக செய்த மாபெரும் காரியம் வியக்கத்தக்கது. வரலாற்றில் எம்மவர் செய்த மாபெரும் தவறு தான் என்ன? இஸ்ராயேல் மக்களின் அடிமைத்தனத்திற்கு வேதாகமம் பல காரணங்களை சொல்லுகின்றது. அதற்கான தீர்வையும் வெளிப்படையாக எடுத்துக் கூறுகின்றது. கடல் கடந்து வந்து இஸ்ராயேல் மக்களை பார்வோன் பிடியில் இருந்து விடுவித்தார் இறைவன். பல தடவைகள் எம்மவர்கள் கடல் கடந்து சென்று வந்த போதும் எமது கதை இன்னும் தொடர்கதையாகவே உள்ளது. இதற்கான காரணத்தை யாரால் சொல்ல முடியும்?

காலம் கடந்த அரசியல் தலைவர்கள் செய்வதறியாது திக்குமுக்காடி இருப்பதை அறிய முடிகின்றது. சிறுபான்மை என்ற நாமத்தால் சதாகாலமும் அழைக்கப்படும் நாம் கடந்த காலத்தில் செய்த குற்றம் தான் என்ன? எமது இனம் காலத்தை அதன் போக்கில் காற்றில் போகவிட்டு மீண்டும், மீண்டும் வருத்தப்பட்டுக் கொண்டே வருகின்றது. முப்பது வருடகால யுத்தம். அதன் விளைவாக எமது இனம் சந்தித்த பின்னடைவுகள், பாதிப்புக்கள், இழப்புக்கள் ஏராளம். தமிழ் எனும் எமது மகத்தான பாரம்பரிய கலாசாரம் திட்டமிட்டு திருடப்பட்டுள்ளது. எமது கல்வியில் பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. அரசியலில் தட்டுத்தடுமாறிக் கொண்டு இருக்கின்றோம். ஒற்றுமை என்பது எம்மினத்திலும் கானல் நீராக காணப்படுகின்றது. தமிழர்கள் என்ற பொதுப்பதம் மாற்றமடைந்து, சுயநலம் தலைவிரித்து ஆடுகின்ற நிலைமை தோற்றம் பெற்றுள்ளது. “பாவத்தின் சம்பளம் மரணம்” என இறைவார்த்தை சொல்லுகின்றது. பாவத்தின் வகைகள் புதிது புதிதாக பரிணாம வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன. பாவமானது பல துறைகளிலும் பவ்வியமாக படுத்துறங்குவதை எம்மால் காணமுடிகின்றது. எது பாவம் என கண்டுபிடிக்க முடியாத “இலத்திரனியல் பாவங்கள்” உருப்பெற்றுள்ளது. சரித்திரம் படைக்க அழைக்கப்படுகின்ற இளைஞர்களின் கரங்களில் சரித்திர நாவல்கள் தவழ்வதற்கு மாற்றீடாக போதைப் பொருள் பாவனை நாளுக்கு நாள் அதிகரிப்பதை காணமுடிகின்றது. பாடசாலை மாணவர்களும் இதற்கு இலக்காகின்றனர். தொலைபேசியால் எமது மக்கள் பல தொல்லைகளை சந்திக்க நேருகின்றது.



“வாழ்வும், வழியும் உண்மையும் நானே” என்ற இறை மகனின் கூற்றை மறந்து, எமது கால் போன போக்கில் நடைபோட்டு, எமக்கு என்ற ஓர் பாதையமைத்து எம் அழிவுக்கு நாமே பொறுப்பாளிகளாக காணப்படுகின்றோம். எம்மை நம்பி வாழ்கின்ற சிறார்கள் பிழையான வழியில் நடாத்தப்படுவதை எம்மால் புரிந்து கொள்ள முடியாத நிலை உள்ளது.

வாரம் ஒரு முறை சிறுவர் துஸ்பிரயோகம், “வேலியே பயிரை மேய்கின்ற” நிகழ்வுகள் நடந்தேறுகின்றன. இதற்கு காரணம் என்ன என்று கேட்டால் பலரின் பதில் இவ்வாறு அமைகின்றது: காலம் மாறிவிட்டது அல்லது போதைப் பொருளின் கட்டுக்கடங்காத பாவனை, வலைத்தளங்களின் ஊடுருவல் என பல காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் இவை எல்லாம் வெறும் நொண்டிச் சாட்டுக்களாகவே எம்மால் காணமுடிகின்றது. இறைவன் மனிதனை தன் உருவிலும், சாயலிலும் படைத்தார். எல்லா உயிரினங்களைவிட மேலான ஓர் அறிவாக பகுத்தறிவைக் கொடுத்தார். ஆனால் மனிதன் பகுத்தறிவை பவித்திரமாக பூட்டி வைத்த வண்ணம் தான்தோன்றித்தனமாக வாழ்வதை எம்மால் காண முடிகின்றது. வாழ்க்கை என்பது இறைவனின் மாபொரும் கொடை. அதனை அழகாக்குவதும், அசிங்கப்படுத்துவதும் மானிடர் எம் கரங்களில் தான் உள்ளது. உணர்வுகள் மனிதனுக்கு இறைவனால் உன்னத நோக்கங்களுக்காக கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவை இன்று மதிப்பிழந்து, மாண்பிழந்து மரணித்து போகின்ற சந்தர்ப்பங்களும் ஏராளம். யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்கி, இறைவனால் நேசிக்கப்படுகின்ற, அன்பு செய்யப்படுகின்ற சிறுவர்கள் சித்திரவதைக்குட்பட்டு கொல்லப்படுகின்ற போது எமது உணர்வுகள் வெறுமனே ஐயோ பாவம் என்ற வார்த்தைக்குள் வலுவிழந்து விடுவதை காணலாம். உலகில் மிக உயர்ந்த சபைகள், நிறுவனங்கள் தங்கள் உணர்வுகளை ஓர் கடமையின் நிமித்தம் வெளிக் கொணர்கின்றனவே ஒழிய அதனைத் தடுக்க முயற்சி எடுப்பதில் பின்னிற்பதை எம்மால் காண முடிகின்றது. எங்கு பார்த்தாலும் அரசியல் சாயம் பூசப்பட்ட நிகழ்வுகள் நடந்தேறுவதைக் கண்கூடாகக் காணமுடிகின்றது. அன்று எருசலேம் நகர் முழுவதும், புறவினத்தவர் மத்தியிலும் விண்ணரசை நிலைநிறுத்த தன் பொற்பாதம் மண்ணில் பதித்து விண்ணரசின் செய்தி சொன்ன எம்பரன் இயேசுவின் மனநிலை எம் தலைவர்கள் மத்தியில் கானல் நீராயிருப்பதை காண முடிகின்றது. எங்கு பார்த்தாலும் சுயநலமும், ஊழலும் கோரத்தாண்டவம் ஆடுவதை எம்மால் காண முடிகின்றது. இவ்வாறான நிலையில் இறைவன் எமக்குக் கொடுத்த செய்தி மிகச் சாதாரணமானது.

எனவே இறையரசின் சாட்சிகளான இறைசாயலைப் பெற்ற நாம் உடனடியாக செயற்பட வேண்டிய கட்டாயத்திற்கு உட்பட்டுள்ளோம். ஒன்றுபட்டு சமூக சவால்களுக்கு பதிலடி கொடுக்க மீண்டும் எழுந்து செயற்படுவோம். சாந்தி, சமாதானம், சமத்துவம், சமூக எதிர்மறையான நோய்களுக்கெதிரான போராட்டம், இலத்திரனியல் பாவங்களுக்கெதிரான சமர்களுக்கு தயாராகுவோம். செயலிழந்த ஆயுதப்போராட்டம் பற்றி பேசிப் பயனில்லை என்றாகிவிட்டது. எனவே இறை சமூகமாக எந்த நிலமையில் இருந்தாலும் நாம் தொழில் செய்கின்ற இடத்திலும், வீடுகளிலும் சந்திக்கின்ற நபர்களிடையேயும் விழிப்புணர்வை ஊட்டி சவாலான சமூகத்தை உருவாக்குவோம்●

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்



காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள்.

தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

**மன்னா வாசகர்களே,**
மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## அதிர்வுகளைத் தந்த அருட்தந்தைக்கு...

மாதம் ஒருமுறை மன்னா
என் கை வந்து சேரும்.
அதிர்வுகளின் பக்கத்தினை
என் விரல்கள் தேடிப்பிரிக்கும்.
வரி வரியாய் நான் வாசித்த பின்பே
எனக்குள் நானே சிந்தித்துக் கொள்வேன்.

அருட்பணி. அன்புராசாவை - நான்
சந்திக்கும் பல வேளை
பணிவுடன் பல கதை பேசியதுண்டு.
அப்போதெல்லாம் என் பணிவின் அர்த்தம்
எங்கே தெரிந்திருக்கவில்லை.
இப்போதுதான் புரிந்து கொண்டேன்
ஆன்மீகவாதிக்கும், ஒரு எழுத்தாளனுக்கும்
நான் அடிமை என்று.

அதிர்வுகள் செய்தித்தாளின் பக்கங்களை
மட்டுமல்லபலரது இதயங்களைத்
தட்டியே அதிரவைத்தது
தந்தையே! சிந்தனை எனும் கருவை
எழுதுகோல் என்னும் உளி கொண்டு
செதுக்கிய ஆன்மீக சிற்பி நீ!

தொடருகின்ற உந்தன் பணி வாழ்வில்
ஆன்மீகமும், சமூகமும் சார்ந்த
இன்னுமொரு பரிணாம எழுச்சியை
உன் பேனா எழுதிட வேண்டும்.
விதைத்தவன் உறங்கி விட்டாலும்
விதைகள் உறங்கி விடுமோ.

***அ. வேதநாயகம், பிச்சகுளம்***



## தேடுகிறேன் தேவனே தேடுகிறேன்!

எங்கே போய் விட்டீர் இறைவா.............!
எங்கும் உம்மை ஏங்கித் தேடுகின்றேன்.......!

வானத்திரையில் கதிரவன் வட்டமுகம் காட்டும்
வேளையிலே,
வண்ண வண்ணக் கலவையுடன்
விடைபெறும் வேளையிலே,
வழிபாட்டின் நேரத்திலே,
வல்லவா தேடுகின்றேன்!

கனவிலே, விழிப்பிலே, கடவுளே தேடுகிறேன்!
காயப்பட்ட நெஞ்சை, காய்ந்து சருகான
நெஞ்சை
கையால் நீர் தொட வேண்டும் ஐயா!

நாளெல்லாம் அதற்காக தேடுகிறேன்!
நலமான பின் நன்றி இசைக்க நாடுகின்றேன்!

வேதனை இருட்டு விலகாத நேரத்திலும்
புன்னகை மின்னல் எப்போதாவது
என்முகவானில்
மின்னியிருக்கலாம் நன்றி உமக்கு!

தாயின் அணைப்பிலே, தந்தையின் மடியிலே
தேவனே உம்மை தேடுகின்றேன்!
என் காலைப்பற்றிச் சாவு இழுக்கையில்
மன்னவா உம் கையை பற்றி நான்
இழுப்பேன்!

வாரும் அருகே வலக்கை பற்றும்! எங்கே
அழைத்துச் செல்ல இனி விரும்புகிறீரோ!
இதோ அங்கே வருகிறேன்!

ஈன்றவளின் கை பற்றும் இளம்பிஞ்சுபோல்,
இறைவா எட்டிப்பிடிக்கிறேன் உம்மை
இரக்கம் காட்டும், இருகை நீட்டும்!

***அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்***

## மன்னா பத்திரிகை

அன்று -
மோசே காலத்தில்
மன்னா பொழிந்தது.
மக்களின் உணவாக.
இன்று -
மன்னாரில்
"மன்னா" பொழிகிறது.
மக்களின்
மனதில் நிறைந்த
மாத இதழாக.


அன்று -
விசுவாசம் விதைக்கப்பட்டது
மன்னாரில்.
இன்று -
அதே விசுவாசம்
வளர்க்கப்படுகிறது
"மன்னா" இதழ் ஊடாக.

மாண்புள்ள மனுமகன்
மன்னர் இயேசுவிற்கு
மன்னாரில் மகிமைசேர்க்கும்
மன்னா இதழுக்கு
மனங்கனிந்த
மங்கள வாழ்த்துக்கள்.

செபமாலை அன்னை,
கருணை மிகு அன்னை,
மருத மடு அன்னைக்கு,
அன்னையின்
சொந்த மண்ணில்
மகிமை சேர்க்கும்
மன்னா இதழுக்கு
மனங்கனிந்த
மங்கள வாழ்த்துக்கள்

***பென்ஜமின் சோமநாதர் தெஹிவளை***

# கொஞ்சம் சிரிங்க



**மாமியார்** : மருமகளோடு சேர்ந்து உட்கார்ந்து மெகா சீரியல் பார்க்கிறதை விட்டுவிட்டேன்.
**மற்றவர்** : ஏன்?
**மாமியார்** : சீரியல்ல வர்ற மாமியாரைத் திட்டுற மாதிரி என்னைத் திட்டுறா.

* * * * *

**காதலி:** அன்பே! எனக்கு எப்போது தாஜ்மஹால் கட்டுவீர்கள்?
**காதலன்:** இடமெல்லாம் ஓகே.. ஆனால்...
**காதலி:** ஆனால்.. என்ன தயக்கம்?
**காதலன்:** நீ மட்டும் செத்துப்போனால் உடனே கட்டிடுவேன்.

* * * * *

**வடிவேலு:** மச்சான்! எவ்வளவு தண்ணியடிச்சும் போதையேரல மச்சான்!
**அப்பா:** எப்படிடா ஏறும்!! நான் உன்னோட அப்பன்டா!!
**வடிவேலு:** மச்சான் நீயெப்படா பேர் மாத்துன??
**அப்பா:** ???

* * * * *

**மனைவி:** கொஞ்ச நாளைக்கு என்கூடச் சந்தோஷமா இருக்கிறமாதிரி நடிங்க.
**கணவன்:** ஏன்?
**மனைவி:** அதைப் பார்த்துட்டுத்தான் கண்ணை மூடுவேன்னு உங்கம்மா அடம் பிடிக்கிறாங்களே.

**நோயாளி:** டொக்டர் என்னால் கீழே குனியவே முடியுது இல்ல.
**டாக்டர்:** ஏன் வீணா கீழே குனியிறீங்க?
**நோயாளி:** என் பெண்டாட்டி அடிக்கிற அடிக்கு கீழ குனியாட்டி என் தலை போயிரும் டொக்டர்.

* * * * *

**ஆசிரியர்** : பரீட்சை மண்டபத்தில் இருந்துக்கிட்டு என்னடா பக்கத்தில் பேச்சு?
**மாணவன்** : சந்தேகம் கேட்டேன் ரீச்சர்.
**ஆசிரியர்** : என்னடா சந்தேகம் அது? என்னிடம் கேள்
**மாணவன்** : இன்றைக்கு என்ன பாடம் ரீசர் பரீட்சை? தமிழா? கணக்கா?

* * * * *

**மகன்:** அப்பா உங்க பேர காப்பாத்துற மாதிரி இன்னிக்கு ஒன்று செஞ்சுட்டேன்பா....
**அப்பா:** சபாஷ்டா மகனே.... அப்படி என்னடா செஞ்ச..?
**மகன்:** எவ்வளவோ அடி வாங்கியும், என் பொண்டாட்டியை...! திருப்பி ஒரு அடிகூட அடிக்கலையப்பா

# மன்னா விளம்பரப் பலகை

"உன் கை ரேகையைப் பார்த்து எதிர்காலத்தை நிர்ணயித்து விடாதே..! ஏனென்றால், கையே இல்லாதவனுக்குக் கூட எதிர்காலம் உண்டு."

"தூய்மையாக இருப்பதும், மற்றவர்களுக்கு நன்மை செய்வதும்தான் எல்லா வழிபாடுகளின் சாரமாகும்."

......................................

நீ வீணாக்கும் உணவு மற்றொருவரின் உணவு என்பதை மறந்துவிடாதே!

......................................

எதுவுமே செய்யாமல் இருப்பவன் மட்டுமே சோம்பேறியல்ல, தன்னால் முடிந்ததைச் செய்யாமல் இருப்பவனும் சோம்பேறியே...!

"நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது பெரிது,
உயிரைக் கொடுக்க நண்பன் கிடைப்பது அரிது"

......................................

"சந்தேகம் வந்துவிட்டால், அது கிளர்ந்தெழும் எரிமலையைப் போலவும், தொலைவில் நின்று தாக்கும் எறிகுண்டை விடவும் மன உழைச்சலை ஏற்படுத்தும் கொடிய நோய்"

..........................................

பலரை சில காலமும், சிலரை பல காலமும் ஏமாற்றலாம். ஆனால். எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது.

யார் கடவுள்? பக்திக்குப் பலி கேட்பவனா? பசிக்கு உணவளிப்பவனா? சிந்தித்துப்பார்.

"நீ செல்லும் பாதையில் தடைகள் ஏதும் இல்லை என்றால்... அது நீ செல்லும் பாதையல்ல, யாரோ ஒருவர் சென்ற பாதை"......!

# மருத்துவக் குறிப்புக்கள்



- இரவில் மூக்கடைப்புக்கு மின் விசிறியின் நேர் கீழே படுக்க வேண்டாம். சற்று உயரமான தலையணை பயன்படுத்தவும். மல்லாந்து படுக்கும்போது மூக்கடைப்பு அதிகமாகும். பக்கவாட்டில் படுக்கவும். காலையில் பல் தேய்க்கும்போது நாக்கு வழித்து விட்டு மூன்று முறை மூக்கைச் சிந்தவும். சுவாசப் பாதையைச் சுத்தப்படுத்த நமது முன்னோர் காட்டிய வழி இது.
- வெண்டைக்காயை உணவில் அடிக்கடி சேர்த்து வந்தால் நரம்புகள் வலிமை பெறும். மூளையின் இயக்கத்தைச் செம்மைப்படுத்துவதுடன் நல்ல ஞாபக சக்தியையும் உண்டாக்கும்.
- சுக்கு, மிளகு, திப்பிலி, தாமரை இதழ், வெல்லம் சேர்த்து தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து வடிகட்டி இரவில் ஒரு டம்ளர் சாப்பிடுவதால் மாரடைப்பைத் தடுக்கலாம்.
- வெள்ளைப் பூசணிக்காயை பூந்துருவலாக துருவி, உப்பு சேர்த்து இஞ்சி, பச்சை மிளகாய், கொத்தமல்லி, கருவேப்பிலை, கடுகு, தாளித்து தயிரில் கலந்து தயிர்ப் பச்சடியாக சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும். பூசணிக்காய் இரத்தக்கொதிப்பு, கொலஸ்ட்ரோல், தலைச்சுற்றல் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும்.
- கை சுளுக்கு உள்ளவர்கள் நீரில் மிளகுத் தூளையும், கற்பூரத்தையும் போட்டுக் கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரைத் துணியில் நனைத்துச் சுளுக்கு உள்ள இடத்தின் மீது போடுங்கள். அல்லது டர்ப்பன்டைன் எண்ணெயைத் தடவினாலும் சுளுக்கு விட்டு விடும்.
- அறுகம்புல் சாறை மோருடன் குடித்தால் நீரிழிவு குறையும். உலர் திராட்சைப் பழத்தை வெது வெதுப்பான தண்ணீரில் அரை மணி நேரம் ஊறவைத்து காலையில் அருந்தினால் மாதவிடாய்க் கோளாறுகள், இதய நோய் தீரும்.
- புடலங்காயின் இலைச்சாறு, காலையில் குழந்தைகளுக்குத் தருவதால் கக்குவான், இருமல் குணமாகும். மலச்சிக்கல் நீங்கும். புடலங்காய் சமைத்து உண்பதால் தேவையில்லாத உடல் பருமன் குறையலாம்
- கேரட் சாறும் சிறிது தேனும் பருகி வந்தால் கர்ப்பிணிப் பெண்களுக்கு வாந்தி மட்டுப்படும். எலுமிச்சை பழச் சாற்றில் ரசம் செய்து சாப்பிட்டால் உஷ்ணம் குறையும். கடுகை அரைத்து வலியுள்ள பகுதியில் போட்டால் வலி குறைந்து விடும்.
- நுரையீரல் சம்பந்தமான நோய்கள் குணமாக வெற்றிலைச் சாற்றில் இஞ்சி சாற்றை சேர்த்து குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். எள்ளில் இருந்து வரும் நல்லெண்ணெய்யைக் கொடுக்க உடல் இளைத்துக் காணப்படுபவர்கள் தேறி, உடல் எடை அதிகரிக்கும்.
- இருமல் என்பது நுரையீரலை பாதுகாக்க நிகழும் ஒரு இயற்கையான நிகழ்வு. நுரையீரல் பாதையில் கிருமிகள் மற்றும் புகையினால் ஏற்படும் அரிப்பினைப் போக்குவதற்காக இருமல் உண்டாகின்றது. இருமல் மூலம் நோய் தொற்று ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம்.

*- நன்றி இணையத்தளம் -*

# பேரீச்சம்பழக் கேக்

### தேவையான பொருட்கள்



மாஜரின் - 1 கிலோ
சீனி - 1 கிலோ
இரவை - 1 கிலோ
பேரீச்சம்பழம் - 2 கிலோ
முட்டை - 16
பேக்கிங் பவுடர் - 5 மே.கரண்டி
கலர் வனிலா - 1 போத்தல்
பிளம்ஸ் - 1/4 கிலோ
ஏலம், சாதிக்காய் - தேவையான அளவு
தேயிலைச் சாயம் - தடிப்பானது
கஜூ - 1/4 கிலோ

### செய்முறை :

கேக்கிற்கெனப் பயன்படுத்தும் முதல் தரமான (Original) பேரீச்சம் பழத்தை சிறு துண்டுகளாக்கி, ஒரு பாத்திரத்தில் இட்டு தேயிலைச் சாயத்தை ஊற்றி ஊற வைக்கவும். முதல்தரமான பழமானால் 3-4 மணித்தியாலங்கள் ஊறவிடலாம். பிறகு மாஜரீனையும், சீனியையும் சேர்த்து நன்றாக அடிக்கவும். சீனி கரைந்தபின் முட்டையை ஒவ்வொன்றாக ஊற்றி அடிக்க வேண்டும். இலேசாக வறுத்த இரவையை பேக்கிங் பவுடருடன் கலந்து மாஜரீன் கலவைக்குள் சேர்க்கவும். பிறகு ஊறவைத்த பேரீச்சம்பழம், பிளம்ஸ், வனிலா, பொடியாக்கிய ஏலம், சாதிக்காய் இவற்றையும் சேர்த்து நன்றாக கலக்கியபின் பேக் பண்ணலாம்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.196

**2 குறிப்பேடு (அதிகாரம் 01 முதல் 12 முடிய)**

உங்கள் விடைகளை டிசம்பர் மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | | ✡ | | | | 04 | |
| | | | | | 05 | | 06 | ✡ | | |
| | | | | | | 07 | | | | |
| | | | | | | 08 | | | | |
| ✡ | | 09 | | 10 | | | | ✡ | 11 | |
| 12 | | | | ✡ | 13 | | | | | |
| | | | 14 | | | | | | | 15 |
| | | 16 | | ✡ | | | | | 17 | |
| | | | | | | | | 18 | | |
| 19 | 20 | | | | | | | 21 | ✡ | |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார், மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. குருக்கள் தமக்குரிய ..........................ச் செய்தனர்
3. ஈராம் கப்பல்களையும் கடல் ......................யும் தம் பணியாளர் பொறுப்பில் சாலமோனிடம் அனுப்பி வைத்தார்.
7. விண்ணும் விண்ணுலகும் அவரைக் கொள்ள இயலாதிருக்க அவருக்கேற்ற ஒரு கோவில் .................. யாரால் முடியும்?
8. ஆண்டவரின் மாட்சி அவர் இல்லத்தை நிரப்பியிருந்ததால் குருக்கள் ஆண்டவரின் இல்லத்தில் ........... முடியவில்லை.
10. சாலமோனும் சபையாரும் அங்கே ........................ நடத்தச் சென்றனர்.
12. பேழையின் தண்டுகள் .................. இருந்ததால் அவற்றின் முனைகள் கருவறையில் பேழைக்குமுன் தெரிந்தன.
13. என் தந்தை தாவீதுக்கு ........................ காட்டினீர்.
14. சாலமோன் ஐந்து முழ நீளமும், ஐந்து முழ அகலமும், மூன்று முழ உயரமுமான வெண்கலத்திருவுரை ...................... ஒன்று செய்து அதை முற்றத்தின் நடுவில் வைத்திருந்தார்.
19. ஒவ்வொரு வாயிலிலும் ................ வாயிற்காப்போரின் குழுக்களையும் ஏற்படுத்தினார்.

### மேலிருந்து கீழ்

1. இத்.............. சாலமோன் ஏழு நாள் தொடர்ந்து கொண்டாடினார்.
2. இவ்வாறு ஆண்டவரின் ................ கட்டி முடிக்கப்பட்டது.
3. அவர் பேராறு முதல் பெலிஸ்தியர் .................. எகிப்திய எல்லை மட்டும் இருந்த எல்லா மன்னர்கள் மேலும் அதிகாரம் செலுத்தினார்.
4. உம் மிகுந்த ................ பற்றி அவர்கள் பாதிகூட எனக்குக் கூறவில்லை என உணர்கிறேன்.
13. ஏனெனில் ஆண்டவரின் .............. கடவுளின் இல்லத்தை நிரப்பிற்று.
14. .................... ஆண்டவரின் இல்லத்தை நிரப்பிற்று.
15. இவ்வாறு ............... விரிந்திருந்த அந்த கெருபுகளுடைய இறக்கைகளின் மொத்தநீளம் இருபது முழம்.
16. கடவுள் சாலமோனின் அறிவுக்கு அருளிய ஞானத்தை ............... கேட்க உலகின் எல்லா மன்னர்களும் அவரை நாடி வந்தனர்.
17. ரெகபெயாமும் எரொபவாமும் .......... நாள் முழுவதும் தங்களுக்குள் போரிட்டுக்கொண்டிருந்தனர்.

### வலமிருந்து இடம்

2. ஆண்டவரின் பேழை வைக்கப்பட்டிருந்த ................ புனிதம் பெற்றவை.
4. சேபாவின் அரசி சாலமோனின் .........................யும் அவர் கட்டியிருந்த அரண்மனையையும் கண்டார்.
5. அவன் ஈட்டிகளாலும், கேடயங்களாலும் ஒவ்வொரு நகரையும் மிகவும் ................ மிக்கதாக்கினான்.
7. அவர்களோ அவனைக் .............. எறிந்து கொன்றனர்.
8. ஆண்டவரின் இல்லத்திற்குள் அரசன் .................. போதெல்லாம் வாயிற்காப்போர் அக்கேடயங்களை ஏந்தி உடன் செல்வர். (2வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே நிற்கின்றது)
14. பத்து ..................ச் செய்து ஐந்தை வலப்புறமும், ஐந்தை இடப்புறமுமாகத் தூயகத்தில் வைத்தார்.
15. அதனால் உம்மை அவர்களின் .................... நியமித்திருக்கிறார்.
17. இதனால் தங்கள் மூதாதையருக்கு நீர் அளித்த நாட்டில் தங்கள் ............... எல்லாம் அவர்கள் உமக்கு அஞ்சி நடப்பார்கள்.
18. பின்பு அவர் தம் அலுவலருடன் தமது .................த் திரும்பிச் சென்றார்.
21. அவருக்கு விடுவிக்க .................... புதிர் ஒன்றுமில்லை. (2வது எழுத்து இறுதியாக உள்ளது)

### கீழிருந்து மேல்

6. “ஆண்டவரே கரிய .................. திரளில் வாழ்வேன் என்று நீர் கூறியிருக்கின்றீர்.” (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
8. உம் தந்தை பளுவான ................ எங்கள்மேல் சுமத்தினார்.
9. சாலமோன் அரசர் பொன் ............. இருநூறு பெரிய கேடயங்களைச் செய்தார்.
11. அதன் ................ கிண்ணத்தின் விளிம்பைப் போன்றும் மலர்ந்த லீலியைப் போன்றும் இருந்தது (இறுதி எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே நிற்கிறது.)
14. எனவே இவர்கள் தங்கள் ............. நிலத்தையும் உடைமைகளையும் விட்டுவிட்டு யூதாவுக்கும் எருசலேமுக்கும் திரும்பிச் சென்றனர்.
15. அவனைத் தாவீதின் நகரில் ..................... செய்தனர்.
19. அவைதம் .................. ஊன்றி நின்றுகொண்டிருந்தன.
20. நீர் அவர்களுக்கு நீதியும், நியாயமும் ............ உம்மை அரசராக ஏற்படுத்தியுள்ளார்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 194

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:**



**முதலாம் பரிசு:**
ரா. கெயில் குலாஸ்,
கெபி வீதீ, 8ம் வட்டாரம்,
பேசாலை.



**இரண்டாம் பரிசு:**
R. ஜெகநாதன்,
இல: 161, மடுக்கரை,
நானாட்டான்.

**மூன்றாம் பரிசு:**
E. ஜெனோலின்,
புத்திரர்கண்டான்,
முருங்கன்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 75 பேர். சரியான விடைகளை எழுதியோர் 68 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 194ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. அ. மல்லிகா. சாளம்பன், ஆண்டான்குளம்.
2. K.R. கலிஸ்ரஸ். இல: 54, கற்குளம், சிதம்பரபுரம்.
3. திருமதி. ரஜனி எட்வின். பெரியநாவற்குளம், மாந்தை.
4. K. மடோனா. இல: 54, கற்குளம், சிதம்பரபுரம்.
5. அ. சிந்துஜன். சாளம்பன், ஆண்டான்குளம்.
6. ரெபேக்கா பற்றிக். சின்னக்கடை, மன்னார்.
7. செ. ஜெறோம். தாமரைக்குளம், அடம்பன்.
8. செ. இன்பென்ரா டயஸ். மரியாள்வீதி, தாழ்வுபாடு.
9. அ. குமார். முதலைகுத்தி, உயிலங்குளம்.
10. அ. மேரி டொறோதியா குரூஸ். வங்காலை.
11. புஸ்பாசேவியர். இல:58/6A உவர்மலை, திருகோணமலை.
12. ஞா. வினோதர்சி. முதலைகுத்தி, உயிலங்குளம்.
13. S. பெலிஸிற்ராஸ். தாமரைக்குளம், அடம்பன்.
14. ஞா. வினோசர்மி. முதலைகுத்தி, உயிலங்குளம்.
15. S. பெனிற்றா. பள்ளமடு, விடத்தல்தீவு.
16. செ. ஜென்சன் ஜீவறாஜா. புதுக்கமம், உயிலங்குளம்.
17. M. பிளண்ரீனா, கன்னியர்மடவீதி, மன்னார்.
18. S. செபமாலை மார்க். 7ம் வட்டாரம், வங்காலை.
19. S. கொற்றிக்ஷன் குரூஸ். ஆனாள் நகர், வங்காலை.
20. ஞா. ஜெரூஷன். முதலைகுத்தி, உயிலங்குளம்.
21. செ. வளன் நிலுஜன் துரம். மரியாள்வீதி, தாழ்வுபாடு.
22. எ. ஜெய்மென் ராஜா. புத்திரர்கண்டான், முருங்கன்.
23. பீ.செ. ஆன் நிதர்ஷி. ஆத்திக்குளி, முருங்கன்.
24. D.P. சாறா. மாவிலங்கேணி, முருங்கன்.
25. வயலட் யோண். ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
26. ரூபன் கஸ்தியா. வன்னிக்கோட்டம், சிதம்பரபுரம்.
27. இ. மெக்கன்சி. இல: 161, மடுக்கரை.
28. அ. கில்டா. கட்டையடம்பன், மடுவீதி.
29. S. டென்சியா பெரேரா. 8ம் வட்டாரம், பேசாலை.
30. ஆ. சுஸ்மிதா மிராண்டா. 8ம் வட்டாரம், பேசாலை.
31. றெ. அபினா. மளுவராயன் கட்டையடம்பன், மடுறோட்.
32. A. கிரியோன். சுகந்தபுரி, வங்காலை.
33. அ. ஜஸ்மின் ஷறோன். ஆவணம், நானாட்டான்.
34. ஜெ. நிக்சலா. பெரியபண்டிவிரிச்சான், மடு.
35. நி. நியோவின் பறுனாந்து. முத்தரிப்புத்துறை.
36. அ. ஜெயப்பிரியா. பெரியகட்டைக்காடு, நானாட்டான்.
37. பே. சர்கீசனா. புனித சவேரியார் ஆலயம். தேவன்பிட்டி.
38. அ. ஜெகன் லெம்பேட். பெரியபண்டிவிரிச்சான், மடு.
39. ஆ. ரகுநாதன். புனித சவேரியார் ஆலயம். தேவன்பிட்டி.
40. வி. மேரி கலிஸ்ரா. 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
41. ர. நவீன். புனிதசவேரியார் ஆலயம், தேவன்பிட்டி
42. ஜேம்ஸ் இலக்கியன். தோட்டவெளி.
43. அ. புளோறன்ஸ். கங்காணிதீவு, நானாட்டான்.
44. பி. நித்தியானந்தன் குரூஸ். ஆனாள் நகர், வங்காலை.
45. ஜீன் போள் லக்மினி குரூஸ். ஆனாள் நகர், வங்காலை.
46. தா. வியாகுலநாயகி. வேப்பங்குளம், வவுனியா.
47. ச. மரியகொண்சிக்கா குரூஸ். சிலாவத்துறை.
48. ச. குணபாலசிங்கம். பூந்தோட்டம், வவுனியா
49. D.P. டக்சன் யோனாஸ். மாவிலங்கேணி, முருங்கன்.
50. P. யதுமிதா. நறுவிலிக்குளம், வங்காலை.

## மறைக்கல்வியின்.....

**07ஆம் பக்கத் தொடர்ச்சி.**

அன்பு எமது வழியாக மாறும்போது, நாம் கற்றுக்கொள்ளும் கல்வி எமது வாழ்வாக மாறுகின்றது. எம் வாழ்க்கைக் கடமைகளைச் சரிவரச் செய்வதற்கும் மறைக்கல்வி எமக்கு உதவி செய்கின்றது. கவனமாகக் கல்வி கற்கவும், வீட்டிலும், பாடசாலையிலும் மகிழ்ச்சியாக நமது வேலைகளைச் செய்யவும் மறைக்கல்வி நமக்குத் தூண்டுகோலாக இருக்கின்றது.

பெற்றோருடையவோ, ஆசிரியர்களுடையவோ அருட்பணியாளர்களுடையவோ வற்புறுத்தலுக்காக அல்லாமல் மறைக்கல்வியின் அவசியத்தை உணர்ந்து நாம் கற்க வேணடும். பாடசாலையில் சமயபாடத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் நாம் மறைவாழ்வில் வளர நமக்குப் போதுமானதல்ல. எனவே மறைக்கல்வியின் அவசியத்தை உணர்ந்து, முறையாகக் கற்று இறை இயேசுவின் பிள்ளைகளாக விசுவாசத்தில் வளர்வோம். மறைக்கல்வியைக் கற்றுத்தருகின்ற ஆசிரியர்கள் மட்டில் நன்றியுள்ளவர்களாக இருப்போம்.●

*ஆன் அபிசாயினி விமலதாஸ், உடுவில் மகளிர் கல்லூரி*

## பாப்பரசர் ஆறாம்.....

**02ஆம் பக்கத் தொடர்ச்சி.**

அவர்களில் 1963 முதல் 1978 காலப்பகுதியில் திரு அவையை வழிநடத்திய “நவீனத்துவத்தின் திருத்தந்தை” என அழைக்கப்படுகின்ற திருத்தந்தையும் திருஅவையின் ஆயர்களின் மாமன்றத்தை அறிமுகம் செய்து வைத்தவருமாகிய அருளாளர் 6ஆம் பவுல் மற்றும் பல வழிகளில் அடக்குமுறைகளால் வாழ்ந்த எல் சல்வடோர் மக்களுக்காகவே தம் வாழ்வை அர்ப்பணித்த ஆயர் அருளாளர் ரொமேரோ என்பவர்களும் ஆவார்.●

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, ‘MANNA’
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002002979782

## இறை அன்பே.....

**04ஆம் பக்கத் தொடர்ச்சி.**

நோயுற்ற ஒரு குழந்தையின் மீது அதன் பெற்றோர் காட்டும் இதயம் தொடும் அக்கறையில், வாழ்வை புறக்கணிப்பதையல்ல, மாறாக வாழ்வை வரவேற்கும் நிலையைக் காண்கின்றோம். வாழ்வைப் பாதுகாத்து காப்பாற்றவேண்டும் என்று பெற்றோர் கொண்டுள்ள ஆர்வம் வாழ்வு விலை மதிப்பற்றது என்பதன் அடையாளமாக உள்ளது. வாழ்வின் விலைமதிப்பற்ற தன்மை நோயால் துன்புறுவோரில் காணப்படுகின்றது, மற்றும் இவர்கள் கடவுளின் கொடையாகவும், இறை அன்பில் நாம் வளர்வதற்கு உதவுபவர்களாகவும் உள்ளனர்.

இறை அன்பே வாழ்வின் உண்மையான அளவுகோல். வாழ்வில் ஒதுக்கப்பட்ட பலவீனர்கள், ஏழைகள், நோயாளிகள் ஆகியோரை தன் வாழ்நாள் முழுவதும், சிலுவையிலும் கூட அரவணைத்ததன் வழியாக வாழ்வின் இரகசியத்தை வெளிப்படுத்தினார் இயேசு. நம் பலவீனங்களின் மத்தியிலும் இயேசு நமக்கு அன்பின் மகிழ்வை வெளிப்படுத்துவதற்காக நம் இதயங்களைத் தேடி வருகின்றார். நற்செய்தி நமக்கு எடுத்துரைப்பதுபோல், ‘தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல், நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்.’ (யோவான் 3:16). இவ்வாறு, தன் புதன் மறைக்கல்வி உரையை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இலங்கை, பிலிப்பீன்ஸ், மலேசியா, ஜப்பான் உட்பட பல்வேறு நாடுகளிலும் இருந்து வந்திருந்த திருப்பயணிகளை வாழ்த்தி, தன் அப்போஸ்தலிக்க ஆசீரையும் வளங்கினார்.●

## புனிதர்கள் பாதை.....

**06ஆம் பக்கத் தொடர்ச்சி.**

தலையை வெட்டிக் கொலை செய்யுமாறு ஆளுநன் அறிவித்தான். காவலன் செசிலியாவின் தலையை வெட்டுகையில் தலை முழுமையாக கீழே விழுவதற்கு முன் சென்று விட்டான். அந்த நிலையிலும் மூன்று நாட்கள் இறைவனைப் புகழ்ந்து பாடியபடி உயிர் வாழ்ந்து, பின் உயிர் விட்டார் செசிலியா. தன் வாழ்வு முழுவதையும் இறைவனுக்கான வாழ்த்துப் பாடலாக சமர்ப்பித்தமையால் புனித செசிலியா அனைத்து பாடகர் குழாமினரின் பாதுகாவலியாக அழைக்கப்படுகின்றார்.●

## அன்புச் சகோதரர்சபையின்.....

**02 ஆம் பக்கத் தொடர்ச்சி.**

இவர் புதுக்கமம் புனித சூசையப்பர் ஆலயப்பங்கின் திரு திருமதி. அந்தோனி அந்தோனியா தம்பதிகளின் புதல்வரும் அருட்.சகோதரி ஜசிந்தா அன்ரனி (தி.கு.க.சபை) அவர்களின் சகோதருமாவார். அன்புச் சகோதரர் சபையின் ஆசியத்தலைவரின் இலங்கைக்கான பிரதிநிதியாக 2018இல் நியமனம் பெற்று கடந்த மூன்று ஆண்டுகளாக பணியாற்றிய இவர் திருகோணமலை புனித வளனார் தொழில்நுட்ப கல்லூரியின் அதிபராகவும், இலங்கை தாதியர் பயிற்சிக்கல்லூரியின் பகுதி நேர விரிவுரையாளராகவும் பணியாற்றிவருகின்றார். ரோமாபுரி பாப்பிறை பல்கலைக்கழகத்தில் (Pontifical Latharan University) திருச்சபையின் சமூகக் கோட்பாடுகள் பட்டப்படிப்பினை மேற்கொண்டு இளமானிப்பட்டம் பெற்றுள்ளார். சிறந்த தொழில் நுட்ப வியலாளரான இவர் இலகு ரக கைத்தொழில் இயந்திரங்களை வடிவமைத்து உற்பத்தி செய்வதில் வல்லவராகத் திகழ்கின்றார்.

யாரும் இலகுவில் எதிர்கொள்ள முடியாத வேதனைகள் நிறைந்த சவால்களைக் கடந்து சபை மேலாளராக, அதிபராக, விரிவுரையாளராக, தொழில்நுட்பவியலாளராக பல்துறைகளில் பரிணாமம் பெற்று விளங்கும் இவரின் பணிகள் மென்மேலும் சிறக்க மன்னார் மறைமாவட்டத்தின் வாழ்த்துக்களையும், செபங்களையும் மன்னா பத்திரிகை நிர்வாகம் தெரிவிக்கின்றது.●

# நீங்காத நினைவுகள்

## 09ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
09
05
1952



உதிர்வு
17
11
2009

### திரு. மோசேஸ் மொத்தம் தர்மதாசன்

**(உயிர்த்தராசன்குளம், முருங்கன்)**

“உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” (யோ.11:25).

அன்புக்கு இலக்கணமாய்,
பாசத்தின் பிறப்பிடமாய்
முகத்தில் புன்னகையுடன்
பாரினிலே நீர் வாழ்ந்தீர்.
இரக்கமும், இறைபற்றும்,
ஊக்கமும், உதவுதலும்
நீங்கள் எமக்களித்துச் சென்ற சொத்துக்கள்!
காலத்தின் சதி உங்களைப் பிரித்தது.
நீங்கள் எங்களுடன் வாழ்ந்த நாட்கள்
என்றுமே எம் நினைவில் அழியாது.



**பிரிவால் நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், குடும்பத்தினர்.

## கிறிஸ்தவ நாகரிகம்.....

07ஆம் பக்கத் தொடர்ச்சி

தெபோரா இஸ்ராயேல் மக்களை இருபது வருடங்களாக துன்புறுத்திய கானானிய மன்னன் யாபினிடமிருந்து காப்பாற்றினார். கிதியோன் ஏழு வருடங்களாக இஸ்ராயேல் மக்களை துன்புறுத்திய மிதியானியரை தோற்கடித்து அவர்களைப் பாதுகாத்தார். சிம்சன் பெலிஸ்தியரின் கைகளிலிருந்து இஸ்ராயேலரைப் பாதுகாத்தார். இவ்வாறு இறைவன் நீதித் தலைவர்கள் மூலமாக அந்நிய படையெடுப்புக்களிலிருந்து மக்களை விடுவித்து, சமூகத்தில் நீதியை நிலைநாட்டி, சமூகத்தின் முரண்பாடுகளையும், பிரச்சினைகளையும் தீர்த்து, அவர்கள் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாக இருந்து இறைத் திட்டத்தை நிறைவேற்ற உதவினார். ●

### இஸ்ராயேல் அரசு

பிற்பட்ட காலங்களில் இஸ்ராயேல் மக்கள் மத்தியில் நீதிபதிகள் ஒழுங்காக நீதி செலுத்தவில்லை. அதேவேளையில் அயல்நாடுகளில் காணப்பட்ட சிறப்பான அரசாட்சியைக் கண்ட இஸ்ராயேல் மக்களுக்கு அரசனைக் கொண்ட ஒரு அரசும், அதன் வாயிலாக மற்றவர்களுக்கு தனிநாடு என்ற தன்னடையாளமும் வேண்டுமென்ற ஆவலும், பகைவர்களை வெல்லுவதற்கு அரசனும், படைகளும் உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணமும் ஏற்பட்டது. இதனால் அவர்கள் தங்களுக்கு ஓர் அரசனை, இறைவனை மன்றாடிப் பெற்றுக் கொண்டார்கள். முதல் அரசன் சவுல் பெஞ்சமின் குலத்தைச் சேர்ந்தவர். இஸ்ராயேலின் எதிரிகளான பிலிஸ்தியரைத் தோற்கடித்து நாட்டைக் காத்தவர். இஸ்ராயேலின் முதலாவது அரசாட்சியாக இருந்ததினால் அவரது அரசானது முறையான எல்லைகளுக்கு உட்பட்டு ஒழுங்கமைக்கப் பட்டிருக்கவில்லை.

முதல் அரசனாக இருந்தாலும் தமது சொந்த மக்களாலே வெறுக்கப்பட்டார். அவருக்குப் பின் பெத்லேகேமைச் சேர்ந்த ஈசாயின் மகன் தாவீது பன்னிரு கோத்திரங்களையும் ஒன்றுசேர்த்து தனியரசை நிறுவினார். தாவீதின் வெற்றிகள் பலஸ்தீனாவையும், சீரியாவையும் இணைத்து இஸ்ராயேல் ஒரு வல்லரசாக மாற உதவியது. தனது இறுதிக்காலத்தில் சாலமோனை அரசனாக்கி தந்தைக்குப் பின் மகன் ஆட்சிமுறைமையை உருவாக்கினார். அண்டை நாடுகள் மத்தியில் தலை சிறந்த மன்னனாக ஆட்சிபுரிந்த சாலமோன் அரசர் தனது ஆட்சியில் கடைசிவரை 12 கோத்திரங்களையும் ஒற்றுமையாக வைத்திருந்தார். இவ்வாறு மீட்பு வரலாற்றில் இறைவன் இஸ்ராயேல் மக்களைப் பாதுகாத்து பராமரித்து வழிநடத்தினார். ●

## சுவிஸ்.....

08ஆம் பக்கத் தொடர்ச்சி.

சுவிஸ் ஆன்மீகப் பணியக செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுத்து வருகின்ற ஆன்மீக இயக்குனர் அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளாரையும், அவரோடு சேர்ந்து உழைக்கின்ற சுவிஸ்வாழ் கத்தோலிக்க இறைமக்களையும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக வாழ்த்திப்பாராட்டுகின்றோம். ●

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

## மடுறோட்.....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

இவ்வாலயம் மன்னார் மாதோட்டத்தில் மல்வத்து நதிக்கரையில் பழமை வாய்ந்த தோற்றத்துடன் மங்காத அருட்பொலிவோடு அழகுற நிர்மாணிக்கப்பட்டு காட்சியளிக்கின்றது. இப்பங்கு சோதிநகர் புனித அந்தோனியார் ஆலயம், பூமலர்ந்தான் புனித யோசேவ்வாஸ் ஆலயம், தேக்கம் குழந்தை இயேசு ஆலயம் ஆகிய மூன்று சிற்றாலயங்களைக் கொண்டது.

பலகோடிப்புதுமைகள் புரியும் சிந்தாத்திரை மாதா கடல் வழிப்பயணிகளின் பாதுகாவலியாகவும், தரை வழிப்பயணிகளின் பாதுகாவலியாகவும், தம்மை நாடிநிற்கும் அனைவரின் துன்பதுயரமான வேண்டுதல் அனைத்தையும் பெற்றுக்கொடுத்து நம்பிக்கையில் வளர்வதற்கு வழிவகுக்கும் அன்னையாகவும் விளங்குகின்றார். அனைத்து நிகழ்வுகளையும் ஆலய அருட்பணிப் பேரவையோடும், பங்கு மக்களோடும் இணைந்து பங்குத்தந்தை அருட்பணி. பா. றொசான் அடிகளார் நெறிப்படுத்தி நடாத்தினார். மேலும் நல்ல ஆயனாக இருந்து பக்திச்சபைகளையும் ஏனைய பணிகளையும் அர்ப்பணிப்போடும், ஆர்வத்தோடும் முன்னெடுத்துச் செல்கின்றார். ●

## மன்னார் மறைமாவட்ட.....

12ஆம் பக்கத் தொடர்ச்சி.

வரவேற்புரையை மரியாயின் சேனையின் ஆன்ம இயக்குனர் அருட்பணி. அ. இராயப்பு அடிகளார் நிகழ்த்தியதோடு அனைவரையும் வரவேற்றார். மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மனுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் மரியாயின் சேனையினராகிய நீங்கள் பேரெழுச்சியாக நடாத்தும் இப்பேரணியைக் காணும் போது மிகவும் மன மகிழ்வைத் தருகின்றது எனக் கூறி மாதாவின் மகிமையையும், செபமாலையின் மகத்துவத்தையும் எடுத்துரைத்து இறையாசீர் வழங்கி பேரணியைத் தொடக்கி வைத்தார்.

இப் பேரணிக்கு கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது மரியன்னை மீது தாங்கள் கொண்ட பக்தி விசுவாசத்துடன் 79 பிரசீடியங்களைச் சேர்ந்த சகோதர, சகோதரிகள் வருகை தந்திருத்தனர். மாதாவின் மகிமையாலும், வல்லமையாலும் விழா முடியும் வரை மழை பொழியாதிருந்தது. மேலும் பங்குத் தந்தையர்களின் ஊக்குவிப்பினால் சேனையாளர்கள் மற்றும் பங்கு மக்கள் என இரண்டாயிரம் பேர் வரை கலந்து சிறப்பித்தனர். முதலியார்குளம் புனித அந்தோனியார் ஆலய மேடையில் வவுனியா மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. இராசநாயகம் அடிகளாரின் தலைமையில் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பல பங்குத்தந்தையர்கள் திருப்பலியில் கலந்து சிறப்பித்தனர். மறையுரையை ஓமந்தை பங்குத்தந்தை அருட்பணி. சுகுணராஜ் குரூஸ் அடிகளார் நிகழ்த்தினார்.

முடிவில் சேனையாளர்களின் செபத்தோடும், அன்னை மரியாளின் திருச்சுரூப ஆசீரோடும் பேரணி நிறைவு எய்தியது. அனைத்து ஏற்பாடுகளையும் இலுப்பைக்குளம், செட்டிகுளம் பங்கு மரியாயின் சேனையாளர்களும், சேனையின் ஆன்ம இயக்குனர் அருட்பணி. A. இராயப்பு அடிகளாரும், இலுப்பைக்குளம் பங்குத்தந்தை அருட்பணி. சந்திரபோஸ் குரூஸ் அ.ம.தி அடிகளாரும், செட்டிகுளம் உதவிப்பங்குத்தந்தை அருட்பணி சதாஸ்கர் அடிகளாரும் ஏற்பாடு செய்திருந்தனர். ●

## புனித பட்ட சிறப்புத் திருப்பலியில்.....

04ஆம் பக்கத் தொடர்ச்சி

பேராயர் ரொமேரோ அவர்கள் தன்னுடைய பதவி வழங்கிய பாதுகாப்பைத் துறந்து, தன் உயிருக்கு வந்த ஆபத்தையும் பொருட்படுத்தாமல், வறியோருடன் தன்னையே அடையாளப்படுத்திக் கொண்டதால் நற்செய்தியை தன் வாழ்வாக மாற்றியவர் என்று திருத்தந்தை குறிப்பிட்டார். அதேவண்ணம், ஏனைய ஐந்து புனிதர்களான அருட்பணியாளர்களான பிரான்செஸ்க்கோ ஸ்பிநெல்லி, வின்சென்சோ ரொமானோ, அருட் சகோதரிகளான மரிய கத்தரீனா காஸ்பெர், நசாரியா இஞ்ஞாசியா, நேபிள்ஸ் பகுதியிலிருந்து வந்த இளையவர் நுன்சியோ சுல்பிரிசியோ ஆகிய ஐவரும் இறைவனுக்காகவும், அயலவருக்காகவும் தங்களிடமிருந்த அனைத்தையும் தியாகம் செய்தனர் என்பதை தன் மறையுரையின் இறுதியில் கூறி முடித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். ●

## மன்னார் மறைசாட்சியர்......

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

மேலும் இது தொடர்பான ஆய்வுகளுக்காக இலங்கையிலுள்ள ஆவண காப்பகங்களிலும் தகவல் திரட்டப்படுவதாகவும் குறிப்பிட்டார். அத்தோடு அருட்சகோதரர் இம்மானுவேல் ரொகேசியஸ் உரோமாபுரியிலுள்ள இயேசு சபைக்குச் சொந்தமான நூலகத்திலிருந்து எடுக்கப்பட்ட ஆவணங்கள் சிலவற்றை அருட்பணி. தாமஸ் அடிகளாரிடம் கையளித்தார். அத்தோடு ஆயர் அவர்கள் தொடர்ந்தும் இவ்வாறான தகவல்களைத் திரட்டுமாறு அருட்சகோதரரைக் கேட்டுக் கொண்டார். ●

## உலக கொள்பிங்.......

09ஆம் பக்கத் தொடர்ச்சி.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்விலும், மதிய நேர விருந்துபசாரத்திலும் பங்கெடுத்தார். இந்நிகழ்வில் தாழ்வுபாடு பங்குத்தந்தை அருட்பணி. யேசுராஜா, மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் ஆன்மீக இயக்குனர் அருட்பணி. ஒல்பன் இராஜசிங்கம் அமதி, கொள்பிங் தேசிய ஆன்மீக இயக்குனர் தந்தை, தேசியமட்ட தலைவர், தாழ்வுபாடு, கீளியன் குடியிருப்பு, கீரி, அண்ணாநகர், மடுக்கரை, பாலைப்பெருமாள்கட்டு, கூமாங்குளம், அந்தோனியார்புரம், சாந்திபுரம், பம்பைமடு, தலைமன்னார், வாழ்க்கைப்பெற்றான் கண்டல் ஆகிய மன்னார் மறைமாவட்ட கொள்பிங்கிளை சங்கங்களின் அங்கத்தவர்களும் பங்கெடுத்தார்கள். ●

## உலக ஆசிரியர்

12ஆம் பக்கத் தொடர்ச்சி.

இம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள், முன்பள்ளி கட்டிடங்கள், முன்பள்ளிகளுக்குத் தேவையான உபகரணங்கள், பிள்ளைகளுக்குத் தேவையான சத்துணவு போன்ற பல திட்டங்களை ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் தலைமையிலே வாழ்வுதயம் மேற்கொண்டு வந்தது. அதன் பின்பு அப்போஸ்தலிக்க பரிபாலகராக இருந்த கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும் இதில் மிகுந்த கரிசனை எடுத்து இம் முன்பள்ளிகளுக்கு புத்துயிர் அளித்தார்.

தற்போதைய எம் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையும் முன்பள்ளிகளில் மிகுந்த கரிசனை கொண்டு இருக்கின்றார். வாழ்வுதய நிறுவனத்தின் கீழ் இருந்த முன்பள்ளிகள் எல்லாம் நடாத்தப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. தற்போது மன்னார் மறைமாவட்டத்தில் 104 ஆசிரியர்கள் மறைமாவட்ட கண்காணிப்பின் கீழ் பணியாற்றிக்கொண்டு இருக்கின்றார்கள். 104 ஆசிரியர்களுக்குமான மாதாந்த கொடுப்பனவு ஆயரினால் வழங்கப்படுகின்றது. முன்பள்ளிகளுக்கான கட்டிடங்கள், தளபாடங்கள் போன்ற தேவைகளை வாழ்வுதயம் நிறைவேற்றிக் கொண்டு வருகின்றது. வாழ்வுதயப் பணியாளர்கள் அடிக்கடி இம் முன்பள்ளிகளுக்குச் சென்று முன்பள்ளிகள் நடக்கின்ற முறை பற்றி ஆராய்ந்த வண்ணம் இருக்கின்றனர். முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு மட்டுமல்ல அவர்களுக்கான வலுவூட்டல் கருத்தரங்குகள் அவர்கள் மேலதிகமாக கற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு நடாத்தப்படுகின்றன. அதை விட உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. வருட இறுதி ஒன்றுகூடல் நடாத்தப்படுகின்றது. கல்விச் சுற்றுலா இடம் பெறுகின்றது. ஆசிரியர்களுடைய பல்வேறு தேவைகளை மறைமாவட்டம் நிவர்த்தி செய்து வருகின்றது. ●

## அரச கிறிஸ்து பிறப்பு.....

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

இதற்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு மைத்திரிபால சிறிசேன அவர்கள் வருகை தரவுள்ளார். இதனையொட்டிய திட்டமிடல் மாநாடு 04.10.2018 வியாழக்கிழமை அன்று காலை 09.30 மணிக்கு மன்னார் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. சுற்றுலாத்துறை, கிறிஸ்தவ சமயப் பணிகளுக்கான அமைச்சர் கௌரவ ஜோண் அமரதுங்க தலைமையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் பிரசன்னத்தில் நடைபெற்ற இம் மாநாட்டில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி அ.விக்டர் சோசை, உள்நாட்டுப் பணிகள் அமைச்சர் றஞ்சித் அலுவிகார, மன்னார் மாவட்டச் செயலர் திரு. மோகன்தாஸ், சுற்றுலாத்துறை அமைச்சின் திட்டப் பணிப்பாளர், கிறிஸ்தவ சமயப் பணிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. சத்துரி பின்ரோ, மற்றும் ஜனாதிபதி செயலக முதன்மைப் பணி நிலை அதிகாரிகள், அருட்பணியாளர்கள், மன்னார் மாவட்ட திணைக்கள முதன்மைப் பணிநிலை பணியாளர்கள், துறைசார் வல்லுநர்கள், முப்படைகளின் பிரதேசத் தலைவர்கள், ஊடகத் துறையினர் எனப் பலர் கலந்து கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். ●

## அனைவரும்.....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

மேலும், திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களின் புனிதர்பட்ட நிகழ்விற்கு முன்னர் முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களின் இருப்பிடம் சென்று, அவரைச் சந்தித்து உரையாடினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

1978ஆம் ஆண்டு இறையடி சேர்ந்த திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள், தன் பணிக் காலத்தின் இறுதி முறையாக, 1977ஆம் ஆண்டு யூன் 27ஆம் திகதி நியமனம் செய்த கர்தினால்களில் ஒருவர், திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் எனப்படும், கர்தினால் ஜோசப் இராட்சிங்கர் என்பது குறிப்பிடத்தக்கது. ●

## அன்பில் நிலைத்திருக்க......

10ஆம் பக்கத் தொடர்ச்சி.

எங்கே கணவனை சட்டம் தனியாக பிரித்து சிறையில் போட்டுவிடுமோ, என நினைத்து, நானும் சேர்ந்துதான் கல்லைத் தூக்கிப் போட்டேன் என்றார் விஜயா. இதன் காரணமாக இருவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. சிறைக்குள் போகும்போது சுப்பிரமணியத்திற்கு வயது 37 விஜயாவிற்கு வயது 32. ஒரு நடைப்பிணமாகவே சிறையில் இருபத்துமூன்று வருடங்கள் இருந்த விஜயாவைப்பற்றி ஒரு வழக்கறிஞர் வெளி உலகத்திற்கு உண்மை விடயத்தைக் கொண்டு வந்ததன் எதிரொலியாக கடந்த 2013ஆம் ஆண்டில், விஜயா விடுதலை செய்யப்பட்டார்.

இளமை தொலைந்து முதுமையும் நோயும் வாட்டிய சூழலில் வெளிவந்த விஜயாவை, வேலூர் முதியோர் இல்லம் தஞ்சம் கொடுத்து பார்த்துக் கொண்டது. ஐந்து ஆண்டுகள் கடந்து இவ்வாண்டு ஒக்ரோபர் 6ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார் சுப்பிரமணியம். இளைஞராக உள்ளே சென்ற சுப்பிரமணியம் 28 ஆண்டுகளுக்குப்பின் 65 வயது முதியவராக வெளியே வந்தார். மனைவியை முதியோர் இல்லத்தில் சந்தித்தார். இருவரின் கண்களில் இருந்தும் தாரை தாரையாக கண்ணீர்.

முதியோர் இல்லத்திலிருந்த அனைவரிடமும் “எல்லோருக்கும் நன்றி என் சொந்த ஊருக்கு போகின்றேன் அங்கே போய் எப்படியும் பிழைத்துக்கொள்வேன். இனி சாகிறவரை என் விஜயாவை நான் பார்த்துக்கொள்வேன். அவளும் என்னைப் பார்த்துக்கொள்வாள்” என்று சுப்பிரமணியம் கூற, ஒருவர் கையை மற்றவர் பிடித்தபடி, மிடுக்குடன் கிளம்பிச் சென்றனர் இருவரும். ●

# இல்லற வாழ்வில் 25 ஆண்டு வெள்ளிவிழா வாழ்த்து!



**திரு. திருமதி. கிறிஸ்து ராஜன் குரூஸ், மரிய செபஸ்ரீனா**

**(சவேரியார்புரம், சிலாவத்துறை)**

**1993.11.24 - 2018.11.24**

**“நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை” (எபி. 13:5)**

இனிய எங்கள் அன்பு நெஞ்சங்கள்,
இறைவன் ஆசியுடன் இணைந்து
இல்லறம், நல்லறமாக கண்டுவிட்ட
இருபத்தைந்து ஆண்டுகளில் - நாங்கள்
இதயம் மகிழ்ந்து, இரு கரம் கூப்பி,
இறைவனுக்கு நன்றி கூறி,
இன்பமுடன் வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

உங்கள் வாழ்வு தனில் வெள்ளிவிழா தாண்டி
பொன்விழா, மணிவிழா, வைரவிழா என
பல விழாக்கள் கண்டு, பல சந்ததி கண்டு,
இன்புற்று, மகிழ்ந்து வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர் :**
குடும்பத்தினர்.

# நீங்காத நினைவுகள்

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
17
05
1958



**உதிர்வு**
28
10
2006

**திரு. ஞானப்பிரகாசம் அமிர்தநாதன் (அமுதன்)**
**(இல: 114, மில்வீதி, வவுனியா)**

**“இறைவா என்னைக்காத்தருளும் உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்” தி.பா.16:1**

சுருங்கிப் போன உலகில்,
சுருக்கமாக, மாண்புள்ள மனிதனாக
வாழ்வை முடித்து - பல
நெஞ்சங்களில் குடிகொண்டு - என்றும்
பூமியில் உங்கள் நாமம் ஒலிக்கச் செய்தீர்கள்.
உங்கள் முகம் காண ஒவ்வொரு
விடியலையும் எதிர்பார்க்கின்றோம் - ஆனால்
நீங்களோ வானதேவர்களுடன் மகிழ்வுடன்
வீற்றிருப்பீர்கள் என நம்புகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,** குடும்பத்தார்

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
10
10
1934



**உதிர்வு**
18
11
2005

**திருமதி. பேதிரு செபமணி அருளம்மா**
**(முருங்கன் கமம், முருங்கன்)**

பூவுலக வாழ்வைத் துறந்து, மறுவுலக வாழ்வைத் தேடிச்சென்ற அம்மா! 13 ஆண்டுகள் உருண்டோடிச் சென்றாலும், உங்களைப் பிரிந்த துயரத்தின் அதிர்வுகள் நெஞ்சின் அலைகளாக, ஓயாது ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. எங்கள் குடும்பத்தின் மூத்த தலைவியாய் இருந்து அன்பையும், பாசத்தையும், அரவணைப்பையும் வழங்கி, அரியபல சேவைகளைச் செய்து, அர்ப்பணிப்புக்கு வரைவிலக்கணமாகத் திகழ்ந்த உங்களை நாங்கள், மறவோம் அம்மா!
உங்கள் ஆன்மா இறைவனின் சந்நிதானத்தில் நித்திய சாந்தி அடைவதாக!

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்புக்கணவன், பாசமுள்ள பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
06
09
1943



**உதிர்வு**
21
11
2017

**திருமதி. அந்தோனியப்பு சந்தாள் (புஸ்பவதி)**
**(வஞ்சியன்குளம், வங்காலை)**

அம்மா.... பண்பு நிறை உம் செயலால்
பார்போற்ற வாழ்ந்து நின்றீர்!
குறைகாணா உம் குணத்தால்
குவலயத்தில் சிறந்து நின்றீர்!
செல்வத்தில் பிறந்த போதும்
ஏழ்மையை அணிந்து நின்றீர்!
புத்திரராம் எமை உயர்த்த
நித்திரையை நீர் மறந்தீர்!
உதிரத்தில் கலந்து விட்ட
உத்தமியாம் உமைப் பிரிந்து
ஓராண்டு பூர்த்தி என்ற உண்மை எமை உலுக்குதம்மா...!

**பிரிவால் நினைந்துருகும்,** மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவுகள்

## 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
24
11
1930



**உதிர்வு**
28
10
2013

**திரு. J.W. றொபேட்**
**(முன்னாள் கிளை முகாமையாளர், பெரியபண்டிவிரிச்சான், மடு.)**

இறைவனில் சங்கமமாகி 5 ஆண்டுகள் மறைந்தாலும் ஐயா! உங்கள் அன்பும், பாசமும், விட்டுச் சென்ற விசுவாச வாழ்வும் என்றும் எம்மை விட்டு அழியாது. உங்களுடைய மலர்ந்த முகமும், வீரத்துவமான இறைவாஞ்சையும் இன்னும் எங்களுக்கு வாழ்வளிக்கின்றன. மண்ணகத்தில் பெயர் அழிந்தாலும், ஆண்டுகள் பல மறைந்தாலும் ஐயா, நீங்கள் என்றும் எங்களோடு இருக்கின்றீர்கள். நீங்களும் மகள் ஜெயந்தியும் புனிதர்களுடன் இணைந்து விட்டீர்கள். என்றும் உங்கள் ஆன்மா இறைவன் சந்நிதியில் இளைப்பாற இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,** அன்பு பாசமுள்ள மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 03ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
08
06
1947



**உதிர்வு**
09
10
2015

**திரு. சவிரி சிறில் மரியநாயகம் (புஸ்பராஜா)**
**(கோவில் வீதி, உயிலங்குளம்)**

**“தந்தை இறந்தோரை எழுப்பி அவர்களை வாழ வைப்பது போல மகனும் நாம் விரும்பியவர்களை வாழவைக்கிறார்” (5யோ.21-22)**

மூன்றாண்டுகள் போனாலும் எமது நெஞ்சை விட்டு அழியாதப்பா உங்கள் முகம். ஏழை எளியவர் மீது நீங்கள் கொண்டிருந்த பரிவு, பாசம் எங்கள் வாழ்க்கையில் பாடமாகி இருக்கின்றது. உங்கள் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 03ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
03
09
1948



**உதிர்வு**
13
11
2015

**திரு. மரியாம்பிள்ளை டோமினிக்**
**சிறிய குருமட முன்னாள் ஆங்கில ஆசிரியர்.**
**(றெயின்போ வீதி, பெற்றா, மன்னார்)**

“ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ.” மூன்று ஆண்டுகள் கடந்தும் அப்பா ஆறாத் துயர் ஆழ்மனதில். வாழ்வு என்னும் பெருங்கொடையால் யாவரையும் வாழ்வித்தீர். மரணம் என்னும் துன்பத்தால் எமைவிட்டு பிரிந்து சென்றீர். ஆசானே! உமது மாணவக் குருக்களை நாம் காணும் போதெல்லாம் எம்மருகே வருகின்றீர். இறப்பினும் வாழ்பவராய் இறைபதம் நின்று இறையருளில் நாம் வாழ இனியவராம் ஆண்டவரை வேண்டுடிடுவீர்.

**பிரிவால் நினைந்துருகும்,** மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.